உ

சிவமயம்

# ஞான வைரவர் தரிசனம்







வெளியீடு:

அருள்மிகு கரியாலை நாகபடுவான் கிழக்கு

**அரசடி ஸ்ரீ ஞானவைரவர் ஆலயம்**

முழங்காவில், பூநகரி

**11.09.2017**

கலாபூசணம், கலைநகரி, ஈழவூர் சைவப்புலவர்

சிவஸ்ரீ கதிர் குமாரசாமி சுமுகலிங்கம் சிவாச்சாரியார் - M.A.JP

திருச்சபை நாயகர், உலக சைவத் திருச்சபை - இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# ஞான பைரவர் தரிசனம்



வெளியீடு:-

**கரியாலை நாகபடுவான் அரசடி**

**அருள்மிகு ஸ்ரீ ஞான பைரவர் ஆலயம்**

பூநகரி


**கலாபூசணம், ஈழவூர் சைவப்புலவர்,**

சிவஸ்ரீ கதிர்குமாரசாமி சுமுகலிங்க சிவாச்சாரியார் M.A.JP

**சைவசமயத் தலைவர்.**

**உலக சைவத் திருச்சபை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

திருவருள் மிகு நாகபடுவான் ஞான வைரவர் ஆலய ஏவிளம்பி வருட அலங்காரப் பெருவிழா சிறப்புற நிகழ்வதை அறிந்து பெருமகிழ்வடைகின்றோம்

ஆலய நிர்வாகத்தினரின் சிவப்பணி போற்றப்பட வேண்டியது

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பாலயம்"

என்ற திருமந்திர மகா வாக்கியத்தை அவர்கள் உறுதி செய்துள்ளனர். ஆதின கர்த்தாக்களின் முயற்சியாண்மையை பாராட்டுகிறேன். "ஞான வைரவர் தரிசனம்" எனும் நூல் சிறப்புற மலர்வது ஞான வைரவரின் திருவருட்கடாட்சம் ஆகும். இவ்வகையில் இந்நூலை ஆக்கிய சிவஸ்ரீ க.சுமுகலிங்க சிவாச்சாரியார், சித்தாந்த பண்டிதர், சைவப்புலவர் அவர்கள் ஞான வைரவர் திருவருள் துணை கொண்டு நிறைவாக்கியமை போற்றுதற்குரிய விடயமாகும்.

உலக வாழ் சைவத்தமிழ் மக்கள் வழிபாட்டுக்கு இந்நூல் பேருதவியாக விளங்கும். எல்லாம் வல்ல பரம்பொருளின் பெரும் புகழை அனைவரும் போற்றி வழிபாடு செய்து பேரின்பப் பெருவாழ்வு பெற வேண்டும் என்று வாழ்த்தி குருபாதம் பணிந்து ஆசி கூறுவதும் அவனருளேயாகும்.

**தவத்திரு ஸ்ரீ கணேசானந்த மகா தேவாசுவாமிகள்**
**பீடாதிபதி - மகாதேவா ஆச்சிரமம்**
**ஜெயந்திநகர்**
**கிளிநொச்சி**
**01.05.2017**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிச் செய்தி

இந்து சமயம் எப்போது தோன்றியது எனச் சொல்ல முடியாத அளவுக்கு மிகப் பழைமையானது அதே வேளையில் இன்றைய மக்களுக்கும் பொருத்தமான நோக்கங்கள் கொள்கைகள் செயற்பாடுகளைக் கொண்டு விளங்குவது மண்ணுலகில் மகிழ்ச்சியும் நிம்மதியும் நிறைந்த வாழ்க்கைக்கு விண்ணுலகில் என்றும் மாறாப் பேரின்ப நிலைக்கு வழிகாட்டுவது என்றுமே நீடித்து நிலைப்பது என்ற சிறப்புக்கள் கொண்டது நமது சமயம் - இந்து சமயம் - சைவசமயம்

அலைபாயும் நம் மனதை அடக்கி எங்கும் நிறைந்த எல்லாம் வல்ல, எல்லாம் அறிந்த முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானை மனக்கண் முன் நிறுத்தி நமது சிந்தனை முழுவதையும் அப்பெருமானுடைய சிறப்புக்களிலும் ஆற்றல்களிலும் குவித்து பிரார்த்தித்துக் கொண்டே இருந்தால் அவனருள் கிடைக்கும். மனதைக் அடக்கி ஒருமுகப்படுத்தி பக்குவ நிலைக்கு படிப்படியாக இட்டுச்செல்வது ஆலய வழிபாடு ஆலயம் என்பது சமுதாய வாழ்க்கையின் குறியீடாக பொருளாதார மையமாக கலை கலாசார விழுமியங்களைப் பேணிப் பாதுகாத்து வளர்த்து அடுத்து வரும் தலைமுறையிடம் கையளிக்கும் நிறுவனமாக உள்ளத்தில் பலத்தையும் பாதுகாப்பையும் பலருக்கு வழங்கும் உயர்நிலையம் ஆக ஆன்ம விடுதலைக்கான பயிற்சிக் களமாக பல்வேறு பரிமாணங்களைக் கொண்டு விளங்குகின்றது.

ஆலயங்களில் கருங்கல்லினாலான விக்கிரகம் சத்தியை விரைவில் ஈர்த்து வைத்திருந்து சிறிது சிறிதாக வெளிவிடும் தன்மையுடையது அதுவே மூலமூர்த்தியாக அமைகிறது. சாஸ்திரங்களும் நீதி நூல்களும் அவரவர்க்கு உரிய கடமைகளை வகுத்து தந்திருக்கின்றன. தமக்குரிய தர்மங்களை ஒவ்வொருவரும் செய்தல் முறையை செய்யாமல் விடுவது பாவம். சிவபெருமானின் 64 திருமேனிகளில் ஒருவரே பைரவர். பைரவரின் வாகனமாக நாய் குறிப்பிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பைரவ விரதம் அனைத்து தேய்பிறை அட்டமி திதிகளிலும் கொண்டாடப்படுகிறது. அதில் செவ்வாய் வரும் அட்டமி சிறப்பு வாய்ந்தது. வைரவ மூர்த்தி விரதத்தை தொடர்ந்து இருபத்தொரு முறை இருப்பது சிறப்பு எனவே மக்கள் வைரவப் பெருமானை பக்தியுடன் வணங்கி அருள்பெற வேண்டும்.

சுதாஸ்கரன் குடும்பத்தினர் தாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம் என்ற பெரு விருப்புடன் தாம் வணங்கி அருள்பெற்ற தெய்வத்தை அவ் ஊர்மக்களும் அருள்பெற வைரவ கோயிலைப் புனரமைத்து வைரவப்பெருமானை பிரதிஸ்டை செய்துள்ளனர். இறை சக்தியை யாவரும் பெற்று மேற்கொண்ட இம் முயற்சி யாவராலும் பாராட்டப்பட வேண்டியது. அத்துடன் அறநெறிப்பாடசாலைகளையும் கட்டுவித்து வளரும் சமூகத்தில் பிள்ளைகளுக்கு சைவ சமய விழுமியங்களையும் ஆன்மிகக் கருத்துக்களையும் விதைப்பது என்பது பாராட்டி வரவேற்கத்தக்கது.

எனவே அவ்வூர் மக்கள் அனைவரது ஒத்துழைப்புடனும் இன்னும் நலன்விரும்பிகளினது வழிகாட்டலுடனும் இந்த அரசடி ஸ்ரீ ஞான வைரவர் ஆலயம். அனைவர் வாழ்விலும் இருளை அகற்றி அறிவூட்டி ஒளி விட்டுப் பிரகாசிக்கும் ஒரு மிகச் சிறந்த ஆலயமாக தொடர எனது நல் ஆசிகள். இந்த அளப்பரிய காரியத்தை நிறைவேற்றி முடித்த திருஞானசம்பந்தர் குடும்பம், சுதாகரன் குடும்பம் மற்றும் அவர் தம் உறவினர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது இதயபூர்வமான வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் வழங்கி எல்லாம் வல்ல பைரவப்பெருமான் அருட்கடாட்சம் அள்ளி வழங்க பணிவுடன் வேண்டுதல் செய்து பிரார்த்திக்கின்றோம்.

நன்றி

**ரஜூலாதேவி வல்லிபுரநாதன்**
**அதிபர்,**
**தாதியக்கல்லூரி,**
**யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிபாலன சபையினரின் ஆசியுரை

எல்லாம் வல்ல சிவபெருமானின் தோற்றமாக ஞானபைரவர் அவதரித்து உலகமெல்லாம் காத்து அடியார்களையும் காத்து வருகின்றார். அந்த ஞானபைரவரை கரியால நாகபடுவானில் பிரதிஸ்டை செய்து அரச மரமும் நாட்டி அரசும் ஞானபைரவரும் வானோங்க வளர்ந்து நிற்கின்றது. காங்கேசன்துறையிலிருந்து இங்கு வருகையில் அமரர் உயர் திரு.வி.திருஞானசம்பந்தர் அவர்கள் காட்டில் காவல் தெய்வமாக நாட்டிய திரிசூலமும், அரசமரமும் இன்னும் அருள்காட்டி வருகின்றது.

அருள் சுரக்கும் அரசடி ஸ்ரீ ஞானபைரவர் புதுமைகள் எண்ணில் அடங்கா பொது மக்களின் ஒத்துழைப்பும் அறநெறிப்பாடசாலை மாணவர்கள் ஊக்கமும் இவ் ஆலயத்தை மேலும் அலய தர்ம கர்த்தாவின் வாரிசுகள் குடும்பத்தினர் என்றும் இறைபக்தியுடன் இவ்வாலயத்தை வளர்த்து வருகின்றார்.

இவ்வேளையில் நாம் பரிபாலன சபையினராக இருந்து இப்புத்தக வெளியீட்டினை நடாத்தி வைப்பதை ஞான பைரவப்பெருமானின் அருளாக எண்ணுகின்றோம்.

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

*"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்"*
*"ஆலயம் தொழுவது சாலவும் நன்று"*

போன்ற வாசகங்களுக்கு ஏற்ப இலங்கையின் வடமாகாணத்தின் கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கரியாலை நாகபடுவான் ஆலயத்தில் ஸ்ரீ ஞானபைரவ மூர்த்தியாக இறைவன் எழுந்தருளியிருந்து அருள்பாலிப்பது சைவப்பெருமக்கள் செய்த பெரும் புண்ணியமேயாகும். எமது இலங்கைத் திருநாட்டில் அந்நியர்களான போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் போன்றவர்கள் ஆட்சி செய்த 400 வருடங்களிற்கு மேற்பட்ட காலப்பகுதியில் இந்து அலயங்கள் இடிக்கப்பட்டு வழிபாடுகள் மறுக்கப்பட்ட காலத்தில் எமது சமயத்தின் அனைத்து தெய்வங்களையும் திரிசூலத்தில் மறைத்து வைத்து வழிபட்டு வந்தவர்கள் எமது முன்னோர்களாவார்.

வடமாகாணத்தில் எத்தனையோ ஆலயங்கள் காணப்பட்டாலும் அதன் வரலாறுகளை முழுமையாக அறிய முடியாத நிலையே இன்று காணப்படுகின்றது. எமது சமயத்தின் வரலாறுகளை ஆவணப்படுத்த வேண்டியது இன்றைய காலத்தின் கட்டாய தேவையாக உள்ளது. இதனையொட்டியே ஞானவைரவர் தரிசனம் எனும் நூல் வெளிவருவதையறிந்து மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். எந்த ஒரு கோயிலிலும் வைரவர் மூர்த்தம் என்பது காணக்கூடியதாகவே இருக்கும். இவர் எமது பாரம்பரியங்கள் மரபுகளைக் காப்பவராகவும் கிராமத்தின் காவலராகவும் விளங்குவது இவ் வழிபாட்டின் தனிச்சிறப்பேயாகும்.

வைரவர் வழிபாடு சிவசக்தியுடன் அமையப்பெற்றுள்ளமை மேலும் சிறப்பிற்குரியது. எனவே இவ் உயரிய தத்துவத்தையும் காலத்தின் தேவையினையும் அறிந்து ஆலய சமூகத்தவர்களுடன் கலாபூசணம் கலைநகரி ஈழவூர் சைவப்புலவர் **கதிர்குமாரசாமி சுமுகலிங்கம் சிவாச்சாரியார்** M.A.J.P அவர்களின் வெளியீடாக வெளிவரும் இம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர் வைரவப்பெருமானின் பல்வேறு சிறப்புக்களையும் வெளிப்படுத்துவதோடு அடியவர்கள் ஒவ்வொருவரும் தமது ஆலய வழிபாட்டின் மூலம் மேன்னிலை அடைய உதவுகின்ற வகையிலே அமையப்பெற்றுள்ளது. இதனை இறை அடியவர்கள் அனைவரும் பெற்று இறைவழிபாட்டை மேற்கொண்டு பேரின்ப பெருவாழ்வு வாழ வாழ்த்துவதோடு நூலாசிரியரின் மகத்தான பணி மேலும் உயர்வடைய எல்லாம் வல்ல இறை ஆசியை வேண்டி வாழ்த்தி வணங்கி அமைகின்றேன்.

சுபம்

**மிருசுவிலூர் இளஞ்சைவப்புலவர், சைவ சின்மயர்,**
**சிவதொண்டன், சிவஞானப்பிரியன்,**
**கமலநாதன் கயிலைவாசன்** B.A)HONS)
**அபிவிருத்தி உத்தியோகத்தர்,**
**தொல்லியல் திணைக்களம்,**
**யாழ்ப்பாணம்,**
**இலங்கை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தசுவாமி ஆலய பரிபாலனசபைச் செயலாளரின் வாழ்த்துச் செய்தி

அமைதியினை இழந்த மனிதனது வாழ்வில் அமைதியினையும், புனிதமான எண்ணங்களையும் உருவாக்கி உள்ளத்தில் தூய்மையினையும், மனதில் தெளிவினையும், ஏற்படுத்தி மனிதப் பண்புகளையும், ஒழுக்க விழுமியங்களையும் வளர்த்து மனிதனை முழுமனிதனாக வாழ வழிகாட்டுவது இறைவழிபாடாகும்.

இவ்வாறான இறை வழிபாடுகளை மேற்கொள்ள ஏற்ற இடமாக விளங்குவது ஆலயங்களாகும். இதனாலேயே அன்று அரசர்களும் பின்வந்தோரும் ஆலயங்களை அமைத்து வழிபட்டனர். "கோயில் இல்லாத ஊரில் குடியிருக்கலாகாது." என்பதற்கிணங்க தமிழர்களின் வாழ்வில் ஆலயங்கள் பிரதானமானதாக இருந்து வருகின்றது.

அந்த வகையில் வற்றாத நீர்வளமும், செல்வம் கொழிக்கும் நிலவளமும், தென்னஞ்சோலைகளுமாக காட்சியளிக்கும் கிளிநொச்சி மாவட்டத்தில் தொன்மையும், வரலாற்றுச் சிறப்பம்சங்களையும், பாரம்பரியங்களையும் கொண்ட பூநகரிப் பிரதேசமதில் வீற்றிருந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கும் பைரவர் ஆலயத்தினரால் வெளியிடப்படுகின்ற சிறப்பு மலருக்கு நானும் வாழ்த்துரை வழங்குவதற்கு சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

இவ்வாலயமும், இவ்வாலயத்தில் இடம் பெறுகின்ற வழிபாட்டு முறைகளும், விழாக்களும் ஏனைய நிகழ்வுகளும் அவ்வூர் மக்களிடையே ஒற்றுமையினையும், ஒழுக்க விழுமியங்களையும், நம்பிக்கையினையும் வளர்பனவாக அமைந்து வருகின்றமை பாராட்டுதற்குரிய சிறப்பம்சங்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாலயத்தின் வளர்ச்சிக்கும் சிறப்பிற்கும் அயராது உழைத்த அனைத்துத் தரப்பினருக்கும் எனது பாராட்டுதல்களையும் நன்றிகளையும் தெரிவித்துக்கொள்வதுடன் மக்கள் அனைவரது வாழ்விலும் இருள் விலகி ஒளிபெற்று அனைவரும் சுபீட்சமுடனும் சகல சௌபாக்கியங்களுடனும் வாழ எல்லாம் வல்ல பைரவப்பெருமானை பிரார்த்திக்கின்றேன்.

நன்றி

**திரு.எஸ். செல்வரத்தினம்**
**செயலாளர்**
**பரிபாலன சபை**
**கந்தசுவாமி தேவஸ்தானம்**
**கிளிநொச்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துச் செய்தி

கிளிநொச்சி மாவட்டம் நெல்மணிக்கு புகழ் பூத்த பூநகரி மண்ணிலே தொல்குடியாக விளங்கும் நாகபடுவான் பதியிலே வீற்றிருந்து அருட்கடாட்சத்தினை அள்ளி வழங்கும் அரசடி ஸ்ரீஞான பைரவர் ஆலயத்தில் வெளியிடப்படும் **"ஞான வைரவர் தரிசனம்"** சிறப்பு மலருக்கு நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமிதமடைகின்றேன்.

ஏறக்குறைய நூறு ஆண்டுகால பழைமை வாய்ந்த இவ்வாலயமானது சைவ சமய பண்பாட்டு விழுமியங்களை அறநெறிக் கல்வியினூடாக இப்பகுதி மாணவர்களையும் மக்களையும் வழிப்படுத்தி வருகின்ற பெருமைக்குரியது.

அருள்மிகு அரசடி ஸ்ரீஞான பைரவர் ஆலயம் சிறப்படைகின்ற போதுதான் ஊர்மக்களின் வாழ்வு வளம் கொழிக்கின்றது. தெய்வீகம் நிலவாத வீடு காரிருள் சூழ்ந்த கல்லறைகள்தான் அங்கு நிம்மதி சந்தோசம் கிடைப்பதில்லை

இப்பகுதியில் வாழ் மக்களின் உணர்வலைகள் மிளிரவும், இந்நூல் புனிதப்பிறவியாகிய மனிதப்பிறவி அனைவரும் வாசித்து பயன்பெறவும் எல்லாம் வல்ல பைரவப் பெருமானை பிரார்த்தித்து அக மகிழ்வு அடைகின்றேன்.

**திரு. திருமதி கிரிஜா பத்மராஜ்**
**பிரதேச செயலகம்**
**பூநகரி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



பூநகரிப் பிரதேசத்தின் மருத நிலப்பரப்பில் தொன்மை மிகுந்த பூமியாகிய கரியாலை நாகபடுவான் பதியில் வீற்றிருக்கும் ஸ்ரீ அரசடி ஞானபைரவர் ஆலயத்தின் **"ஞான பைரவர் தரிசனம்"** எனும் மலரிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

ஆன்ம ஈடேற்றத்தினை அடைவதற்காக ஆலயங்களின் வழிபாட்டு முறைமை வளர்ச்சி பெற்று வந்த நிலையில் ஆலய கலைகளைப் பேணுவதிலும் பண்பாட்டு விழுமியங்களைப் பாதுகாப்பதிலும் ஆலயங்களின் வகிபங்கு மிக அவசியமானது. எனவே சமுதாய நன்மைக்கும் வளர்ச்சிக்கும் இவ்வாலயம் நன்மைகளை வழங்கும் என நம்புகின்றேன்.

மேலும் "பைரவ வழிபாடு" எனும் நாட்டார் வழிபாட்டு முறை மிகப்பழமையானது. இந்நிலையில் வரலாற்று தொன்மையும் அதன் முக்கியத்துவத்தையும் காட்டும் இந்நூல் வெளியிட முயன்ற ஆலய நிர்வாகத்தினரையும் பாராட்டுவதில் பேருவகையடைகின்றேன். மேலும் பல அறநெறி நூல்களை இவ்வாலயம் வெளிக்கொணர்ந்து நற்சமுதாயத்தினை உருவாக்க வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்தித்து அகமகிழ்வடைகின்றேன்.

**சி.ச. கிருஷ்ணேந்திரன்,**
**பிரதேச செயலர்,**
**பிரதேச செயலகம்,**
**பூநகரி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சமர்ப்பணம்



ஞான வைரவர் ஆலய ஆதினகர்த்தா காங்கேசன் துறையூர் சிவப்பேறு எய்திய விநாயகமூர்த்தி திருஞானசம்பந்தர் ஆவார்.

திருஞானசம்பந்தருடன் இணைந்து இவ்வாலய வளர்ச்சியில் தன்னை முழுமையாக அர்ப்பணித்து சிவத்தொண்டாற்றிய சிவனடியான் சிவபதமடைந்த செ.பரராஜசிங்கம் ஆவார். இவர்களின் புண்ணிய ஆத்மா திருக்கைலாயன் பாதக்கமலங்கள் சென்றடைய பிரார்த்தனை செய்து அவர்கள் பெயரால் "ஞான வைரவ தரிசனம்" என்னும் சைவர்களின் வழிபாட்டு நூலை ஞான வைரவர் பாதக்கமலங்களுக்கு சமர்ப்பணம் செய்கின்றோம்.

**ஆலய பரிபாலன சபையினர்,**
**அடியார்கள்,**
**உபயகாரர்கள்,**
**விநாயகமூர்த்தி திருஞானசம்பந்தர் குடும்பத்தவர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நற்சான்றுரை



நல்ல சொற்பொருள் நாளும் நடாத்தவும், எல்லை காணவும், பேரின்ப மெய்தவும், வெல்லும் யானை முகத்தனை வாழுத்தி வாழ்த்துவாம்.

விநாயகப் பெருமான் தடைகள் நீங்கும் போது விக்கினேஸ்வரன் என்றும் மூர்த்தமாக விளங்குவார். அவ்வகை அவர்பாதம் பணிந்து நூலுருப் பெறும் "ஞான வைரவ தரிசனம்" மலர விநாயகப் பெருமானைப் போற்றித் துதி செய்கின்றேன்.

ஆலய ஆதினகர்த்தா சம்பந்தர் ஐயா அவர்கள் சிவப்பணி. அவரின் குடும்பத்தினர் உணர்வு, திருப்பணி, சமூகப்பணி, இறைபணி, அறப்பணி எனப் பெருநோக்கு திருவருள் துணை நின்ற தோற்றப்பாடேயாம். அவ்வகை சார்ந்த அனைவருக்கும் "தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதோ" என்ற ஒளவையார் வாக்குக்கு அமைய பெருமையுடையவர்கள் தொண்டர்களே. இப்பணியில் இவ்வாலய அனைத்துப் பணிகளிலும். ஈடுபடும் தொண்டர்கள், அறநெறி ஆசிரியர்கள் மாணவர்கள், பெற்றோர்கள் நலன் விரும்பிகள், ஆசியுரைகள், வாழ்த்துரைகள் தந்து உதவியவர்கள் இந்நூல் தெய்வ மணம் கமலும் நூலாக மலர ஒத்துழைத்த ஆலய சேவா சங்க அனைத்து உறுப்பினர்களுக்கும், உபயகாரர்களுக்கும், சிவன் கழலே சேரும் வண்ணமாகச் சிவனடியெய்திய செ.பரராஜசிங்கம் பெருந்தொண்டர் குடும்பத்தினருக்கும் இப் பெருவிழாவில் நூல் அரங்கேற்றிய சிவாச்சாரியார்களுக்கும், என்னுடன் பூரணமாக ஒத்துழைத்த அனைவருக்கும் ஞான வைரவர் திருவருள் கைகூட வேண்டும் எனப் பிராரத்தித்து நன்றி கூறி நற்சான்றுரைப்பதில் அகமகிழ்வடைகிறேன்.

"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம்"

**(தலைவர்)**
**திரு.நல்லதம்பி குகனேஸ்வரன்**
**ஞான வைரவர் ஆலயம், நாகபடுவான்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

சிவபூமி எனத் திருமூலநாயனார் திருவாய் மலர்ந்த பூமி இலங்கை மணித்திரு நாடு. வீரசைவ மரபில் சிவபெருமான் மீது எண்ணிறந்த சிவபக்தனாகத் திகழ்ந்தவன் இராவணேஸ்வரன். சிவவழிபாடு சைவ சமயத்தவர்களின் வாழ்வியல் நெறியின், அடி நாதமாக விளங்கி வருவது உண்மைத் தெளிவின் மேம்பாடாகும்.

அன்னியர் படை எடுப்பு சிவ வழிபாட்டை அழிக்க வழி செய்தது. சிவனின் கைத்தோன்றும் திரிசூலம் சிவனின் அடையளமாக வைத்து வழிபாடு செய்து வந்தனர். இவ்வழிபாடு குலதெய்வ வழிபாடாக மாறியது. வைரவரின் தோற்றம், ஆடல், வீரம் என்பன சைவசமய சமயத்தவர்ர்கள் தெரிய வழி வகுத்தவர் பிரம்மா எனும் படைத்தற் தொழில் செய்யும் மூர்த்தமேயாகும்.

காங்கேசன்துறையூர் விநாயகமூர்த்தி திருஞானசம்பந்தர் பரம்பரையினர் ஞான வைரவப் பெருமானை குல தெய்வமாகக் கொண்டு, சிறப்புறச் சைவவாழ்வு வாழ்ந்து வந்தனர். தாம் செல்லுமிடமெல்லாம் வைரவர் துணையென்ற மன நம்பிக்கை, வீண்போகாது பாதுகாத்த வைரவப் பெருமானுக்கு நாகபடுவானில் கோயில் அமைத்து வழிபாடு செய்து, சைவ மக்கள் சைவர்களாக வாழ வேண்டும் என்ற எண்ணம் இன்று ஆலயம் உங்கள் கண்முன் காட்சி தருவதற்கு அடிப்படையாக அமைந்தவை தனிச்சிறப்பம்சமாகும்.

இவை வரலாற்றுப் பொக்கிஷங்களாக அமைகின்றன. மக்களின் வாழ்வியல் நெறியை நூல் வடிவாக்கி வெளியீடு செய்யும் அரிய பணியையும் மேற்கொள்ளும் திருஞான சம்பந்தர் குடும்பத்தினர் செய்யும் மாபெரும் சமய, சமூக பண்பாட்டுப் பணியாகும். இவர்களின் பணி சிறக்க ஞான வைரவப் பெருமான் பெயரால் "ஞான வைரவ தரிசனம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் நூல் மலர்கின்றமை சைவ சமய மக்களின் வளர்ச்சிப் பாதையில் அடையாளச் சின்னமாக அமைகின்ற, ஆலய வரலாற்றின் தனிச் சிறப்பம்சமாகும். இந்நூல் உருப்பெறுவதற்கு அர்ப்பணிப்புடன் பணியாற்றும் அனைத்து உள்ளங்களுக்கும் அதனைப் பயன்படுத்தும் அடியார்கள் அனைவருக்கும் பெருவாழ்வு வாழ ஞான வைரவர் அருள் புரிவராக! எனப் பிரார்த்தனை செய்து "ஞான வைரவ தரிசனம்" ஞான வைரவர் பாதார விந்தங்களில் சமர்ப்பணம் செய்கின்றேன்.

**ஈழவூர் சைவப்புலவர்,**
**சிவஸ்ரீ.கதிர்குமாரசாமி சுமுகலிங்கம் சிவாச்சரியார்** M.A.J.P
**அருள்மிகு வேரவில் வெள்ளிப்பள்ளத்து வீரகத்திப்பிள்ளையார் தேவஸ்தானம், பிரதம குருக்கள்,**
**"சைவசமயத் தலைவர்"**
**உலக சைவத்திருச்சபை - இலங்கை,**
**சைவசமயப் பிரசாரகர்**
**அகில இலங்கை சைவப் புலவர் சங்கம்**

**குறிப்பு:**

**வைரவப் பெருமான் என்பதற்கு சிறப்பான பெயர் வழக்காக பைரவர் என்பதனை மூல நூல்களின் ஊடாக அறியமுடிகின்றது.**

**ஒப்புநோக்கி உதவிய கமலநாதன் கயிலைவாசன் அவர்களுக்கு என்றென்றும் நன்றியுடையேன். வைரவப்பெருமானின் திருவருள் கிடைக்க பிரார்த்திக்கின்றேன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய வரலாறு

நாற்றிசையும் சமுத்திரத்தால் சூழப்பட்டு இந்து சமுத்திரத்தின் முத்து என வர்ணிக்கப்படும் இலங்கையின் வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களில் கிளிநொச்சி மாவட்டம் பூநகரி என்னும் ஓர் ஊர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு. இம் மாவட்டத்தை சேர்ந்தவர்கள் பெரும்பாலும் வேளாண்மையைத் தொழிலாகக் கொண்டுள்ளனர். அதில் அடங்குவது தான் கரியாலை நாகபடுவான் முழங்காவில் என்னும் சிற்றூர். இங்கு எம்பெருமான் அரசடி ஸ்ரீ ஞான வைரவராக வீற்றிருந்து அருள் பாலித்துக்கொண்டிருக்கிறார்.

இலங்கை திருநாட்டில் கடல் வளம், திருத்தலங்கள் எனப் பல்வேறு வளங்களையும் கொண்டு விளங்கும் சரித்திர பிரசித்தி வாய்ந்தபதிகளுள் ஒன்றான காங்கேசன்துறையில் வசிப்பிடத்தை அமைத்துக் கொண்ட திரு.திருஞானசம்பந்தர் அவர் தம் துணைவியார் திருமதி தி.மங்கையற்கரசி அவர்கள் இருவரும் தமது தாயாரின் பரம்பரைக்குரிய பைரவப்பெருமானை பெருநம்பிக்கையுடனும், பக்தியுடனும் வழிபட்டு வந்தனர்.

இவர்கள் விவசாயம் செய்யும் நோக்குடன் அரசாங்கத்தில் காணிக்கு விண்ணப்பித்து 1971ம் ஆண்டு அதனைப் பெற்றுக்கொள்ளச் செல்லும் போது தாம் வணங்கும் பைரவப்பெருமான் கோவிலுக்குச் சென்று தமக்கு நல்ல காணியாக கிடைத்து தாம் செய்யும் காரியம் நிறைவேற பைரவப்பெருமான் அருள் புரிய வேண்டி நேர்த்தி வைத்து நம்பிக்கையுடன் சென்றனர். அவ்வாறு இறையருளால் நல்ல மேட்டுக்காணி கரியாலை நாகபடுவான் முழங்காவில் கிராமத்தில் கிடைத்தது. அங்கு காணி துப்பரவாக்கி குடியேறச் செல்கையில் தாம் வணங்கி வந்த பைரவப்பெருமானையும் தம்முடனே கொண்டு சென்று அங்கு தம் காணியில் ஒரு சிறு குடில் அமைத்து வைத்து வழிபடத் தொடங்கினார். அவ் வைரவர் அவர்களுக்கு பெரு நம்பிக்கைக்குரிய காவல் தெய்வமாக விற்றிருந்து அவர்களுக்கு அருள்பாலித்துக் கொண்டிருந்தார். அன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொட்டு அயலவர்களும் இந்த தெய்வத்தை பொங்கல் பூசைகள் செய்து வழிபட்டு எம்பெருமான் அருளை பெற்றுவந்தனர்.

ஒரு சமயம் பொதுமக்கள் இப் பாரிய காவல் தெய்வத்தை அவர்களது காணியுள் மட்டும் சொந்தமாக வைக்காது ஒரு பொது இடத்தில் வைத்து சகலரையும் வழிபடச் செய்யுமாறு வேண்டிக்கொண்டனர். அவர்களது வேண்டுகோளை ஏற்று 1971ம் ஆண்டு அவர்களது வீட்டின் முன்புறமாக உள்ள ஒரு பொது இடத்தில் ஆலயம் அமைத்து அதில் பைரவரை பிரதிஸ்டை செய்து எல்லோரும் வழிபட்டு வந்தனர்.

அதே காலப்பகுதியில் திருமதி மங்கயர்க்கரசியின் மூத்த சகோதரி திருமதி உருக்குமணி வல்லிபுரநாதன் காங்கேசன்துறை வீட்டுக் கிணற்றுத் தொட்டி ஓரமாக முளைத்த அரசமரக்கன்று ஒன்றைக்கண்டு அதனை எடுத்து வந்து இந்த பைரவர் ஆலயத்து வளவினுள் பக்கமாக நாட்டினார். இதற்கு உறவினரான காலம் சென்ற விநாயகமூர்த்தி, தங்கரத்தினம் என்பவர்கள் தண்ணீர் ஊற்றி வர நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக அரசமரம் பெருவிருட்சமாக வளர்ந்து வந்ததுடன் பைரவரும் வளர்ந்து அருள்பாலித்துக்கொண்டிருந்தார். அக்காலத்து J.P யாக இருந்த திரு.சி.பாலச்சந்திரன் கிராமசேவையாளர் உதவியோடு உதவி அரசாங்க அதிபருக்கு மனுச்செய்து ஆலயத்துக்கென காணியை ஒதுக்கி வழி செய்தனர். மக்கள் வழிபாட்டுக்கு அச்சிறு ஆலயம் போதாமையினால் அக்காலம் இலங்கைக்கு பொருளாதார தடை இருந்த போதும் திருஞானசம்பந்தர் குடும்பத்தினரால் சீமெந்துக்கு பதிலாக சுண்ணாம்பு சக்கரை, பனிச்சங்காய்சாறு சேர்த்து அழகிய ஓர் ஆலயம் அமைக்கப்பட்டது.

பின்னர் நாட்டில் பரவலாக நடந்த அசம்பாவிதம், பாதுகாப்பு காரணங்களுக்காக திருஞானசம்பந்தரின் பிள்ளைகள் இடம்பெயர்ந்து வெளிநாடு செல்ல நேர்ந்தது. இவ் ஆலயம் சிதைவடைந்ததை படம் எடுத்து மகன் தி.சுதாகரனுக்கு - (லண்டன்) அனுப்பி வைத்தனர். திரு.திருஞானசம்பந்தரின் பிள்ளைகள் தாம் வழிபட்டு வாழ்ந்து வந்த இடத்து தெய்வம் சிதைவடைய விடக்கூடாது குடியிருக்க மக்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கோயில் வேண்டும். (கோயில் இல்லா ஊரிற் குடி இருக்க வேண்டாம்) என்ற நல்ல நோக்கத்துடன் கோவிலை திருத்தி அமைத்து மூலஸ்தானம் பாட்டு கருங்கல்லிலான சிலை அமைத்து ஓர் அழகிய கோவிலாக உருவாக்கம் பெற வழிகோலினர். இதற்கு திரு.செல்லையா நடராஜா, திரு.பரராஜசிங்கம் திருமதி.ப.பராசக்தி அவர்கள் முன்நின்று உழைத்தனர். கரைச்சி புளியம்பொக்கணை ஆலய குருக்கள் சிவலோகநாதன் இராமநாதபுரம் வயலூர் முருகன் ஆலய குருக்கள் அமிர்த ஸ்ரீ அமத்திரி அவர்கள் உதவியுடன் பஸ்மம் இடல் நிறைவேறியதைத் தொடர்ந்து நேர்த்தியாக அராலியூர் இராசன் (கட்டடக் கலைஞர்) வைரவ சுவாமி சிலையை அமைத்து அழகிய கோயிலாக உருவம் பெற்றது. 2011ம் ஆண்டு கட்டட வேலைகள் பூர்த்தியடைந்து இந்து கலாச்சார உத்தியோகத்தர், அரசாங்க அதிபர், பிரதம அதிதிகளாக கலந்து சிறப்பித்து ஆலயத்தினை திறந்து வைத்தனர்.

பைரவப்பெருமான் அருளால் 2011 தைத்திங்கள் 21ம் நாள் (10.02.2011) வியாழக்கிழமை பரணி நட்சத்திரம் மேஷ ராசி மீனலக்கினம் சித்த யோகம் கூடிய காலை 8.04 நிமிடத்தில் இரந்து 9.34 வரையுள்ள சுப முகூர்த்த வேளையில் நூதனப் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் இனிதே நிறைவேறியது. அத்துடன் சுதாஸ்கரன் குடும்பத்தினர் அவ்வூர்ப் பிள்ளைகள் சிறந்த சமயப் பற்றுள்ளவர்களாக ஆன்மீக அறிவு பெற்று சைவ சமயிகளாக வாழ விழாவிற்கு இந்து கலாச்சார உத்தியோகத்தர், அரசாங்க அதிபர், கிராம சேவையாளர் ஜே.பி திரு.சண்முகநாதன் பிரதம அதிதிகளாக அழைக்கப்பட்டனர். இதற்கு திரு.செல்லையா நடராஜா குகனேஸ்வரன் மற்றும் நலன் விரும்பிகள் வழிகாட்டினர்.

மங்களகரமான விஷ வருஷம் சித்திரைத்திங்கள் 9ம் நாள் (22.04.2013)ம் ஆண்டு திங்கட் கிழமையும் ஏகாதசி திதியும் பூரட்டாதி நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய பகல் 12.01-1.31 நிமிடம் வரையுள்ள தெய்வேந்திர முகூர்த்தத்தில் புதிதாக அமைக்கப்பட்ட அறநெறிப்பாடசாலை மண்டபம் திறப்பு விழா நடைபெற அரசடி ஸ்ரீ ஞான பைரவர் திருவருள் பாலித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்தும் ஆலய வளர்ச்சிக்கும் அருட்பக்திக்குமாக மிகவும் அழகிய ஒரு வசந்த மண்டபமும் அமைக்கப்பட்டு 20.02.2014ம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது. இதில் சிற்பாச்சாரியாக கனகரட்ணம் அவர்கள் பணிபுரிந்தார். இதனைப் பொறுப்பாக குகனேஸ்வரன் அவர்கள் கவனித்துக் கொண்டனர். இவ் வசந்த மண்டபம் கட்டுவதற்கு இந்து கலாச்சார அமைப்பும் சிறு தொகைப்பணம் ரூபா இரண்டு லட்சம் தந்துதவியது. மீதியை சுதாஸ்கரனே வழங்கி பூர்த்தி செய்தார்.

முதன் முதல் கும்பாபிஷேக தினம் சிறப்பான பூசைகள், பொங்கல் அன்னதானத்துடன் அவ்வூர் மக்கள், அயலூர் மக்கள் என கூட்டம் பெருகி எம்பெருமான் திருவருளைப்பெற வருகின்றனர். இக் கோவிலையும், சுற்றாடலையும் துப்பரவாகப் பேணுவதில் திருமதி ஜெயந்தாவும் அவரது தாயார், பிள்ளைகள் அருகிருந்து உதவுகின்றனர். நித்திய பூஜை சிறப்பாக நடைபெறுகிறது. எம்பெருமான் அருளால் அவன் தாள் வணங்கி நல்லருள் நாடெங்கும் பரவும் வண்ணம் அயலவரும் திருத்தொண்டாற்றி வருகின்றனர்

## பைரவர் மூர்த்தம்

### பைரவர் தோற்றம்

அறுபத்து நான்கு சிவ மூர்த்தங்களுள் இருபத்தைந்து சிவ மூர்த்தங்கள் சிறப்பாகக் கொள்ளப்படுகின்றது. அவற்றுள் பைரவ மூர்த்தமும் ஒன்றாகும். பைரவ மூர்த்தம் தோன்றிய வரலாறு பற்றிய ஆகமங்களிலும் புராணங்களிலும் பல்வேறு கருத்துக்கள் காணப்படுகின்றன. இருப்பினும் ஐந்து சிரசுகளையுடைய பிரமனின் ஆணவத்தை அடக்கும் பொருட்டு, சிவனின் அம்சமாகத் தோன்றியவரே பைரவர் என்ற கருத்தே முக்கியத்துவம் உடையதாக விளங்குகின்றது.

முன்னொரு காலத்தில் முனிவர்கள் பிரமனிடம் "உலகில் வாழும் உயிர்களுக்கு இறவாப் பெருவாழ்வை அளிக்கவல்ல முழுமுதற் கடவுள் யார்? என வினாவினார் ஆணவத்தின் வயப்பட்ட பிரமன் உலகில் உயிர்களைப் படைக்கும் நானே சர்வவல்லமை பொருந்திய ஊழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல்வன் என்று கூறினார். திருமால் ஆணவத்தை விடுமாறு அறிவுரை கூறினார். பிரமன் அதற்குச் செவி சாய்க்கவில்லை. சிவபெருமானே நேரில் தோன்றிய போதும் பிரமனின் அகந்தை அகன்றபாடில்லை. பிரமனின் அகந்தையை அடக்கும் பொருட்டு சிவன் தனது சோதி வடிவத்தினுள்ளே பார்வதியின் வடிவத்தைக் காட்டினார்.மேலும் கோபம் கொண்ட சிவன் தனது இதயத்தில் இருந்து கோப அக்கினியை பைரவ மூர்த்தியாக தோற்றுவித்தார். சிவ அம்சமாகத் தோன்றிய இம் மூர்த்தி அகோரவடிவத்துடன் பல்வேறு ஆயுதங்களை ஏந்திய வண்ணமும், நிர்வாணக் கோலமாகவும் அச்சம் தரும் தோற்றத்தோடு ஆவேசமாக ஆணவ மயமாக விளங்கிய பிரமனின் ஐந்தாவது சிரசினை தனது நகத்தால் கொய்து அவரது அகந்தையை அடக்கினார். பிரமனின் தலை கொய்தவுடன் பைரவருக்கு பிரமஹத்தி தோசம் பிடித்தமையினால் பிரமனில் கொய்யப்பட்ட தலை, பைரவரின் விரலை விட்டு அகலாமல் அவ்விரலிலேயே ஒட்டிக் கொண்டது. அவ்வாறான நிலையில் அன்னை அன்னபூரணியின் அருளால் அத்தலையை அகற்றிவிட்டு அவ்வூரிலேயே காவல் தெய்வமாக எழுந்தருளினார்.

பைரவர் நீல நிற மேனியும், சிலம்பொலிக்கும் திருவடியும், பாம்புகளுடன் கூடிய திருவரையும் தலை தாலைகள் புரளும் திருமார்பும், சர்ப்பப்புணுலும் பிறையுடன் கூடிய நீண்ட சடாமுடியும் சூலம்,பழு,பாசம், தீச்சுடர், கபாலம்,உடுக்கு, ஆகியவற்றை ஏந்திய திருச்சக்கரமும் அச்சம் தரும் மூன்று கண்களும், பெரிய இரு கோரைப் பற்களும், கோபக்கனல் கொந்தளிக்கும் முகத்தில் அச்சந்தரும் சிரிப்பும் உடையவராக நாய் வாகனத்தின் மீது எழுந்தருளிக் காட்சியளிப்பார். உலகில் நோய் பிணி ஏற்படாமல் பக்தர்களுக்கு அருள்புரியும் காவற்தெய்வமாக இவரை வழிபடுகின்றனர் சகல விதத்திலும் பக்தர்களுக்கு அருள் பாலிக்கும் பைரவப் பெருமானை அனைவரும் வழிபட்டு இஷ்ட சித்திகளைப் பெறுவோமாக.

**பரமனை மதித்திடாப் பங்கயாசனன்**
**ஒருதலை கிள்ளியே யொழித்த வானவர்**
**குருதியு மகந்தையுங் கொண்டு தண்டமும்**
**புரிதரு வடுகனை போற்றி செய்குவாம்.**

**வணக்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்மிகு பைரவர் சுவாமி அறிமுகம்

வைரவர் என்பது வடமொழிச் சொல்லாகும். இதற்கு மிகவும் பயங்கரமானவர் என்பது பொருளாகும். எதிரிகளுக்குப் பயம் தந்து தன்னை அண்டியவர்களுக்கு அருள் செய்வதால் இவருக்கு வைரவர் (பைரவர்) என்பது பெயராயிற்று.

"பை" என்பது உலகில் உயிர்களைத் தோற்றுவிக்கும் படைப்புத் தொழிலையும்,"ர" என்பது தோன்றிய உயிர்களைக் காப்பதையும், "வ" என்பது வாழ்ந்து முதிர்ந்த உயிர்களைத் தன்னுள் ஒடுக்கிக் கொள்வதையும் குறிக்கின்றன. படைத்தல், காத்தல், அழித்தல் எனும் முத்தொழில்களையும் செய்வதால் இவர்"பைரவர்"' என்று அழைக்கப்படுகிறார்.

வைரவர் எனும் சிவர் சிவனது அம்சம் என்று சொல்லப்படுகிறது. வைரவர் என்றாலே பயத்தை நீக்குபவர், அடியார்களின் பாவத்தை நீக்குபவர் என்றும் பொருள் கூறப்படுகிறது. படைத்தல், காத்தல், அழித்தல், அதாவது ஒடுக்குதல் ஆகிய முக்கிய இறையருள் தொழில்களைச் செய்து பல லட்ச உயிர்களையும் காப்பதால் அவருக்குத் திரிசூலம் அதிகார ஆயுதமாக அளிக்கப்பட்டது.

படைத்தல் தொழிலை உடுக்கையும், காத்தல் தொழிலை கையில் உள்ள கபாலமும், அழித்தல் தொழிலை உடலில் பூசிய விபூதியும் குறிக்கும். இந்தக் கடவுளே ஆனந்த பைரவராக உலகைக் காக்கின்றார். பின்னர் காலாக்கினி வைரவராக உலகைப் படைக்கின்றார். அதன் பின்னர் காலாக்கினி வைரவராக பிரளய காலத்தில் ஒடுக்க வருகின்றார். இவருக்குத் தகுந்த பூசைகள் செய்வதால் மட்டுமே திருப்தியடைந்து நம்மை இடுக்கண்களிலிருந்து காப்பாற்றுவார் என்றில்லை. எந்தவித பூசைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யாவிட்டாலும் கூட இக்கட்டான நேரத்தில் முழுமனதுடன் அவரை நினைத்தாலே கூட போதும் சந்தோஷத்துடன் உடனே செயல்பட்டு நம்மை ஆபத்துகளிலிருந்து காப்பாற்றுவார்.

## வைரவரின் வடிவமைப்பு

வைரவர் நீலநிற மேனியராய், சிலம்பொலிக்கும் திருவடிகளை உடையவராய், பாம்புகள் பொருந்திய திரு அரையும் தலைமாலைகள் புரளும் திருமார்பும், சூலம், மழு, பாசம், உடுக்கை இவைகள். ஏந்திய திருக்கரங்களையும், சிவபெருமான் போன்றே மூன்று கண்களையும் பெரியதான இரண்டு கோரப்பற்களை உடையவராய், செஞ்சடை உடையவராய், கோபச்சிரிப்பும், உக்கிர வடிவமும் உடையவராய் காட்சியளிப்பார் என்று புராணங்கள் வைரவரின் தோற்றத்தைக் கூறுகின்றன.

உடற்பற்றை நீக்கியபடியால் வைரவர் நிர்வாண கோலத்துடன் காட்சியளிக்கின்றார். ஸ்ரீ வைரவர் காவல் தெய்வமாகையால் காவல் குறியீடான நாயை வாகனமாகக் கொண்டுள்ளார். இந்த நாயானது வைரவருக்குப் பின்புறம் குறுக்காகவும், அவருக்கு இடப்புறம் நேராகவும் நிற்கின்றது. சில சிற்பக் கலைஞர்கள் வைரவரின் கரத்திலுள்ள வெட்டுண்ட தலையிலிருந்து வடியும் இரத்தத்தை நாய் சுவைப்பது போல் வடிவமைத்துள்ளனர்.

வைரவரின் பொதுவான சிற்பத்திற்கு ஒரு நாய் மட்டுமே வாகனமாக அமைக்கப்படும் சில அபூர்வமான வைரவ சிலைகள் நான்கு நாய்கள், ஏழுநாய்கள் என்றும் அமைக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வைரவரின் வடிவங்கள்

சிற்ப நூல்களும் சிவாகமங்களும் வைரவ மூர்த்தம் விவரிக்கும் போது அறுபத்து நான்கு வைரவர்களை அறிமுகப்படுத்துகின்றன. அறுபத்து நான்கு வைரவர்களை அறிமுகபபடுத்துகின்றன. இன்னும் சில சிற்ப நூல்களில் இவை நூற்றி எட்டு வடிவங்களாகவும் குறிக்கப்படுகின்றன. இந்த எல்லா வடிவங்களிலும் சிறப்பான எட்டு வடிவங்கள் அஷ்ட வைரவர் என்று அழைக்கப்படுகின்றன.

# வைரவரின் தோற்ற வடிவங்கள்

## பிரமன் தலை கொய்தது (காசி காண்டத்தில்)

சிவபெருமானுக்கு இருப்பது போலவே ஒரு காலத்தில் பிரம்மாவிற்கு ஐந்து தலைகள் இருந்தன. அதனால் சிவபெருமானுக்குத்தான் எந்த விதத்திலும் குறைந்தவரில்லை என்று பிரம்மா கர்வம் கொண்டிருந்தார். இந்த ஐந்து முகத்துடன் அடிக்கடி கைலயம்பதிக்கு வந்து போய்க்கொண்டிருக்க சில சமயங்களில் கயிலைக்கு வருவது சிவனா அல்லது பிரம்மாவா என பார்வதிதேவி குழப்பமடைந்தார். சிவபெருமான் என நினைத்து பார்வதி தேவிபரபரப்புடன் வணங்குகையில் பிரம்மா ஆணவத்துடன் சிரித்துக் கொண்டே செல்வது குறித்து பார்வதிதேவி சிவபெருமானிடம் முறையிட்டார்.

பிரம்மாவின் செருக்கை சிவபெருமான் அறிந்தவராதலால் அவர் தானே திருந்தட்டும் என்று பொறுமை காத்தார். அவ்வாறு இருக்கையில் மேருமலையில் திருமாலிடம் பிரம்மா தன்னை சிவபெருமான் எனக்கருதி பார்வதிதேவி எழுந்து மரியாதையுடன் வணங்கியதைத் தெரிவித்துத் கேலி செய்து கொண்டிருந்தார்.அப்போது அங்கு குழுமியிருந்த தேவர்களும் ,முனிவர்களும் அவர்களைச் சூழ்ந்து பரப்பிரமன் என்பது யார்? என்று கேட்டனர். அதற்கு பிரமா ஆதிபராசக்தியின் அம்சமான பார்வதிதேவியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைக் கண்டு எழுந்து வணங்குகிறார்கள் என்றால் பரப்பிரம்மம் நானாகத்தான் இருக்க முடியும் என்பது உங்களுக்குப் புரியவில்லையா? மேலும் 'பரப்பிரம்மனை' என்பதில் என் பெயர் 'பிரம்மா' இருப்பது நானே பரப்பிரம்மன் என்பதைப் புலப்படுத்தவில்லையா? என்றார்.

பிரம்மனின் பதில் தேவர்களுக்கும், முனிவர்களுக்கும் திகைப்பைத் தந்தது. சிவபெருமானைப் பரம்பொருள் என்று எதிர்பார்த்ததற்கு மாறாக பிரம்மா தன்னையே பரப்பிரம்மம் என்று குறித்துக் கொண்டது அவர்களுக்கு ஆச்சரியமளித்தது. சரி திருமால் என்ன சொல்கிறார் என்று திருமாலின் பக்கம் திரும்பினர்.

உன்னைப் பெற்றெடுத்தவள் நான். அப்படி இருக்கும் போது நீ எப்படி பரம்பொருள் ஆக முடியும். பிறப்பு இறப்பு அற்றவர்தானே பரம்பொருள் . நீ என்னிடமிருந்து பிறந்ததால் நீ பரம்பொருளாக இருக்க முடியாது. பிறப்பு இறப்பற்ற நானே பரம்பொருள் எனறு திருமால் தெரிவித்தார்.

சிவனே பரம்பொருள் என்பதை உணர்த்த வேண்டி தாங்கள் கேட்ட கேள்விக்கு சிவனே பரம்பொருள் என்று அவர்களிருவரும் கூறுவார்கள். என்று எதிர்பார்த்ததால் இருவருமே பரம்பொருள் என்று ஒருவரை ஒருவர் வாதிட்டுக் கொள்வது முனிவர்களுக்கும், தேவர்களுக்கும் கவலையைத் தந்தது. அதனால் வேதத்திடமும் பிரணவத்திடமும் அவர்கள் முறையிட்டனர். வேதமும் பிரணவமும் பிரம்மா,திருமால் ஆகிய இருவரிடமும் ''எல்லா உலகங்களுக்கும் சிவபெருமானே பரம்பொருளாயிருக்க நீங்கள் இருவரும் இப்படி பொருத்தம் இல்லாமல் விவாதித்துக் கொண்டிருக்கிறீர்களே'' என்று கூறினார். அப்படியும் அவர்கள் இருவரும் தம் வாதத்தைக் கைவிடத் தயாராக இல்லை.

இவர்கள் இருவரும் இப்படி சண்டையிடுவதைக் கண்ட சிவபெருமான் அவர்களின் நடுவிலே ஜோதி வடிவில் காட்சியளித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களோ அதனை ஏதோ ஓர் சுடர் என்று அலட்சியம் செய்தனர். ஆயினும் சிவபெருமான் பார்வதியுடன் அந்தச் சுடரிலே காட்சியளித்தார். அதனைக் கண்ட திருமால் ஐயம் தீர்த்தவராய் சிவபெருமானே பரப்பிரமம் என்பதை உணர்ந்தவராய் அவரை விழுந்து வணங்கினார்.

ஆனால் பிரம்மாவோ என்னைப் போலவே ஐந்து தலைகள் கொண்டிருக்கும் சிவபெருமான் என்னை விட எந்தவிதத்தில் உயர்ந்தவர். ஆகவே நான் தான் பரம்பொருள் என்று மார்தட்டினார். ஆணவத்தின் காரணமாகத் தன்னை இகழ்ந்த பிரம்மாவிற்குத் தகுந்த புத்தி புகட்ட பைரவக் கடவுளை அந்த இடத்திலே தோன்றச் செய்தார்.

தன்னுடைய நடுச்சிரத்தின் மூலம் சிவபெருமானை இகழ்ந்து பேசிய பிரம்மனின் நடுச்சிரம் பைரவரின் நாநுனியில் கிள்ளி எடுக்கப்பட்டது. தலை அறுபட்ட பிறகு தான் பேசிய பேச்சினை மன்னிக்குமாறு சிவனிடம் கோரினார். தன்னுடைய ஆணவத்தை அடக்கியதற்குச் சான்றாக தன்னுடைய ஐந்தாவது தலை அவருடைய கையிலே இருக்கட்டும் என்று பிரம்மா கேட்டுக் கொண்டார். ஐந்து முகங்களைக் கொண்டிருந்த பிரம்மா இந்த நிகழ்ச்சியின் காரணமாகவே அன்று முதல் நான்முகன் என்று அழைக்கப்பட்டார்.

பிரம்மனின் தலை பைரவரால் கிள்ளி எறியப்பட்டதால் அவருக்குப் பிரம்மஹத்தி தோஷம் பிடிக்கின்றது. பிரம்மனின் தலை பைரவரின் கையில் ஒட்டிக் கொள்கின்றது. பிரம்மனின் கபாலம் சுமந்த கையினராய் பைரவர் உலகம் முழுவதும் அலைந்து திரிந்து நர்மதா நதிக்கரைக்கு வருகின்றார். பின்னர் அங்குள்ள முனிவர்களை வணங்கி தன்னுடைய பிரம்மஹத்தி தோஷம் விலகும் வழியை கேட்க அவர்களும் "நீங்களும் காசிக்குச் சென்றால் உங்கள் பிரம்மஹத்தி தோஷம் நீங்கும்" என்று கூறுகின்றனர்.

முனிவர்களின் அறிவுரைப்படியே வைரவர் காசிக்குச் செல்கின்றார். காசியின் எல்லையை மிதித்த உடனேயே பைரவரின் கையில் உள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரம்ம கபாலம் தெறித்து விழுகின்றது. அங்கே அவரின் பிரமஷத்தி தோஷம் நீங்கியது. அவர் கபாலபைரவர் (கையில் பிரம்மனின் தலையைத் தாங்கியிருந்தமையால்) என்றழைக்கப்பட்டார்.அதன் பிறகு கால பைரவராகி காசியிலே நிரந்தரமாகி பக்தர்களுக்கு அருள் புரிந்து கொண்டிருக்கின்றார.

## பைரவர்

மகாவிரதம் என்ற சைவ சமயப் பிரிவைச் சேர்ந்தவர்கள் பைரவரையே பரம்பொருளாக வழிபடுகிறார்கள்.அவர்கள் பைரவர் கொண்ட கோலத்தையே தாமும் கொண்டு ஆசைகள், அணிகள் துறந்து ஊர் ஊராக இன்றும் பிட்சை ஏற்று வாழ்கிறார்கள்.

காபாலிகம் என்ற சைவப் பிரிவினர் கபாலமும் திரிசூலமும் கைகளில் ஏந்திய பைரவ மூர்த்தியையே வழிபட்டு அவ்வாறே வாழ்ந்தார்கள். இதை சிறுத்தொண்டர் நாயனார் புராணம் சிறப்பாக விவரிக்கிறது. களாமுகம் என்ற சைவப் பிரிவும் பைரவத் திருமேனியை வழிபடுவதே ஆகும். களாமுகர்கள் தாங்கள் வழிபடும் மூர்த்திக் கேற்ப தங்கள் மேனியில் கறுப்பு வண்ணம் பூசிக்கொள்வார்கள்.

பாசுபதம் என்ற சைவ சமயப் பிரிவினர் தங்கள் உடல் முழுவதும் சுடுகாட்டுச் சாம்பலைப் பூசி பைரவ வழிபாடு செய்கிறார்கள். இன்றும் உஜ்ஜையினி மகா காளேசர் ஆலயத்தில் இவர்கள் நிறைந்திருப்தைப் பார்க்கலாம்.

ஆன்மலிங்கத் திருமேனியான பரசிவமே பரம்பொருள் என்று கருதி வழிபடும் ஐக்கியவாத சைவப் பிரிவினர் பைரவரையும், வீரபத்திரரையும் குருநாதர்களாகக் கொள்கிறார்கள். சிவபிரானின் 64 சிவமூர்த்தங்களைப் பற்றிக்கூறும் 'சிவபராக்கிரம்' என்ற நூல் பைரவர் பற்றி விளக்கும் போது, அவர் "பைரவமூர்த்தி, ஆபதோத்தாரணமூர்த்தி, வடுகமூர்த்தி, ஷேத்திர பாலகமூர்த்தி என்ற நான்கு வடிவங்களைக் கொண்டவர் என்று கூறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"**பராக்யம்**" என்ற நூலோ பைரவரை அஷ்ட பைரவராக விவரித்து அவருக்கு அஷ்ட பைரவ சக்திகளையும் குறிப்பிடுகிறது.
அவை வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. அசிதாங்க பைரவர் | - | பிராம்ஹி. |
| 2. குரு பைரவர் | - | மாகேசுவரி. |
| 3. சண்ட பைரவர் | - | கௌமாரி |
| 4. குரோத பைரவர் | - | வைஷ்ணவி. |
| 5. உன்மத பைரவர் | - | வாராஹி. |
| 6. கபால பைரவர் | - | மஹேந்திரி. |
| 7. பீஷண பைரவர் | - | சாமுண்டா. |
| 8. சம்ஹாரபைரவர் | - | சண்டிகா. |

சிவபெருமானின் ஐந்து குமாரர்கள் என்ற வரிசையில் கணபதி, முருகன், வீரபத்திரர், ஐயப்பன் ஆகியவர்களுடன் பைரவரும் சேர்க்கப்படுகிறார்.

"துக்கம் அல்லது துக்கத்திற்கு காரணமான பாவம் போக்குவதால் சிவபெருமான் '**ருத்தரர்**''என்றும்' பைரவர் என்றும்' அழைக்கப்படுகிறார்." என்று ஆகமங்கள் கூறுகின்றன. இருந்தாலும்' ஸ்ரீமகாலட்சுமி மந்திரகோசம்' என்ற நூல் சுவர்ணாகர்ஷண பைரவ மந்திரம், மற்றும் இயந்திரத்தின் மூலம் ஸ்வர்ணதாதேவியின் அருள் பெற்று பொற்குவியலை அடையும் முறை ஆகியவை பற்றி கூறுகிறது. இந்த மந்திரத்துக்கு உரிய முனிவர் பெயரும் வடுகரே. வடுகர் என்ற சொல் பைரவரைக் குறிக்கும்.

திருமூலர் தமது திருமந்திரத்தில் ஒரு பாடலில்," பக்தர்களின் மனதில் தோன்றும் பகையான ஆணவத்தை அழிக்க தமது இரு கரங்களில் சூலமும், கபாலமும் ஏந்தி ஞானத்தையே உடலாகக் கொண்டு பைரவர் உலாவுகிறார்" என்று குறிப்பிடுகிறார்.

திருமந்திரத்திலுள்ள மற்றொரு பாடல் "கபாலம் சூலம், துடி, பாசம், அறுந்த சிரம், வாள் என்ற ஆறு கைகள் கொண்டவர் பைரவர்" என்று விவரிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால பைரவர் என்ற திருநாமத்தை உன்னிப்பாகக் கவனித்தால் சில உண்மைகள் விளங்கும். பிரபஞ்சத்தில் உள்ள சகல உயிர்குலமும், வான மண்டலத்தில் உள்ள சூரியன் உள்ளிட்ட கிரகங்களும், நட்சத்திரங்களும் காலச்சக்கரத்தின் ஆளுகையில் அடங்கியவையே. இந்தக் கால சக்கரத்தை இயக்கும் பரம்பொருள் கால பைரவர் ஆவார். காலத்தின் கட்டுப்பாடுகளை அகற்றி நன்மை செய்பவர் இவரே.

காலச்சக்கர சுழற்சியால் துன்புறும் பக்தர்களைக் காப்பாற்றுவதால் இவர்' ஆபத்துத்தாராண பைரவர்' என்று போற்றப்படுகிறார். பயத்தைப் போக்குபவரும், பயத்தை அளிப்பவரும் அவரே.

பைரவர் வழிபாடு, தேவர்களுக்கும் மனிதர்களுக்கும் அநேக வரங்களையும் பாக்கியங்களையும் அளித்திருக்கிறது.

சூரிய பகவானின் மகனான சனீஸ்வரன் தனது அண்ணன் யமதர்மனால் அலட்சியப்படுத்தப்பட்டு மனம் புண்ணானார்.தனக்கு நேர்ந்த அவமரியாதயை அவர் தன் தாய் சாயாதேவியிடம் முறையிட்டார்.

பிறகு தாய் கூறிய அறிவுரைப்படி சனீசுவரர், பைரவரை வழிபட்டு அருள் பெற்றதாலேயே அவர் நவக்கிரக பதவியும் ஈசுவரப்பட்டமும் பெற்றார்.

“பைரவர் சனீசுவரனுக்கு குருவாக விளங்கி அருள் பாலித்ததால், பைரவருக்கு ஒவ்வொரு சனிக்கிழமையும் சஹஸ்ரநாம அர்ச்சனை செய்வதால் ஏழரை நாட்டுச்சனி, அஷ்டமத்துச்சனி முதலிய சனீசுவர உபாதை முற்றிலும் நீங்கி நல்ல யோக பலன் கிடைக்கும்'' என்று பைரவ தந்திரம்' தெரிவிக்கிறது.

திருமணம் ஆகாத ஆண்களும், பெண்களும் ஞாயிற்றுக்கிழமை ராகு காலத்தில் பைரவருக்கு ருத்திராபிஷேகமோ, விபூதி அபிஷேகமோ செய்து வடைமாலை சாற்றி சஹஸ்ர நாம அர்ச்சனை செய்து வழிபட்டடால் விரைவில் திருமணம் கைகூடும் என்பது நம்பிக்கை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் நல்ல குருநாதர் கிடைக்கவும், வழக்குகளில் வெற்றி பெறவும், எதிரிகளின் தொல்லைகள் அகலவும் பைரவ வழிபாடு உகந்தது என்பது அனுபவத்தின் அடிப்படையில் எழுந்திருக்கும் நம்பிக்கையாகும்.

பைரவருக்கு என்று தனித் தலங்களும், தனி ஆலயங்களும் சில இடங்களில் உள்ளன. காஞ்சியில் இருந்து மேற்கே ஒரு கி.மீ தூரத்திலுள்ள சோளீஸ்வரத்தில் பைரவருக்கு ஓர் ஆலயம் இருக்கிறது.

சீர்காழியில்' சட்டைநாதர்' என்ற பெயரில் மூல விக்கிரமாக விளங்கும் பைரவர் குறித்து பின்வரும் ஒரு பெயர்க்காரணம் வழங்குகின்றது. இரணிய சம்ஹாரத்திற்குப் பிறகு அகங்கார வடிவினராக திருமால் நரசிம்ம வடிவத்தில் சிவன் முன்பு தோன்றினார்.

அவரது அகந்தையைப் போக்க நினைத்த சிவபெருமான், பைரவரை திருமால் மீது ஏவ அவர் திருமால் மார்பில் அடித்தார். அடி பொறுக்காத திருமால் பூமியில் விழ, திருமகள் அஞ்சி பைரவரிடம் மாங்கல்யப் பிட்சை வேண்டினார்.

பைரவர் அருள் புரிந்தார். மமதை அழிந்த திருமால் தமது தோலையும் எலும்பையும் பைரவருக்கு அளித்தார். அந்தத் தோலைச் சட்டையாகவும், எலும்பைக் கதையாகவும் கொண்டு வடுகர், தண்டபாணி என்ற பெயரில் சட்டைநாதர் போற்றி வணங்கப்படுகிறார்.

அட்டவீரத் தலங்களில் ஒன்றான திருக்கண்டியூரிலும் நாகை ஸ்ரீ காயாரோகணேஸ்வரரின் ஆலயத்திலும் பிரான்மலை என்று இன்று வழங்கப்படும் திருகொடுங்குன்றத்திலும் பைரவருக்குத் தனி ஆலயங்கள் உள்ளன.

மேலும் ஆந்திராவில் நெல்லூர் மாவட்டத்தில் உதயகிரிக்கு வடமேற்குகே 28 மைல் தூரத்தில் உள்ள 'பைரவ கொண்டா' என்ற பெயரில் வழங்கப்படும் குன்றிலும் பைரவருக்கு ஒரு தனி ஆலயம் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்பகோணத்திலிருந்து மயிலாடுதுறை நெடுஞ்சாலையில் உள்ள ஷேத்திர பாலபுரம்' என்ற ஊர் பைரவத் திருத்தலங்களில் தனிச்சிறப்பு வாய்ந்ததாகும்.

இங்கு எழுந்தருளியுள்ள ஸ்ரீ கால பைரவரை இந்திரன், சக்திகள், நவக்கிரக நாதர்கள் பூஜித்து உரிய பலனைப் பெற்றதாக தலபுராணம் கூறுகிறது. மேலும் பஞ்ச பாண்டவர்களும் அவர்களின் வீல் வீரரான அரிச்சுனனும் இவரைப் பூசித்து **"பாசுபதம்"** என்ற அஸ்திரம் பெற்றதாக இங்குள்ள பல வரலாறு தெரிவிக்கிறது. பெரும்பாலான பைரவ மூர்த்திகளுக்கு வாகனம் நாய். பல சித்த புருஷர்களும், மகான்களும் நாயுடன் கொண்ட நட்பை இங்கு நாம் குறிப்பிடுவது பிழையாகாது.

இதற்கு ஒரு நேர்ச்சான்றாய் விளங்கியவர் ஸ்ரீ பாடகச்சேரி ராமலிங்க சுவாமிகள். அவர் கும்பகோணத்திலிருந்து திருநாகேச்சுவரம் செல்லும் சாலையில் மூன்று கிலோ மீட்டர் தூரத்திலுள்ள கோமளவல்லிப் பேட்டையில், முத்திக்குள மண்டபத்தில் 15 ஆண்டுகள் தங்கி. மக்களுக்குக் கூழ் காய்ச்சி ஊற்றியும் மூலிகை மருந்து தயாரித்து வழங்கியும் வந்தார். இவர் பைரவ வழிபாடு செய்தவர்.

ஆண்டிற்கு ஒரு முறை இந்த மகான் திருக்குறிப்பால் எல்லா நாய்களையும் அழைப்பார். அவைகளும் வரும்.. கூட்டமாக அந்த நாய்களை இருக்கச் செய்வார் பின்பு அவர் செய்யும் சமாராதனையை எல்லா நாய்களும் ஏற்று - தமது குணங்களை விட்டு எந்த ஆரவாரமும் இன்றி - ஒரு கட்டுப்பாட்டுடன் உணவு கொள்ளும்,

பின்னர் சுவாமிகள் '' இனி நீங்கள் போகலாம்'' என்று உத்தரவளித்ததும், அவை தமது பழைய குணம் மீண்டு ஓடிக் குரைத்துக் கொண்டு செல்லும். இது அந்தப் பகுதி மக்கள் நேரில் கண்டு இன்றும் கூறும் அரிய நிகழ்ச்சியாகும். பல நாய்களை ஒன்று கூட்டி திருக்குறிப்பால் அழைத்து அமர்த்தி, அமைதியாக உணவு கொள்ளச் செய்யும் பேராற்றல் சிந்திக்க அவருக்கு பைரவ வழிபாடே உதவியது என்கிறார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"ஞானமும் நன்னெறியும் காட்டுபவர் பைரவர்"** என்று விஞ்ஞான பைரவம்' என்று குறிப்பிடுகிறது.

மேலும் இந்த நூல் 112 வகை யோகஞான நிலைகளைக் கூறி, "முடிவான ஞானம் அருளும் யோகீசர், சித்த புருசர் அனந்த பைரவர் "என்று குறிப்பிடுகிறது. அச்ச வழிபாட்டில் தொடங்கி, காமிய விழிபாடாகவும், தோழமை வழிபாடாகவும் வளர்ந்.து ஞான ஆனந்த வழிபாடாக முற்றிப்பயன் தரும் தனிப்பெருமை வாய்ந்தது கால பைரவர் வழிபாடாகும்.

## அருள் தரும் பைரவர்

இறைவன் ஐந்து முகங்களுடன் பல அருளைக் காட்டியிருக்கிறான். ஸத்யோஜாதம், வாமாதேவம், அகோரம், தத்புருஷம், ஈசனம், என்ற மூர்த்தி பேதங்களில், பைரவரும் ஒருவர்.

சிவாம்சமான பைரவ மூர்த்தி உலகம் எங்கும் வியாபித்து இருப்பவர். நிர்வாணரூபம், மூன்று கண்கள், சர்ப்ப ஆபரணம், குண்டலம், சிரஸில் மாலை, கட்கம், சூலம், கபாலம், உடுக்கை, கோரப்பல், நாய் வாகனம், இவரே பைரவர்.

**"சுவானத்வஜாய வித்மஹே**
**சூலஹஸ்தய தீமஹி**
**தந்நோ: பைரவ: ப்ரசோதயாத்"**

என்ற பைரவ காயத்ரி மந்திரத்தை ஆசாரத்துடன், தகுந்த குருநாதர் மூலம் உபதேசம் பெற்று பைரவ உபாஸனையில் ஈடுபடலாம். வாக்தேவியின் அருளுடன் கூடிய இவர் கேட்பதை தரும் இயல்புடையவர்.

நமது ஆலயங்களில் பைரவருக்குத் தனி சன்னிதி உண்டு. உதயகால பூஜை தொடங்கு முன்னும், இரவு அர்த்த ஜாம பூஜைக்குப் பின்னும் பைரவரை பூஜை செய்து, கோயில் காவலை பைரவரிடம் ஒப்படைப்பது வழக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பைரவர் காவல் தெய்வம் பைரவாஷ்டகம், பைரவ அஷ்டோத்ரம், கால பைரவாஷ்டகம், இவைகள் நித்ய பாராயணத்திற்கு ஏற்றவை. பைரவரை அஷ்டபைரவர் என்று நூல்கள் குறிப்பிடுகின்றன. அவை கால பைரவர்,கல்பாந்த பைரவர், க்ரோதந பைரவர், கபால பைரவர், ஸம்ஹார பைரவர், உந்மத்த பைரவர், சண்ட பைரவர், உக்ர பைரவர் ஆகியவை.

திருவண்ணாமலை, பட்டீஸ்வரம் முதலிய ஆலயங்களில் பைரவரின் சிற்பம் மிகவும் அழகானது! காசியில் உள்ள கால பைரவர் சன்னதி ப்ரசித்தி பெற்றது. காசிக்குச் சென்றவர்கள் இரவு காலபைரவ பூஜை பார்க்காமல் திரும்புவதில்லை. கால பைரவர் காசி நகரத்தின் சேனாதிபதி. காசியில் இறந்தவர்களுக்கு யம பயம் கிடையாது. தண்டனை கொடுக்க யமனுக்கு அதிகாரமும் கிடையாது. காலனின் அதிகாரம் பைரவர்களுக்கு கிடைத்ததால் கால பைரவர் என்று அழைக்கப்படுகிறார். சீர்காழியில் பைரவருக்கு வெள்ளிக்கழமை இரவு 10 மணிக்கு மேல் அபிஷேகம். கூரையிலுள்ள பைரவரின் நேர்ப்பார்வையில் கீழே உள்ள பலிபீடத்திற்கு அபிஷேகம்,பால், பஞ்சாமிர்தம், தயிர் எல்லா வாசனை திரவியங்களுடன் அபிஷேகம், பார்க்க ஆயிரம் கண்கள் வேண்டும்.

உத்ஸவருக்கு முத்துச் சட்டைநாதர் என்று பெயர் பலிபீடத்திற்கு அபிஷேக ஆராதனை முடிந்து பிறகு படியேறி மேலே சட்டைநாதருக்குப் புனுகுச் சட்டம் சாற்றி வடைமாலை சாற்றுவார்கள்.

இந்த ஆலயத்தில் நவக்கிரக தேவதைகள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு நிற்பது அதிசயமாகும். ஈஸ்வரனும், ஈஸ்வரியும், பெரிய திருமேனியுடன் புன்னகை பூத்த திருமுகத்துடன் வீற்றிருப்பதும், இந்த ஆலயத்தில் காணலாம். மற்றும் அஷ்ட பைரவர்களும், பிரதிஷ்டை செய்து ஒரேசமயத்தில் பார்க்கக் கிடைப்பதும் தோணியப்பர் ஆலயத்தின். பெருமைக்கு ஒரு சான்று.

காலத்திற்கு அதிபதியான கால பைரவரை நல்ல நியமத்துடன் வழிபட்டால் மனோதைரியமும், சாந்தியும் கிட்டும் என்பதில் ஐயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனம் தரும் பைரவர்

இலுப்பைக்குடி பைரவர் எல்லா நலன்களையும் வளங்களையும் வாரி வழங்குபவர். இலுப்பைக்குடியில் பழைய காலத்தில் இலுப்பை மரங்கள் அதிகமாக இருந்தன. இந்த மரங்களின், காடுகளின் நடுவில் தான் தோன்றி நாதர் கோவில் எழுந்து விளங்கியது. இந்தக் கோவிலில், தான்தோன்றிநாதர் மூலக்கடவுளாக விளங்குகின்றார். இருந்தாலும் பெருமையும் புகழும் பைரவருக்குத்தான் போய்ச் சேருகிறது. காரணம் என்ன?

## பைரவர் பிறந்த கதை

மாத்தூரிலிருந்து கிளம்பிய கொங்கண சித்தருக்கு பேரொளி. அதாவது தானேதான் என்றும் நிரந்தரமான ஒளிவிடும் பொருள் என்பதை 'சுயம்பிரகாசர்' காட்டினார். உண்மை ஞானம் வந்தால் பின்பு வேறு என்ன வேண்டும்? அந்த சுகத்தில் சுகபிரும்மமாக விளங்கினார் கொங்கணசித்தர்.

அஷ்டமா சித்திகளைத் தருபவர் பைரவர். பைரவமூர்த்தி எப்பொழுதும் சந்தோஷத்துடன் விளங்குகின்றவர். அவர் சந்தோஷத்துடன் விளங்குகின்றவர். அவர் சந்தோஷமாக விளங்குவதால் அவரை பூஜை செய்கிறவர்களும் சந்தோஷமாக விளங்குகிறார்கள். பைரவ மூர்த்தியை வழிபட்டு, எட்டு வகை சித்திகளையும் அடைந்தவர் கொங்கணர். அவருக்குத் தங்கத்தின் மீது, அதாவது செம்பை மேலும் மாற்று அடைய செய்யும் சித்திக்கலையில் கை கொடுத்தவர் இந்த பைரவர். மருந்துகள், ரசவாதம், பாஷாணக்கட்டு போன்ற கலைகள் சித்தர் பெருமானின் கைக்குள் அடக்கமாக விளங்கியது.தான்பெற்ற சித்திகளுக்கு மூலகாரணமான பைரவரை இவர் அர்த்த ஜாமத்தில் சித்தர்கள் நெறிப்படி வழிபாடுகள் செய்து வந்தார். தன்னுடைய உண்மையறிவு என்றும் ஒளிவிடுவதற்காக தான் தோன்றிநாதர் தலத்தில் தன் உபாசனைக் கடவுளான பைரவரை பீடத்தில் அமைத்து வழிபட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த பைரவ பீடம் ஸ்வர்ண ஆகர்ஷண பீடம். தரித்திரம், துக்கம், பயம், இடையூறு, அவமானம் ஆகியவைகளிலிருந்து வழிபடுகிறவனை விடுபடச் செய்வது.

இந்த பீடத்தின் மீது சிவாலய நெறிப்படி ஆகமசாஸ்திரங்களுக்கு உட்பட்டு பைரவ மூர்த்தி முன்நாளில் அமைக்கப்பட்டது. இந்தத் திருமேனி "வடுக பைரவ திருமேனி."

## உக்ர பைரவர்

கொங்கண சித்தர் தான்தோன்றி நாதரை வழிபட்டு பைரவரின் பேரருளுக்கு ஏற்ற தவயோகியாக விளங்கினார். சிவாலங்களில் பைரவருக்கு தனி சன்னதி சில இடங்களில் உண்டு. பல இடங்களில் பைரவர் இவைகளுக்கு அப்பாற்பட்டவர்.

பிரகலாதனை இரண்யன் கேட்டான் "நாராயணன் எங்கே இருக்கிறான், என்று?. தூணிலும் இருப்பான், துரும்பிலும் இருப்பான்' என்று அந்த பாகவத உத்தமன் சொன்னான். அதைப் போல இலுப்பைக்குடி பைரவர் இந்த கோவிலின் தூண்களிலும் சாளரங்களிலும் நிறைந்து விளங்குவார். பைரவ மூர்த்தியின் ஆட்சிக்கு உட்பட்டது இந்தக் கோவில் என்பதால் தான், பைரவருடைய பல்வேறு மூர்த்தங்கள் இந்த திருக்கோவிலில் பல இடங்களில் செதுக்கப்பட்டுள்ளன.

## தக்ஷிணாமூர்த்தி சன்னதி

தஷிணாமூர்த்தி சன்னதியில் பைரவருடைய சிறியதும் பெரியதுமான சிற்பங்கள் ஒளிவிடுகின்றன.பொதுவாக ஒரு தெய்வ மந்திரத்தை ஜபம் செய்து சித்தி அடைவதற்கு ஏற்ற இடங்கள் பல உண்டு. ஜீவநதிக்கரை ஜபம், வடவிருஷமூலஜபம், அஸ்வத்தவிருஷமூல மூல ஜபம், ருத்திர பூமிஜபம், கோசாலாஜபம், சவாருட ஜபம், குரு பாதுகா ஜபம் என்று ஜப சித்திக்கான இடங்களைச் சொல்லுவார்கள். இவற்றின் பொருள் என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்றாத நதிக்கரையில் ஜபம் செய்வது, ஆல மரத்தடியில் ஜபிப்பது, அரசமரத்தடியில் ஜபிப்பது, பசுமாடுகளின் நடுவே ஜபிப்பது, குதிரை லாயத்திலே மந்திரங்களை ஜபிப்பது, ஸ்மஸான பூமியில் ஜபிப்பது, பிணங்களின் மீது அவர்ந்து ஜபிப்பது, எல்லாவற்றிற்கும் மேலாக தன்னுடைய குருவின் திருவடிகளைக் கண்ணால் பார்த்து, மனதால் நினைந்து, வாயினால் மந்திரம் சொல்வதும் ஏற்றத்திலும் ஏற்றம். குருவே பிரும்மா, குருவே விஷ்ணு குருவே சிவம். எல்லாமாய் விளங்குபவர் குருவே. இதனால் தான் நம்முடைய நாட்டில் பழைய காலத்தில் ஒரு பாடல் சொல்வதும் உண்டு.

**"நன்றாக குரு வாழ்க! குருவே துணை"** எல்லா காரியங்களும் நன்றாக நடக்க குருதான் மூலவர். குரு வாழ்ந்தால் உலகம் வாழும். உலகம் வாழ்ந்தால் உயிர்கள் வாழும். இந்த உயிர்கள் வாழ குருவே துணை செய்ய வேண்டும். எல்லாவற்றிற்கும் மூலம் குருதான். குருமூலம் கல்லாத கல்வி உருவில்லாத கல்வி. அந்தக்கல்வி இகத்திலும் இன்பம் தராது, பரத்திலும் பழுக்காது. குருமூலம் கல்லாத கல்வி அடியற்ற ஏற்றச்சால். இந்தப் பேருண்மை உபாசனை நெறியில் இருப்பவர்களுக்கு நன்றாகத் தெரிந்தது. பழக்கமான செய்தி. பைரவருடைய மஹாமந்திரத்தை கொங்கணர் தஷிணா மூர்த்தி சன்னதியில் அமர்ந்து ஜபித்ததால் இந்த இடத்தில் பைரவமூர்த்தங்கள் பிரகாசிக்கின்றன.

## வரம் தரும் வடுகர்

இலுப்பைக் குடியில் வாழ்ந்த பெரியவர்களுக்கும் கோவிலைச் சார்ந்த .நகர பிரமுகர்களுக்கும் ஒரு வழக்கம் உண்டு. தாங்கள் ஒரு வீடு வாங்குவதாக இருந்தாலும் சரி, திருமணம் செய்ய வேண்டுமென்று நினைத்தாலும் சரி, எல்லா நல்ல காரியங்களுக்கும் பைரவருடைய அனுமதியைப் பெற்றே செய்திருக்கிறார்கள்.

அதிகாலையில் கோவிலுக்கு வந்து தாமரைத் தடாகத்தில் குளித்து, பிழிந்து கட்டிய வேட்டியுடன் பைரவர் சன்னதியில் போய் நிற்பார்கள். தங்களுடைய எண்ணத்தை வடுகநாதன் முன்பு வைப்பார்கள். நடத்த வேண்டும் என்றாலும் சரி, நடத்தக்கூடாது என்றாலும் சரி, அதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றபடி அவர்களுக்கு உத்தரவுகள் கிடைக்கும். அந்த உத்தரவுகளின் படி நடந்து நனமைகளை அடைந்தார்கள். இப்படி வேண்டிக் கொள்கின்றவர்கள் நடுநிலை மனத்தவர்களாகக் காலப்போக்கில் இல்லாமல் போய்விட்டார்கள். தங்களுடைய விருப்பு, வெறுப்புகளுக்கு பைரவரை வேண்டுவது, விடாப்பிடியாக அவரை பிடித்துக் கொண்டு தங்கள் எண்ணங்களை ஈடேற்ற வேண்டுமென்று வற்புறுத்துவது போன்ற செயல்கள் தொடர்ந்தன. இதனால் பைரவ மூர்த்தியின் சாந்தி விலாசம் உக்கிரமாக மாறும் நிலை ஏற்பட்டது.

## கோபக்கலை

அடியார்களுக்கு அடிமைப்படுவது ஆண்டவன் பண்பு. இது சிவத்தின் சிறப்பு இயல்பு. அடியார்களின் எண்ணங்களைச் சுமந்து நிறைவேற்றும் பணியில் பைரவர் இழுத்து வரப்பட்டார். அகோர பக்தியால் பைரவருடைய நல்லருள் கோபக்கனலாகக் கொழுந்துவிட்டது. இந்த நிலையில் பைரவ மூர்த்தியிடமிருந்து நல்லவைகளை நாடிப் பெறுவதைவிட, அல்லவைகளை அணுகிப் பெறுவது சுலபமாக இருந்தது. இந்த கோபக்கனல் எளியவர்களால் தாங்கமுடியாத நிலையில் கொழுந்து விட்டது.

## குடும்பக் காவலர் பைரவர்

இலுப்பைக்குடி பைரவர் ஆயிரக்கணக்கான நகரத்தார் குடும்பங்களின் காவலர். இலுப்பைக்குடி வாழ் மக்களின் தந்தையும், தாயுமாக விளங்குகின்றார். குடும்பத்தலைவனுக்குக் கோபம் வந்தால் குடும்பத்தில் சந்தோஷம் இருக்காது. உக்கிரக பைரவரால் அவரைச்சார்ந்த குடும்பங்களுக்கு கிடைக்க வேண்டிய உதவிகள் தடைப்பட்டு நின்றன. கோபத்தோடு விளங்குபவன் முன்பு பங்காளி வந்தாலும் ஒன்று தான். பகையாளி வந்தாலும் ஒன்று தான். பெற்ற மகன் வந்தாலும் ஒன்றுதான். கோபம் கண்ணை மறைக்கும். கோபத்தினாலே தான் தன மைந்தனைக்கூட இரண்யன் கண்ணுக்கு தெரியவில்லை. பைரவர் சன்னதியின் எதிரில் உள்ள கருப்பர், கருப்பாயி மூர்த்தங்களின் முன்பு குட்டிச் சிறப்புக்கள் வெட்டிச் செய்யப்பட்டன.ரத்தம் கண்டால் சத்தம் ஓங்கும் மூர்த்தங்களின் சாந்தங்கள் குறைந்து போயின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சாந்தியின் பிறப்பிடம்

இந்த நிலையில் பைரவர் தன்னைச் சார்ந்தவர்களிடம் செய்த திருவிளையாடல்கள் அதிகம். வினைக்கு ஏற்றபடி வேலைகள் நடக்கும் என்பதைப்போல நகரத்தார்களில் பலர் பைரவரை விட்டு விலகிப்போனார்கள். விலக தன்னை விட்டு இவர்கள் விலகுகிறார்களே என்ற எண்ணம் பைரவருக்கு இருந்தது. தன்னுடைய குழந்தைகள் தன்னை விட்டுப் பிரிந்து இருப்பதை எந்தத் தாயும் தகப்பனும் விரும்ப மாட்டார்கள். தன் உள்ளத்தில் இருக்கும் தாபத்தை நகரப் பிரமுகர்களில் உபாசனை வழிபாடு செய்பவர்களின் உள்ளங்களில் அவ்வவ்போது எடுத்துச் சொல்லி வந்தார்.

### தனம் தரும் பைரவர்

பொதுவாக ஒரு கோவிலுக்கு பன்னிரெண்டு வருடங்களுக்கு ஒரு தடவை கும்பாபிஷேகம் செய்ய வேண்டும். சித்தர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்ட கோவில்கள் எப்போதுமே அருள் தருபவைகள். இலுப்பைக்குடி திருக்கோவில் கொங்கண சித்தரின் பேரருள் கொண்டு விளங்குவது. இதைப்போல் சித்தர்களால் அமைக்கப்பட்ட கோவில்கள் தமிழகத்தில் பல உண்டு. பல கோவில்களை அமைத்து விட்டும் இருப்பார்கள். அவர்கள் வேறு எங்கேயாவது வெளிப்பட்டுப் போய் விடுவார்கள். இலுப்பைக் குடி திருக்கோவிலில் கொங்கணர் தன்னுடைய பேரருளைப் பொழிந்து தானும் அங்கேயே விளங்குகின்றார். மூர்த்தி, தலம், தீர்த்தம், மூன்றும் முழுமையாக உள்ளது இலுப்பைக்குடி கோவில்.

இயல்பாக தனம் தரும் பைரவராக இங்கு விளங்குகின்றார் பைரவர். காஞ்சிபுரத்தில் காளிகாம்பாள் தன்னுடைய உக்கிரக தாண்டவத்தால் பயமுறுத்தினாள். ஆதிசங்கரர் வந்தார். ஸ்ரீ சக்கர பிரதிஷ்டை செய்தார். கோபம் தணிந்தது. கொடூரம் மறைந்தது. படியார்க்கும் பரமேஸ்வரியாக காமாட்சி அன்னை ஒளி விட்டாள். திரு ஆனைக்காவில் வாராஹி வடிவில் கோபக்கனலில் கொழுந்து விட்டாள் தேவி. தாடங்கத்தில் ஸ்ரீ சக்கரத்தை பிரதிஷ்டை செய்து அகிலாண்ட ஈஸ்வரியாக அறம் வளர்க்கும் நாயகியாக அன்னையை விளங்கச் செய்தார் ஆதிசங்கரர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைப் போலவே மந்திரங்கள் மூலம் திருவருளைப் பெருக்கச் செய்வது ஒருமுறை. மந்திரங்களை ஜெபித்து மூர்த்தங்களுக்கு தத்தம் கொடுப்பதன் மூலம் மாற்றியமைப்பது ஒரு முறை. இதைப்போலவே தெய்வ மூர்த்தங்களின் குணா குணங்களை மாற்றுவதற்குப் பல வழிகள் உள்ளன. இந்த வழிகள் பற்றி மந்திர சாஸ்திரங்கள் மிக விரிவாக எடுத்துச் சொல்கின்றன. உபாசனா முறையில் இருப்பவர்களுக்கு இந்த வழிகளைப் பற்றி நன்றாக தெரியும்.

இலுப்பைக்குடி பைரவர் இயற்கையிலே சந்தோஷமானவர். பொருள்வளம் மிக்கவர். ஸ்வர்ண ஆகர்ஷண பைரவர்.

ஸ்வர்ணாகர்ஷண பைரவர் என்பதை தனம் தரும் பைரவர் என்று சொல்லுவோம். ஏழைகளுக்கு இவர் ஒரு வழிகாட்டி. தனவந்தர்களக்கு இவர் ஒரு கூட்டாளி இதனால் தான் பழைய காலத்து நகரத்து மக்கள் பைரவருக்குத் தொழிலில் பங்கு வைப்பது பழக்கம். அந்தப் பங்கை முற்று முழுதுமாக செலுத்தியவர்கள் இன்று கொத்தும், குலையுமாக விளங்குகிறார்கள் இப்படி பைரவருடைய பேரருளால் பெற்ற பொருளை வெள்ளி உருண்டைகளாகவும், தங்க உருண்டைகளாகவும், நகை நட்டுகளாகவும், காசு பணங்களாகவும், பைரவருடைய உண்டியலில் பயபக்தியுடன் செலுத்தினார்கள். பைரவர் அடியார்களுக்கு பணத்தை ஈட்டிக் கொடுத்து அவர்கள் மூலம் தானும் தனத்தை ஈர்த்துக் கொண்டிருந்தார். கோவில், கோவிலைச் சார்ந்தவர்கள், கோவில் குடும்பத்தவர்கள், கோவில் குல விளக்குகள் எல்லோருமே குன்றிலிட்ட விளக்காக ஒளிவிட்டு வாழ்ந்தார்கள்.

## தந்தையின் வடிவில் தாய்

பைரவருடைய கோப நிறைவில், சாப முடிவில் பராசக்தி பைரவரின் இடத் தொடையில் அமர்ந்தாள். இந்தக் கோலம் கோபம் தணிந்த சீலம். இந்த கோலத்தை வழிபடுகின்றவர்கள் கொடுத்து வைத்தவர்கள். வறுமை வராது. துக்கம் தொடராது. எதிர்ப்பு எழும்பாது. மகிழ்ச்சி குறையாது. எங்கும் சிவமும், சக்தியும் கூடுகின்றதோ அங்கு நல்லவைகளுக்குக் குறைவில்லை. தீயவைகளுக்கு இடமில்லை. தனித்து பழனியாண்டவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்த பொழுது பண்டாரபாய் விளங்கினார். அந்த கோலத்தில் அவருடைய உருவ அமைப்பு கோவணம் கட்டிய உடல்,மழுங்க மழித்த தலை,கையிலே தண்டம், காலிலே பாதக்குறடு. இந்தக் கோலம் பண்டாரத் திருக்கோலம். பழனியாண்டவர் கோபம் தணிந்து, குணம் மிகுந்து தெய்வானை கேள்வனாய், வள்ளி மணாளனாய் விளங்கினார். அப்போது பண்டாரக்கோலம் மறைந்தது. கிரீடம் சூட்டி, பட்டாடை அணிந்து, மணவாளானாய் மணந்தார். இதைப்போலவே கோபம் தணிந்து, சாபம் மறைந்த பைரவர் ஸ்வர்ண பைரவியுடன் மங்கள திருக்கோலத்தில் வந்து கையில் ஸ்பர்ண கலசத்துடன் அம்பிகையை இடப்புறத்தில் அணைத்துக் கொண்டு அருள் பாலிக்கின்றார்.

ஸ்வர்ணாகர்ஷணபைரவர் பற்றி மந்திர சாஸ்திர நூல்கள் வெகுவாக பேசுகின்றன. ஸ்வர்ணாகஷண பைரவருக்கு தனிக்கோவில் நமது தமிழகத்தில் தேவ கோட்டையில் தான் முதன் முதலில் கட்டப்பட்டுள்ளது. நூல்களில் சொல்லிய தியான முறைப்படி பைரவர் மூர்த்தம் ஐம்பொன் சிலையாக வார்க்கப் பெற்றுள்ளது. பைரவர் தனம் தருவார். வலிமை தருவார், நல்வாழ்வும் தருவார் இன்னும் பல நற்பலன்களை வாரி வழங்குவார் செட்டி நாட்டின் தலை வாசலான தேவ கோட்டையில் இக் கோவில் கட்டப்பட்டுள்ளது. ஸ்வர்ணாகர்ஷண பைரவரின் அருகில் லெட்சுமி கணபதி இரண்டு தேவிமாருடன் ஐம்பொன் சிலையாக மிக அரிதான பொலிவுடன் வடி வாக்கப் பெற்றுள்ளது. மற்றும் வள்ளி தெய்வானையுடன் கூடிய சுப்பிரமணியர் சிலையும் ஐம்பொன்னால் செய்யப்பட்டுள்ளது.

சிறிய அழகிய இக் கோவில் முழுவதும் சலவைக்கல்லால் கட்டப்பட்டுள்ளது. சித்தர்கள் சுவர்ணாகர்ஷண பைரவரை உபாசித்து சித்தி பெற்றுள்ளனர். இவர்களில் ஒருவரான கொங்கண சித்தர் நகரக்கோவில்களில் ஒன்றான இலுப்பைக் குடியில் வடுக வைரவரின் கீழ் அடங்கி இன்னும் தனநாதனாக அருள்கிறார்.

நீங்கள் சுகங்களை விரும்புகிறீர்களா? வளம் மிகுந்த வாழ்க்கையை விரும்புகிறீர்களா? நிலையான செல்வத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்புகிறீர்களா? அப்படியானால் உடனே வாருங்கள். இலுப்பைக்குடி தனம் தரு பைரவரின் இரு திருவடிகளையும் பிடித்துக் கொள்ளுங்கள். சந்தோஷம் வந்து விட்டது. வாழ்க்கை படகுக்கு பைரவரின் கலங்கரை விளக்கம் தெரிகிறது. பழைய கவலைகளை விட்டு விடுங்கள். நேற்று நடந்ததை நினைத்துக் கொண்டிருக்காதீர்கள். இன்று இதோ உங்கள் கையில் புது வாழ்வு வந்து விட்டது. நீங்கள் புண்ணியவான்கள். நீங்கள் சந்தோஷவான்கள். நீங்கள் பைரவரின் குடும்பத்தவர்கள்.

## அஷ்டமியன்று ஸ்ரீ பைரவரை பூஜிக்கும் அஷ்டலெஷ்மிகள்

அஷ்டலெஷ்மிகள் தங்களிடத்தில் பொருள் வேண்டி பிரார்த்திக்கும் அன்பர்களுக்கு பொருள் தருவதற்காக அஷ்டலெஷ்மிகள்( வீர லெஷ்மி, கஜலெஷ்மி, சந்தான லெட்ஷ்மி தான்ய ல்ெஷ்மி,ஆதி லெஷ்மி, விஜயலெஷ்மி, ஐஸ்வர்யலெஷ்மி,தன லெஷ்மி) அனைவரும் ஸ்ரீ பைவவரிடம் பொருள் வேண்டி பிரார்த்திக்கிறார்கள். அனைவராலும் ஒதுக்கப்படுகின்ற அஷ்டமி தினத்தில் அஷ்ட லெஷ்மிகள் பிரார்த்தனை செய்வதால் அதனுடைய சிறப்பை நம்மால் அனுபவத்தில் உணர முடிகிறது. ஸ்ரீதேவியாரின் பிரார்த்தனையைப் அஷ்டமியின் பெருமையை உணர முடிகிறது.

### தேய்பிறை அக்ஷ்டமியின் சிறப்பு

தேய்பிறை அஷ்டமியில் தான் கிருஷ்ணபகவான் அவதரித்த நாளும், மதுரை சொக்கநாதர் ஜீவராசிகள் அனைவருக்கும் படி அளித்த சிறப்பும் பெறுவதால் தேய்பிறை அஷ்டமியில் செய்கின்ற செயல்கள் மேன் மேலும் வளரும் என்பதும் அதன் முக்கியத்துவமும் தெரிய வரும்.

ஸ்ரீ பைரவரின் மூல மந்திரத்தை பிரார்த்தனை செய்கின் றவர்களுக்கு பொன்னும், பொருளும் பெருகும் மேலும் வாழ்க்கையில் அவரவரின் செயலுக்கு ஏற்ற வகையில் மேலும் முன்னேறுவார்கள் என்பது. ஐதீகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த கொங்கண முனிவர் இந்த மகாமந்திரத்தை, பொன்னும் பொருளும் வேண்டி சதா நேரமும் ஜெபித்து திருப்பதி மலையில் சித்தியடைந்தார். அவர் சித்தியடைந்த திருப்பதி மலையில் வேண்டி பயன் பெற்றோர் பலர். இவ்வளவு சிறப்பு வாய்ந்த மந்திரத்தை தபசு மலையில் பக்தர்கள் உள்ளன்போடு தேய்பிறை அஷ்டமி தினத்தில் விளக்கிட்டு பூஜை செய்து பிரார்த்தனை செய்கின்றனர். இதன் மூலம் அவரவர் தொழிலுக்கேற்ற வகையில் தொழில் வளம் பெற்று வாழ்வில் மாற்றம் அடைகின்றனர்.

## ஸ்ரீ பைரவர் ஆலயங்கள்

சிவ மைந்தர்களை கணபதி, முருகன், வீரபத்திரர் முதலானவர்களுக்குரிய பரிவாரங்களுடன் தனி ஆலயங்கள் அமைக்கப்படுவது போலவே ஸ்ரீ பைரவருக்கும் தனி ஆலயங்கள் அமைக்க வேண்டுமென்று ஆகமங்கள் தெரிவிக்கின்றன. சிவாலயங்களில் பரிவார தேவதையாக கோயில் கொள்ளும் இந்த பைரவர் ஏனைய இடங்களில் தனி தெய்வமாகவோ அஷ்ட பைரவராகவோ, தமது தேவியர்களுடனோ தனியே கோயில் கொண்டுள்ளார்.

பைரவர் வழிபாடு தமிழகத்தில், இந்தியாவில் மட்டுமல்லாது உலகின் பல பகுதிகளிலும் காணப்படுகின்றது. புதுச்சேரியில் பாதாள பைரவர், வஸ்ர பைரவர், ஆந்திரத்தில் குந்தசம் என்ற இடத்தில் அமைந்த ஸ்ரீ கால பைரவர் கோயில், பைரவ கொண்டா என்ற இடத்தில் அமைந்த அஷ்ட பைரவர் கோயில், கர்நாடகாவில் கோலாரில் சுகாசன பைரவர் கோயில், புவனேஸ்வரில் நர்த்தன பைரவர், அஜிதாங்க பைரவர், ஹோய்சலாவில் சுகாசன பைரவர், எல்லோராவில் அஜிதாங்க பைரவர் என்றும் வணங்கப்படுகிறார்.

அயல் நாடுகளான நேபாளத்திலும், அமெரிக்காவிலும், இலங்கையிலும் பைரவருக்கென தனி ஆலயங்கள் இருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காசியில் பைரவர் ஆலயம்

காசியில் சிவபெருமான் எப்போதும் நீங்காது வாசம் புரிவதால் அந்நகருக்கு எப்போதுமே ஒரு புனிதத்தன்மை உண்டு. தீர்த்த யாத்திரை புறப்படுபவர்கள் காசியில் துவங்கி ராமேசுவரத்தில் முடிப்பார்கள். காசியே பைரவரின் பிரதான தலமாகும். சிவபெருமானின் தலைமைக் காவலரான பைரவரின் தலைமையிடம் காசியில் விசுவநாதர் ஆலயத்தின் வடக்கில் உள்ள பைரவநாத் என்னுமிடத்திலுள்ள கால பைரவர் சந்நிதியாகும். பல ஆயிரமாண்டுகள் பழைமை சிறப்பு வாய்ந்த இந்த கால பைரவரின் மூல வடிவம் மிகவும் தேய்ந்து போயுள்ளதால் முகக் கவசம் அணிவிக்கப்பட்டுள்ளது.

பிரம்மாவும் திருமாலும் திருவண்ணாமலையில் அடி முடி தேடியதில் பிரமன் பொய்யுரைத்தபடியால் கோபம் கொண்ட சிவனது புருவத்திலிருந்து தோன்றியவரே அந்த கால பைரவர்.கார்த்திகை மாதத் தேய்பிறை அஷ்டமியில் இந்த கால பைரவர் அவதாரம் செய்ததால் அந்நாளில் மக்கள் விரதமிருந்து காலாஷ்டமியாகக் கொண்டாடுகின்றனர்.

திங்கள், வெள்ளிகளின் நள்ளிரவு சிறப்பு வழிபாடுகள் செய்யப்படுகின்றன. வழிபாட்டின் போது இனிப்புப் பண்டங்களும், மதுவும் படைக்கப்படுகின்றன. இந்தக் கால பைரவர் சந்நிதியில் மந்திரிக்கப்பட்ட காப்புக் கயிறு பக்தர்களுக்கு வழங்கப்படுகிறது. காசிக்குச் செல்பவர்கள் கண்டிப்பாகக் கால பைரவரைத் தரிசனம் செய்வதுடன் அவருடைய பிரசாதமான காப்புக் கயிறையும் அணிந்து கொள்ள வேண்டும் இதனால் வாழ்க்கையில் ஏற்படும் தடைகள் நீங்குவதுடன், எதிரிகளின் பயமும் விலகும்.

கால பைரவரே காசியைக் காத்து நிற்கும் காவல் தெய்வமாகையால் இந்நகரில் இவருடைய சந்நிதியில் மிருத்யுஞ்ச மந்திரத்தை ஓதுபவர்களையும் கேட்பவர்களையும் கண்டு யமன் அஞ்சி நிற்பானாம். அதுமட்டுமல்லாது. இந்நகரில் இறப்பவரின் பாவ புண்ணிய கணக்கை சித்திரகுப்தன் எழுதுவதில்லை. காலபைரவரே எழுதி பலன்களையும் அளிக்கின்றாராம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஷ்ட பைரவ யாத்திரை

காசி நகரமே பைரவரின் பிரதான தலம் என்பதால் இந்நகரின் பல்வேறு இடங்களிலும் பைரவர் தலங்கள் காணப்படுகின்றன. இன்றைய காலநெருக்கடியில் இவைகள் எல்லாவற்றையும் தரிசித்து வருவது என்பது இயலாத காரியம் ஆகவே மிக முக்கியமான எட்டு பைரவத்தலங்களை மட்டும் சிறப்புடன் வழிபடுகின்றனர். கார்த்திகை, மார்கழி மாதங்களில் அஷ்டமி தினத்தில் இந்த வழிபாடு செய்யப்படுகின்றது. அனுமன் காட்டில் குரு பைரவரும், துர்கா மந்திரில சண்ட பைரவரும், விருத்தாலேஸ்வரத்தில் அஸிதாங்க பைரவரும், லைட் பைரவ கோயிலில் கபால பைரவரும், திரிலோசனகஞ்சிச்சில் சங்கார பைரவரும், தேவரா கிராமத்தில் உன்மத்த பைரவரும், காமச்சாவில் வடுக பைரவரும், காசிபுராவில் பீஷாண (பூத) பைரவரும், காசி நகரில் சிறப்பாக வழிபடப்படுகின்றனர். எனப்படுகின்றனர். இவர்களைத் தரிசிக்க செல்வதே அஷ்ட பைரவ யாத்திரை எனப்படுகிறது.

## ராமகிரி- காலபைரவர்

ஆந்திர மாநிலம் சித்தூர் மாவட்டம் நாகலாபுரத்திற்கு அருகில் உள்ள வாலீஸ்வரர் ஆலயத்தினை ஒட்டி கால பைரவர்களுக்கான தனி ஆலயம் ஒன்று கி.பி 9ம் நூற்றாண்டில் பல்லவர்களால் அமைக்கப்பட்டதாகக் கூறப்படும் இந்த பைரவ ஆலயத்தில் ஸ்ரீ கால பைரவர் தனது சக்தியான ஸ்ரீ காளி தேவியுடன் பக்தர்களுக்கு அருள் புரிகின்றார். தென்திசை நோக்கிய கருவறையில் நிர்வாண கோலத்தில் காணப்படும் இந்தக் கால பைரவருக்கு ஸ்ரீ சந்தான கால பைரவர் என்ற சிறப்புப் பெயரும் உண்டு. குழந்தைச் செல்வம் வரமருளும் சிறந்த தலம்.

குழந்தைச் செல்வம் வேண்டும் தம்பதியர் இக்கோயிலின் நந்தி தீர்த்தத்தில் புனித நீராடி, ஸ்ரீ காளிகாதேவி சமேத ஸ்ரீ கால பைரவரை தரிசித்து, வேண்டுதலுக்காக அங்கு வைக்கப்பட்டிருக்கும் கல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாய்க்குட்டிகளில் ஒன்றை எடுத்துக்கொண்டு அருகிலுள்ள பைரவரின் பெரிய நாய் வாகனத்தை மும்முறை வலம் வந்து கல்நாய்க்குட்டியை கீழே வைத்து மழலைச் செல்வம் வேண்டி ஸ்ரீ சந்தான கால பைரவரை வணங்கிச் செல்வது இவ்வாலயத்தின் தனிச்சிறப்பு. இந்தப் பிரார்த்தனையில் நிச்சயம் பலன் உண்டு என்பதற்கு இங்கு பெருமளவு காணப்படும் கல்நாய்க் குட்டிகளே சான்றாகத் திகழ்கின்றன.

ஸ்ரீ சந்தான கால பைரவரின் அருளால் குழந்தை பிறந்த பிறகு மக்கட் செல்வம் வேண்டிய தம்பதியர், குழந்தையுடன் புதிய ஒரு கல் நாய்க்குட்டி பொம்மையைக் கொண்டு வந்து நேர்த்திக்கடன் முடித்து சிறப்புப் பூசைகள் செய்கின்றனர். தெலுங்கு மொழிப் பிரதேசத்தில் அமைந்துள்ள இத்தல பைரவருக்குத் தமிழில் அர்ச்சனை செய்வது இன்னுமொரு கூடுதல் சிறப்பாகும்.

## திருஒற்றியூர் ஸ்ரீ சூர சூளாமணி பைரவர்

சென்னை- பாரி முனையிலிருந்து 8 கி.மீ. தொலைவில் உள்ள தியாகராஜசுவாமி ஆலயத்தில் (மாணிக்கத் தியாகர்- வடிவுடையம்மை) வட்டப்பாறையம்மன் என்னும் துர்க்கை சந்நிதிக்கு எதிரே ஸ்ரீ பைரவருக்குத் தனிக்கோவில் காணப்படுகிறது.

நமது ராசி மண்டலத்தில் 27 நட்சத்திரங்கள் ஆட்சி செய்கின்றன. நவக்கிரகக் கட்டுப்பாட்டில் இயங்கும் இந்த ராசி மண்டல நட்சத்திரத் தொகுதி ஒவ்வொன்றும் லிங்க வடிவில் இத்தல அதிபதியான ஸ்ரீ பைரவரை வணங்கி பேறு பெற்றதாகக் கூறப்படுகிறது. தெற்கு நோக்கிய கருவறையில் நாய் வாகனம் இல்லாமல் காட்சியளிக்கும் இவர் சூரசூளாமணி பைரவர் என்றும் அழைக்கப்படுகிறார். இவருக்கு நேர் எதிரில் முதற் பிரகாரத்தில் சப்த மாதர் சிற்பங்கள் காணப்படுகின்றன. பொதுவாக சப்தமாதர்கள் தெற்குப் பிரகாரத்தில் மட்டுமே காணப்படும். ஆனால் இத் தலத்தில் சப்த மாதர்கள் பைரவரின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டுமென்பதற்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு பிரகாரத்தில் அமைத்து தனி வழியும் அமைந்துள்ளனர்.

பைரவருக்கு கிழக்கில் சூலதீர்த்தம் என்னும் பைரவ தீர்த்தம் அமைந்துள்ளது. இங்குள்ள பைரவருக்கு கறுப்பு நூலினால் நெய்யப்பட்ட வேட்டி மற்றும் துண்டினை வைத்து வழிபாடு செய்கின்றனர். பின்னர் இந்த வேண்டுதல் துணிகளை உடல் குறைபாடுள்ள ஏழைகளுக்கு வஸ்திர தானம் செய்கின்றனர்.

இவ்வாறு வஸ்திர தானம் செய்யும் குடும்பத்தவருக்கு பைரவர் காவல் தெய்வமாய் விளங்குவாராம்.

## சீர்காழி ஸ்ரீ சட்டைநாதர் ஆலயம்

சட்ட நாதராக விளங்கும் பைரவ மூர்த்திக்குத் தலைமைத் தானமாக விளங்குவது சீர்காழியாகும். சிதம்பரத்திற்கு தெற்கே தஞ்சை மாவட்டத்தில் அமைந்துள்ள இவ்வூரில் பிரம்மாவால் பூசிக்கப்பட்ட பெரிய சிவாலயம் உள்ளது. இத்தலத்தில் உள்ள மலைக்கோயில் உச்சியில் தென்முகம் நோக்கி நின்ற கோலத்துடன் சட்டைநாதர் காட்சி தருகிறார். இவர் பைரவரின் அவதாரமே. பிரகாரத்தில் அஷ்ட பைரவர்களுக்கென தனிக்கோயில் உள்ளது.

. சட்டைநாதர் அத்திமரத்தால் அமைந்த திருமேனி ஆதலால் இதற்கு அபிஷேகம் செய்யப்படுவதில்லை. புனுகுச் சட்டம் மட்டுமே பூசப்படுகிறது. தேங்காயை உடைக்காமல் முழுக் காயாகவே நிவேதனம் செய்கின்றனர். பின்னர் அந்தக்காயை கீழ்த்தளத்தில் அமைந்த பலி பீடத்தில் படையலிட்டு அதனை உடைக்கின்றனர். அப்படி உடைக்கப்பட்ட தேங்காயினை வீட்டிற்கு எடுத்து வருவதோ, சமையலுக்கு பயன்படுத்துவதோ கூடாது. அந்தத் தேங்காயை சிறு துண்டுகளாக்கியோ அல்லது பூவாக துருவல் செய்தோ அங்கேயே பச்சையாகவே தானும் சாப்பிட்டு பிறருக்கும் தரவேண்டுமென்பது ஐதீகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில சிறப்பு நாட்களில் சட்ட நாதருக்கு வடை மாலைகள் சாத்தப்படுவதும் உண்டு.சட்டநாதருக்காக வேண்டிக் கொள்ளும் அபிஷேகம் யாவும் இவருக்கு எதிரே முதல் தளத்திலும், இரண்டாம் தளத்திலும் உள்ள பலி பீடங்களுக்கே செய்யப்படுகின்றன.

சட்டநாதருக்கு ஒவ்வொரு வாரமும் செய்யப்படும் நள்ளிரவு பூசை விஷேமானதாகும். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் இரவு 10.00 மணிக்குத் தொடங்கி நள்ளிரவு 12.00 மணி வரை பலி பீடத்திற்குச் சிறப்பு அபிஷேகங்கள் செய்யப்பட்டு சட்டநாதருக்குச் சிறப்புப் பூசைகளும் செய்யப்படுகின்றன.

இக்கோயிலின் மூன்றாம் பிரகாரத்தில் உள்ள வலம்புரி மண்டபத்தில் (இத்னை யோக ஸ்தானம் என்றும் அழைக்கின்றனர்) கருவறையுடன் கூடிய சிறிய சந்நிதி ஒன்று காணப்படுகிறது. கருவறையில் பெரிய ஊஞ்சலும் அதில் சப்ர மஞ்சமும் சுற்றிலும் கண்ணாடியும் அமைந்துள்ளன. கண்ணாடிக்கு முன்புறம் இரும்பாணிகள் பதித்த முள்பாதக் குறடுகள், சுக்கு மாந்தடிகள், தண்டங்கள் முதலியன உள்ளன. இதன் பிரகாரச்சுவரில் எட்டு முனைகளிலும் எட்டு மாடங்கள் அமைக்கப்பட்டு அஷ்ட பைரவர்கள் அமைக்கப்பட்டுள்ளனர்.

1. சுதந்திர பைரவர், 2. சுயேச்சை பைரவர், 3. லோக பைரவர்,
4. கால பைரவர், 5. உக்ர பைரவர், 6. பிரச்சையா பைரவர்
7. நிர்மாண பைரவர், 8. பீஷ்ண பைரவர்

வடிவங்கள் சூழ ஊஞ்சலில் ஆனந்த பைரவர் காணப்படுகிறார்.

இங்கு பைரவர் ஸ்ரீ விமானத்தில் இருப்பதால் ஆகாச பைரவர் என்றும், எப்போதும் மகிழ்ச்சியுடன் ஊஞ்சலில் ஆடிக்கொண்டே இருப்பதால் மகா ஆனந்த பைரவர் என்றும் அழைக்கப்படுகின்றார்.

இந்த வலம்புரி மண்டபம் வெள்ளிக்கிழமை நள்ளிரவு பூசையின் போது மட்டுமே திறக்கப்பட்டு சிறப்பு பூசைகள் செய்யப்படுகின்றன. ஏனைய வேளைகளில் இது மூடப்பட்டே இருக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காஞ்சிபுரம் வைரவேச்சுரம்

திருக்கண்டியூரில் பிரமனின் சிரத்தைக் கொய்த பாவம் தீர சிவ வழிபாடு செய்த பைரவரின் தனிஆலயம் காஞ்சியில் உள்ளது.

இதற்கு அருகிலேயே இந்தக் கால பைரவர் அஷ்ட பைரவராகி எட்டு வடிவங்களுடன் எட்டு சிவலிங்கங்களை பிரதிஷ்டை செய்து வழிபட்ட வைரவேச்சுரம் என்ற சிவாலயமும் உள்ளது. இத்தலத்தின் உற்சவர் காஞ்சி ஏகாம்பரநாதர் கோயிலில் உள்ளது. காஞ்சிக்குத் தென்மேற்கில் அழிப்படை தாங்கி என்னும் இடத்தில் பிரம்மதேவர் வழிபட்ட பைரவர் கோயில் அமைந்துள்ளது. இங்கு பிரம்மன் சிவலிங்கத்தை வைத்து வழிபட்டதுடன் தனது ஐந்தாவது சிரத்தைக் கிள்ளிய பைரவருக்கும் தனி சந்நிதி அமைத்து வழிபாடு செய்தான்.

உருத்திரமேருருக்கு அருகில் உள்ள சில மலைகளிலும், திருக்கழுக்குன்றத்திற்கு அருகிலுள்ள செம்பாக்கம் மலை மீதும் பைரவருக்கென தனி ஆலயங்கள் உள்ளன.

## ஷேத்ரபாலபுரம் ஸ்ரீ காலபைரவர்

ஸ்ரீ பைரவருக்கென்றே அமைந்த தனித்த ஆலயங்களில் இது காசிக்கு நிகரான பெருமையுடையது. கும்பகோணம்- மயிலாடுதுறை பெரு வழியில் திருவாவடுதுறை அருகே உள்ள இந்தத் தலத்தில்தான் பிரமனின் தலையைக் கொய்த காலபைரவருக்கு பிரம்மஹத்தி தோஷம் நீங்கியது என்பர்.

வடக்கே உள்ள காசி தீர்த்தத்தில் மூன்று நாட்கள் நீராடிய பலனை இங்குள்ள ஐந்து தீர்த்தங்களிலும் மூழ்கி ஒரே நாளில் அடையலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது ஐதீகம். அதனால் இந்த ஷேத்திர பாலபுரத்தை காசிக்கும் வீசமதிகமான சிறப்பு பொருந்திய தலம் என்பர். இந்த ஊரில் பிறந்தவர்களுக்கும், இந்த ஊரில் இறப்பவர்களிற்கும் ஸ்ரீ கால பைரவர் வலது காதில் தாரக மந்திரத்தை உபதேசித்து யமவாதனையை நீக்குவதாக கூறப்டுகின்றது.

மேற்கு நோக்கிய கருவறையுடைய இத்தலத்தில் உள்ள இத்தல பைரவரைப் போன்ற அமைப்பு வேறு எந்தத் தலங்களிலும் கிடையாது என்று கூறப்படுகிறது. இத்தல கால பைரவருக்கு காசியில் உள்ளது போன்றே நாய் வாகனம் காணப்படவில்லை என்பது சிறப்பானதாகும். காசியை விட வீசமதிக பலன் தரும் தலமாகையால் காசிக்குச் சென்று காலபைரவரை வழிபட இயலாதவர்கள் இத்தல பைரவரை வழிபட்டும், காசி தீர்த்தமான கங்கையில் நீராட முடியாதவர்களும் இத்தலத்திற்கு வடக்கே ஓடும் காவிரியில் நீராடியும் காசிக்கு நிகரான புண்ணியத்தை பெறுகின்றனர்.

சித்திரை மாதம் பௌர்ணமி அன்று நடைபெறும் காவடி உற்சவம். கார்த்திகை மாதம் கடைசி ஞாயிறு தினத்தன்று நடைபெறும் சந்தனக்காப்பு வைபவமும் இத்தலத்தின் விஷேச திருவிழாக்கள் ஆகும்.

தினசரி இல்லத்தில் ஒரு காலப்பூசையே பகல் 12.00 மணியளவில் நடைபெறுகிறது. ஒவ்வொரு ஞாயிறு அன்றும் பகல் 12மணிக்கு நடைபெறும் உச்சிக்காலப் பூசை சிறப்பு தரிசனமாக கூறப்படுகின்றது. காலையில் 8.00 மணிக்குள் காவிரியில் நீராடி 10.30 மணியளவில் சூலத் தீர்த்தத்தில் நீராடி 11.00 மணியில் இருந்து 12.00மணிக்குள் ஸ்ரீ கால பைரவரை தரிசிப்பவர்களுக்கு காசியின் எல்லாப் புண்ணியங்களும் ஒருசேர கிடைக்குமாம். அதுமட்டுமல்ல, கொடியவர்களால் ஏவப்பட்ட பில்லி. சூனியம், ரோசம் யாவும் அன்றை தினமே நீங்கி இன்பம் கிட்டுமாம்.

மழலைச் செல்வம் வேண்டுவோர் 16 ஞாயிற்றுக்கிழமை மேற்கூறியவாறு நீராடி ஸ்ரீ கால பைரவரை வழிபட்டால் கைமேல் பலன் நிச்சயம் என்றும் கூற்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வூரிலுள்ள காளியம்மனை (செல்லியம்மன்) வழிபட்ட பிறகே கம்பர் கவி பாடும் ஆற்றலைப் பெற்றதாக கூறப்படுகிறது. ஊரில் கம்பன் நினைவாக கம்பர் குதிரை மேய்த்த இடமும், கம்பன் தோப்பும் காணப்படுகின்றன.

## தில்லையப்டி கால பைரவ விநாயகர்

மயிலாடுதுறையில் இருந்து திருக்கடையூர் வழியாகச் செல்லும் தடத்தில் பொறையாரில் இருந்து 4 கி.மீ தொலைவிலும், திருக்கடையூரில் இருந்து 5கி.மீ தொலைவிலும் தில்லையடி அமைந்துள்ளது.

சில இடங்களில் வடகிழக்கில் மேற்கு நோக்கிய தனி சந்நிதி கொண்டும் சில இடங்களில் தனி ஆலயங்களிலும் காணப்படும் பைரவ ஒரு விநாயகர் ஆலயத்தில் வழிபடப்படுவது அபூர்வ தரிசனம் என்று கூறுவார். இந்தத் தில்லையில் அத்தகைய கால பைரவ விநாயக தரிசனம் சிறப்பானதாகக் காணப்படுகிறது.

இவ்வாலயத்தில் மூலவர் விநாயகர். பைரவருடன் ஒரே கருவறையில் எழுந்திருப்பதால் ஸ்ரீ பைரவ விநாயகர் என்றே அழைக்கப்படுகிறார். கருவறையில் விநாயகர் அமர்ந்த கோலத்தில் கிழக்கு நோக்கியும், காலபைரவர் நின்ற கோலத்தில் தென்திசை நோக்கியும் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள் பாலிக்கின்றனர்.

பில்லி சூனியம், செய்வினை, துர்தேவதைகளின் அச்சுறுத்தல் போன்றவற்றால் பாதிக்கப்பட்டோர் ஒருமுறை இவ்வாலயத்திற்கு வந்து ஸ்ரீ கால பைரவ விநாயகரை வணங்கினால் அவர்கள் அத்துன்பத்திலிருந்து விடுபட்டு நலம் பெறலாம் என்று கூறப்படுகின்றது. துன்பங்கள் விடுபட சிறந்த தலம் மூர்த்தி சிறியதென்றாலும் கீர்த்தி பெரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அஷ்ட பைரவ தலங்கள்

வடக்கே காசி நகரில் அனுமன் காட்டில் ருரு பைரவரும், துர்க்கா மந்திரில் சண்ட பைரவரும் விருத்தகாளேசுவரர் ஆலயத்தில் அஜிதாங்க பைரவரும், லட்பைரவர் கோயிலில் கபால பைரவரும், கமாக்காவில் வடுக பைரவரும் தேவரா கிராமத்தில் உன்மத்த பைரவரும், திலோசன கஞ்சிச்சில் சங்கார பைரவரும், காசி புராவில் பீஷண பைரவரும் இருப்பது போலவே தெற்கே திருப்பத்தூர், பைரவன்பட்டி, அழகாபுரி. பெருச்சிக்கோயில், திருமெய்ஞானபுரம், காரையூர், நெடுமரம், இலுப்பைக்குடி, ஆகிய தலங்கள் அஷ்ட பைரவத் தலங்களாக குறிப்பிடப்படுகின்றன.

## அஷ்ட பைரவச்சரங்கள்

உலகம் நன்மை அடையும் பொருட்டு அஷ்ட பைரவர்களும் அநேக சம்ஹாரங்கள் செய்தன. இவைகள் உலக நன்மைக்காகச் செய்யப்பட்டவை என்றாலும் அதனால் பல உயிர்கள் துன்புற்றன என்பதையும் மறுக்க இயலாது. இந்தத் துன்பத்தினால் வந்த பாவங்கள் தொலையும் பொருட்டு அந்தந்த பைரவர்களும் அவரவர் பெயரால் காசி, காஞ்சி முதலிய தலங்களில் "லிங்கம்" அமைத்து வழிபட்டனர். அத்தகைய தலங்கள் அவர்கள் பெயராலேயே அஷ்ட பைரவச் சரங்கள் என்று வழங்கப்பட்டனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்பு பொருந்திய பைரவர் தலங்கள்

எல்லாச் சிவாலயங்களும் பைரவரின் கட்டுப்பாட்டில் இருக்கின்றன என்றாலும் ஒருசில ஆலயங்கள் அவரின் வித்தியாசமான தோற்றப் பொலிவாலும் தன்னை வணங்கும் பக்தர்களுக்கு அருளை வாரி வழங்குவதாலும் சிறப்பு பெறுகின்றன. அப்படி சிறப்புப் பெற்ற தலங்களுள் சிலவற்றையாவது நாம் தரிசித்து வழிபட்டால் நமது துன்பங்கள யாவும் விலகும் என்பது நிச்சயம்.

## 1. வைரவன்பட்டி

பிள்ளையார் பட்டியிலிருந்து 2கி.மீ தூரத்தில் அமைந்துள்ள இந்த வைரவன் பட்டியில் மகா பைரவர் சிவகுமரனாகத் தனிச்சிறப்புடன் வீற்றிருந்து அருள் புரிந்து வருகிறார்.

ஏனைய முருகன் தலங்களில் கந்தர் சஷ்டி சூரசங்ஹாரப் பெருவிழா நடப்பது போலவே இந்தத் தலத்திலும் சூரசமஹார விழா நடக்கிறது. ஆனால் இங்கு சம்ஹாரம் செய்பவர் முருகனுக்குப் பதில் பைரவர். இதற்கு தலபுராணம் பின்வரும் வரலாற்றைக் கூறுகின்றது.

மகாயோகியான காசிப முனிவருக்கும் மாயைக்கும் சூரபத்மன், சிங்கமுகன், தாரசன் எனும் மூன்று அசுரபுத்திரர்கள் பிறந்தனர். சிவனிட்ம பெற்ற அளவற்ற வரங்களால் தேவர் உலகையே தங்கள் வலிமையால் ஆட்டிப்படைத்தனர். இம்மூவரின் கொடுமைகளுக்கு அஞ்சிய தேவர்கள் தேவர் உலகத்தை விட்டு பூவுலகில் பல இடங்களில் மறைந்து வாழ்ந்தனர். ஆயினும் அசுரர்கள் அவர்கள் மறைந்த இடங்களைத் தேடிப்பிடித்து அழித்து வந்தனர்.

இந்த அசுரர்களின் கொடுமையை தாங்க முடியாத தேவர்கள் சிவபெருமானிடம் முறையிட்டனர். அவர்களுக்கு அபயம் அளித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபெருமான் தன்னில் இருந்து ஒரு சிவகுமரனை உற்பத்தி செய்தார். அதில் பைரவராகத் தோற்றமளித்தார். அந்த சிவ பைரவரிடம் இருந்து பூதப்படைகள் தோன்றின. அந்தப் பூதப்படைகளுக்கு நந்தியும் கணபதியும் தலைமை தாங்கினார்.

போர்க்களத்தில் சூரனின் முதன்மைத் தளபதியாக மகாதமிஷ்டிரனும் அவனது துணைத் தலைவர்களான கும்பாண்டார், வக்கிரத மிட்டிரன் என்பவர்களும் அசுரர் படைக்குத் தலைமை தாங்கி நின்றனர். தேவர்கள் சார்பில் விநாயகர், நந்தி பைரவர் கடுமையான போர் நடைபெற்றது. பைரவர் அம்பிகையிடம் இருந்து சூலத்தை பெறுகிறார். அதனை அசுரர்களை நோக்கி ஏவுகின்றார். அது அவர்களை கோர்த்துக்கொண்டு இழுத்து வருகின்றது. பைரவர் சூலத்திடம் அவர்களை தெற்கில் இட்ட மலைகளாக்குக என்றார். சூலம் அவ்வாறே செய்ய அவர்கள் கீழே விழுந்து மலைகள் ஆகினர். பின்னர் சூலம் சிவ தீர்த்தத்தில் மூழ்கி பைரவர் கரத்தை அடைந்தது.

தேவர்கள் பைரவரைத் துதித்தனர். பைரவரும், "தேவர்களே!" அஞ்சாதீர்கள். சிவபெருமானிடம் ஆறுமுகன் தோன்றி அசுரர்களை அழிப்பான் அதுவரை நீங்கள் இளையாற்றங் குடியில் தங்கி இருங்கள் என்று கூறி விடைகொடுத்தார். பின்பு அழிஞ்சல் வனத்தில் வளரொளிநாதர் கோயிலில் அம்பிகைக்கும், இறைவனுக்கும் நடுவில் கோயில் கொண்டார். அன்று முதல் இத் தலம் பைரவன் பட்டி, பைரவன் கோயில் என்று அழைக்கப்படுகிறது.

பைரவருக்கு துணையாக விநாயகரும் இப்போரில் ஈடுபட்டதால் பைரவன் பட்டிக்கு அருகில் பிள்ளையார் பட்டி என்ற ஊரும் கோயிலும் ஏற்பட்டதாக கூறப்படுகிறது. கந்தன் நிகழ்த்திய சூரசங்காரத்திற்கு முன் நிகழ்ந்த அசுர சம்காரமாதலில் இதனை சம்ஹார சஷ்டி என்று அழைக்கின்றனர். பைரவர் அசுரர்களை அழித்த நாள் கார்த்திகை சஷ்டி ஆகும். அதனால் கார்த்திகை மாதம் இத் தலத்தில் சஷ்டி விழா சிறப்பாக கொண்டாடப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கும் பைரவர் சந்நிதிக்கு எதிரில் நவதீர்த்தம் காணப்படுகிறது. இத்தலத்தில் புனித நீராடி பைரவரை வழிபடுபவர்களுக்கு மலட்டுத்தன்மை நீங்கி மழலைச்செல்வம் கிடைப்பதுடன் வறுமை, பயம் துன்பங்களும் நீங்குகின்றது.

## 2. திருப்பத்தூர் யோக பைரவர்

அசுரர்களுக்கும் தேவர்களுக்கும் நடந்த யுத்தத்தில் தேவர்கள் வானுலகை காலி செய்து விட்டு பூவுலகில் வந்து அடைக்கலம் தேடினார். அசுரர்கள் தமது மாயையில் இருளை உண்டாக்கி உலகத்தை திகைக்க வைத்தனர்.

அசுரர்களின் அட்டகாசத்திற்கு முடிவு கட்ட பிரகதாரணர் என்ற முனிவர் முன்வந்தார். அவர் தேவர்களையும் முனிவர்களையும் அழைத்துக்கொண்டு காசிக்குச்சென்று ருத்திரரை நோக்கி பெரிய யாகம் ஒன்றைச் செய்ய ஆரம்பித்தார். மனம் இரங்கிய சிவபெருமான் தனது சக்தியில் ஒருகூறை அந்த வேள்வித் தீயில் இட்டார். வேள்வித் தீயில் இருந்து பைரவர் வெளிப்பட்டார்.

வேள்வித் தீயில் இருந்து வெளிப்பட்ட பைரவரை அனைவரும் வணங்கினர். அரக்கர்களின் கொடுமையில் இருந்து தங்களை காத்து அருளுமாறு வேண்டினர். அவர்களின் வேண்டுகோளின் படியே, அசுரர்களின் மாயையை விலக்கி சூரிய, சந்திரர்களை முன்போலவே ஆகாயத்தில் பிரகாசிக்க செய்தார்.அதை அறிந்த அசுரர்கள் பைரவர் மீது போர் தொடுத்தனர். பைரவர் தம்மிடமிருந்து அட்ட பைரவர்களையும் பூத வேதாகங்களையும் தோற்றுவித்து அசுரர்களை வெல்லும் படி ஆணையிட்டார். அவர்கள் அசுரர்களை வென்றனர். முனிவர்களும் தேவர்களும் மகிழ்ந்து பைரவரை போற்றினர்.

அசுரர்களைத் தொலைத்த பாவம நீங்க பல தலங்களை தரிசித்து பூசை செய்த பைரவர், இறுதியாக இந்த திருப்பத்தூர் தலத்தில் சிவபெருமானை எண்ணி யோகத்தில் அமர்ந்தார். பைரவருடைய யோக சாதனைக்கு மகிழ்ந்த சிவபெருமான் பைரவர் முன் காட்சி தந்து அவருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் வரங்களை அருளி அத்தலத்திலேயே வீற்றிருந்து சிறப்பு வழிபாடுகள் பெற அருள் புரிந்தார். அவர் கட்டளைபடியே யோக பைரவர் தம்மை வணங்கும் பக்தர்களின் துயரங்களைப் போக்கி வருகின்றார். யோக பைரவரின் அருட் தலமான இந்த திருப்பத்தூர் மதுரையிலிருந்து காரைக்குடிக்கு செல்லும் பெரு வழியில் அமைந்துள்ளது.

தேவாரப்பாடல் பெற்ற இத்தலத்தில் ஸ்ரீ தளிநாதர் சிவகாமசுந்தரி வீற்றிருந்தாலும் கோயில் என்னவோ பைரவன் கோயில் என்றே அழைக்கப்படுகின்றது. இந்த பேராலாயத்தின் இரண்டாவது பிரகாரத்தில் மேற்கு நோக்கியவாறு பைரவருக்கு என்று தனி ஆலயம் காணப்படுகிறது. மருது சகோதர்களால் கட்டப்பட்ட இக்கோயிலில் இந்த பைரவரை வணங்கிய வண்ணம் அவர்களின் திருவுருங்களும் காணப்படுகின்றன.

கருவறையில் யோக மூர்த்தியாக வீற்றிருந்தாலும் உற்சவராக வடுக கோலத்திலேயே பைரவர் காட்சியளிக்கிறார். இங்கு நான்கு காலப் பூசைகள் சிறப்புற செய்யப்படுகின்றன. நான்காம் காலப்பூசையாக அர்த்த சாமப் பூசையின் போது சிவாச்சாரியார், பரிசாரகர், நைவேத்தியம் கொண்டு செல்வோர், வைராவி சேவகர் ஆகிய நால்வர் மட்டுமே அனுமதிக்கபடுகின்றனர். பக்தர்கள் யாருக்கும் அனுமதி கிடையாது. இந்த நள்ளிரவு பூசை முடிந்தபிறகு யாரும் இந்தச் சந்நிதிக்குச் செல்வதில்லை. மீண்டும் அடுத்த நாள் காலையில் தான் செல்லவேண்டும்.

குழந்தைப்பேறு, திருமணத்தடைகள் அகலுதல், பகைவரின் துன்பங்கள் நீங்குதல் என தடை நீக்கும் அருள்மூர்த்தியாக இத்தலப் பைரவர் திகழ்கின்றார். வேண்டுதல் நிறைவேறிய பக்தர்கள் தங்கள் குழந்தைகளுக்கு மொட்டையடித்து காது குத்தி வடைமாலை சாத்தி தங்கள் வேண்டுதலை நிறைவேற்றுகின்றனர். ஆனால் வடை பிரசாதம் யாருக்கும் அளிக்கப்படுவதில்லை.

இந்திரன் மகன் ஜெயந்தன் சாபவிமோசனம் பெற்ற தலமாதலின் அவன் சாபவிமோசனம் பெற்ற சித்திரை முதல் வெள்ளியில் ஜெயந்தன் விழா கொண்டாடப்படுகிறது. அந்த விழாவில் முக்கிய அம்சம் மாலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பைரவர் குதிரை வாகன பவனியாகும். இதே போல் பைரவர் ஆலயத்தில் சிறப்பாகக் கொண்டாடப்படும் மற்றொரு திருவிழா கார்த்திகை சஷ்டியில் கொண்டாடப்படும் சம்பா சஷ்டியாகும். ஆறு நாட்கள் அஷ்ட பைரவர் அர்ச்சனைகளின் இறுதியில் அரக்கர்கள் சம்ஹாரம் நடைபெறுகிறது.

இங்குள்ள யோக பைரவர் தேவ - அசுர யுத்தத்தின் போது எட்டு வடிவம் தாங்கி அருள்பாலித்தார் என்று கூறப்படுகிறது. இந்த யோக பைரவரைத் தவிர்த்து ஏனைய வடிவங்கள் வைரவன்பட்டி, அழகாபுரி, பெரிச்சிக்கோயில், திருமெய்ஞானபுரத்தை அடுத்த வைரவன்பட்டி, காரையூர், இலுப்பைக்குடி, ஏழு நெடுமரம் ஆகிய ஊர்களில் உள்ளன. இவைகள் அஷ்ட பைரவ யாத்திரைத் தலங்கள் என்றும் கூறப்படுகின்றது.

## காசியில் ஸ்ரீ கால பைரவர் அதிகாரம்

இராவணனை வதம் செய்ததால் ஸ்ரீராமனுக்கு பிரம்மஹத்தி தோஷம் ஏற்பட்டது. அந்த தோஷத்துடன் முடிசூட்டுவிழா செய்வது நல்லதல்ல என்று ராமன் கருதினார். அதற்குப் பரிகாரமாக காசியிலிருந்து உருவான சுயம்பு லிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து வழிபட வேண்டும் என்று முனிவர்கள் யோசனை கூறவே ஸ்ரீராமன் தன் அருகில் நின்று கொண்டிருந்த அனுமானிடம் "நீ உடனே காசிக்குப் புறப்பட்டுச் சென்று ஒரு சுயம்புலிங்கத்தைக் கொண்டு வா!" என்று கூறினார்.

அனுமானும் ராமபிரானின் கட்டளைப்படியே காசியை நோக்கி புறப்பட்டார். ஆந்திர மாநிலம் சித்தூர் என்னும் மாவட்டத்தில் உள்ள இராமகிரி என்னும் இத்தலம் இராமாயண காலத்தில் 'திருக்காரிக்கரை' என்று வழங்கப்பட்டது. இதனை ஸ்ரீ காளிதேவி சமேத காலவைரவர் ஆட்சி செய்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ ராமனுக்காக சுயம்புலிங்கம் எடுக்க அனுமான் காசிக்குச் செல்லும் விவரத்தை தன் ஞானக்கண்ணால் உணர்ந்த காலபைரவர் அனுமன் கையால் முதலில் கொண்டு வரப்படும். அந்த காசிலிங்கம் தன்னுடைய இந்த ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட வேண்டும் என்று ஆசைப்பட்டார். அதற்காக சில முன்னேற்பாடுகளைச் செய்யத்தொடங்கினார்.

முதலில் சூரிய பகவானிடம் சென்று அனுமான் காசியிலிருந்து இந்தப்பக்கமாகத் திரும்பி வரும்பொழுது அவரது முழுசக்தியுடன் நன்கு பிரகாசிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

பின்பு கங்காதேவியை அணுகி தாயே! அனுமான் காசியிலிருந்து திரும்பி வரும் போது காசி முதல் இந்தத் தலம் வரையில் அனுமனின் கண்களில் படாமல் ஒளிந்திருக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். அதற்குக் கங்கையும் உடன்பட்டாள். அடுத்து வாயு பகவானிடம் சென்று "வாயுதேவா! அனுமன் காசியிலிருந்து திரும்பும் போது காசியிலிருந்து திருக்காரிகைவரை தாங்கள் பலமான காற்றை வீசி நல்லது செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். வாயு தேவனும் பைரவர் கோரிக்கைக்குச் சம்மதித்தார்.

இறுதியாகத் தன் இருப்பிடம் திரும்பி திருக்காரிக்கரை மக்களின் கனவில் தோன்றி நாளை சூரியோதயம் முதல் மியம் வரை யாரும் வீட்டை விட்டு வெளியே வர வேண்டாம் என்று ஊரடங்கு உத்தரவு பிறப்பித்தார்.

ஸ்ரீகால பைரவரின் இத்திட்டங்களை அறியாத அனுமன் காசிக்குச் சென்று கங்கையில புனித நீராடி காசி விசுவநாதரைத் தரிசித்து அங்கிருக்கும் சுயம்பு லிங்கங்களில் ஒன்றை எடுத்துக் கொண்டு வான்மார்க்கமாக இராமேசுவரம் நோக்கித் திரும்பிக் கொண்டிருந்தார். அச்சமயத்தில் ஸ்ரீகால பைரவருக்குக் கொடுத்த வாக்கின்படி வானத்தில் சூரியன் உதயமாகி கடுமையான வெப்பத்தைச் சிந்தினான். வாயுவோ தன் பங்கிற்கு தென்திசையிலிருந்து வட திசையை நோக்கி ஊழிக்காற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போல வீசத்தொடங்கினான். கங்காதேவியும் ஆஞ்சநேயரின் கண்களில் படாதவண்ணம் ஒளிந்து கொண்டாள்.

வெய்யிலின் கடுமை, காற்றின் எதிர்வேகம்,சிவலிங்கத்தின் பாரம் இவைகளை தாங்காமல் மிகவும் களைப்படைந்த அனுமன் குடிக்க தண்ணீர தேடி அலைந்தார். இந்த சந்தர்ப்பத்திற்காக காத்திருந்த ஸ்ரீகால பைரவர் மாடு மேய்க்கும் சிறுவனாக வடிவம் கொண்டு அப்பகுதியில் மாடு மேய்த்துக் கொண்டிருந்தார்.

அனுமனும் அந்தச் சிறுவனை அழைத்து"தம்பி எனக்கு மிகவும் தாகமாக இருக்கிறது. தண்ணீர் இருக்கும் இடத்தைக் காண்பிப்பாயா? என்று கேட்டார். சிறுவனும் அனுமனைச் சிறிது தூரம் அழைத்து சென்று கங்காதேவியைத் தோன்ற நினைத்துக் கொண்டார். அவரின் விருப்பப்படியே கங்காதேவி அருணா நதியாக சிறிது தூரத்தில் ஓடத்தொடங்கினாள். காளிங்க மடுக்கரையில் அருணாநதியை கண்டு மகிழ்ச்சியடைந்த அனுமன் அந்த மகிழ்ச்சியில் கையில் வைத்திருந்த சிவலிங்கத்தை சிறுவன் வடிவிலிருந்த ஸ்ரீ கால வைரவரிடம் கொடுத்து தான் தண்ணீர் அருந்தி விட்டு வரும் வரை அதனை வைத்திருக்கும் படி வேண்டினார். சிறுவனும் "ஐயோ நானோ சிறுவன், அதிக நேரம் இந்தப் பாரத்தைக் கையில் வைத்திருக்க இயலாதே" என்றான். அனுமனும் உனக்கு சிரமம் தெரியாதிருக்க வரம் தருகிறேன். என்று சொல்லி காளிங்காமடு அருகினில் நீரருந்தச் சென்றார்.

குறிப்பிட்ட நல்ல நேரத்தில் லிங்கத்தை வாங்கிச் செல்ல அனுமன் காத்திருந்தார். ஆனால் அதே நல்ல நேரத்தில் அங்கு சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து விட்டு, மன நிறைவுடன் பாரம் தாங்காமம் லிங்கத்தை பூமியின் மேல் வைத்து விட்டேன் என்று கூறிவிட்டு சிறுவன் ஓடி விட்டான். சிறுவனின் குரல் கேட்டு அனுமன் திடுக்கிட்டார். ஆனாலும் பூமியில் வைத்த லிங்கத்தை எடுப்பது ஒன்றும் சிரமமான காரியமல்லவே சஞ்சீவி மலையை எடுத்த வந்த எனக்கு இந்தப் பூமியிலிருந்து எடுப்பது என்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பளுவா? என்று கர்வத்துடன் லிங்கத்தை வாலால் சுற்றி எடுக்க முயன்றார். ஆனால் அவரால் சிவலிங்கத்தை எடுக்க முடியவில்லை. ஆணவத்தால் தான் அலட்சியமாக சிவலிங்கத்தை எடுக்க முயன்றதற்கு சிவனாரிடம் மன்னிப்பு கேட்டவாறு இரு கைகூப்பி பணிவுடன் வணங்கி நின்றார். அனுமானை மன்னித்த சிவபெருமானும் "நான் நல்ல முகூர்த்த நேரத்தில் இந்த இடத்தில் அமர்ந்து விட்டதால் நீ பூசிப்பதற்கு வேறோரு காசிலிங்கத்தை எடுத்துக் கொண்டு போ" என்று ஆணையிட்டார்.

அப்பொழுது இயற்கைச் சூழ்நிலை சாதாரண நிலைக்குத் திரும்பியது திடீரென நிகழ்ந்து விட்ட இயற்கை மாற்றத்திற்கு என்ன காரணம் என்று யோசிக்கையில் இது ஸ்ரீகால பைரவரின் ஷேத்திரம் அவர்தான் காசியிலிருந்து எடுத்து வந்த சுயம்புலிங்கத்தை இவ்விடத்தில் பிரதிஷ்டை செய்வதற்காக இப்படி நடந்து கொண்டார் என்ற உண்மை அனுமனுக்குத் தெள்ளத் தெளிவாகியது.

ஸ்ரீராமரின் கட்டளையை நிறைவேற்றுவதற்கு தனக்கு இடையூறாக இருந்தது. இந்த காளிங்க மடுதான் என்று கோபம் கொண்டு அருகில் இருந்த 'காரிகிரி' என்ற மலையைப் பெயர்த்து எடுத்து அந்த மடுவில் போட்டு இந்த நதிப்பகுதி வனம் சூழ்ந்த பகுதியாக மாறட்டும் என்று சாபமளித்தார் அனுமன்.

இராமேசுவரத்தில் எல்லோரும் காசி லிங்கத்திற்காகக் காத்திருப்பார்கள் என்பதால் நேரத்தை வீணாக்காமல் மறுபடியும் காசிக்கு சென்றார்.இந்த முறை காசியில் தெரிந்த காட்சிகள் அனுமனுக்கு ஆச்சரியமளித்தது. காரணம் காசியில் கங்கைக் கரையில் எங்கு நோக்கினும் இலிங்கங்களாகவே காட்சியளித்தன. இந்த லிங்கங்களில் எது சுயம்புலிங்கம் என்பதைக் கண்டுபிடிக்க முடியாமல் அனுமன் திணறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது ஒரு குறிப்பிட்ட லிங்கத்திற்கு மேலே கருடன் வட்டமிட்ட அதே நேரம் பல்லியும் நல்லுரை கூறியது. இந்த இரு குறிப்புக்களினால் அதுவே சுயம்பு லிங்கம் என்பதை உணர்ந்த அனுமன் அதனை எடுக்க முயன்றார். காசியின் கால பைரவராகிய தன்னிடம் அனுமதி ஏதும் பெறாமல் அனுமன் லிங்கத்தை எடுக்க முயல்வது கண்டு கோபமடைந்த ஸ்ரீகால பைரவர் என் அனுமதி இல்லாமல் எப்படி நீ சிவலிங்கத்தை எடுக்கலாம் என்று அனுமனைத் தடுத்தார்.

முதல்முறை சிவலிங்கத்தை எடுத்துக்கொண்டு போகும் போது இந்த பைரவர் ஏதோ சூழ்ச்சி செய்து காளிங்க மடுவில் தடுத்துவிட்டார். இப்பொழுது மறுபடியும் தன்னுடைய முயற்ச்சிக்குத் தடை செய்கிறார் என்று கோபமடைந்த அனுமன் கால பைரவரைத் தாக்கத் தொடங்கினார். ஆணவத்தால் செய்த போராசையால் அனுமனுக்குத் தோல்வியே கிட்டுகிறது. அந்த சமயத்தில் அங்கு வந்த முனிவர்கள் பைரவரை வணங்கி "உலக நன்மைக்காகவும், இராமனின் பெருமைக்காகவும் இந்தச் சிவலிங்கம் தென்னாடு போக அனுமதிக்க வேண்டும்" என்று வேண்டினார்கள். அனுமனும் விரைவாக எடுத்துச் செல்ல வேண்டுமென்பதனாலேயே அவரின் அனுமதி பெறாமல் சிவலிங்கம் எடுக்க முனைந்ததைக் கூறி மன்னிப்புக் கோரினார். ஸ்ரீகால பைரவரும் மகிழ்ச்சியடைந்து அனுமனுக்குக் கொடுத்தனுப்பினார். தன் அனுமதி பெறாது லிங்கத்தை எடுக்க முயன்ற அனுமனுக்குத் துணை புரிந்த கருடன் காசி நகர எல்லைக்குள் பறக்கக் கூடாது என்றும் ஸ்ரீகால பைரவர் சாபமிட்டார். அவரின் அந்த சாபப்படியே இன்றும் காசியின் நகர எல்லையில் கருடன் பறப்பதில்லை. அங்கே பல்லிகளும் ஒலிப்பதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ கால பைரவர்

காசி கோவிலில் பைரவர்தான் பிரதானமாகக் கருதப்பட்டு வணங்கப்படுகின்றார். சனீஸ்வர பகவானுக்கு குருவாக விளங்குபவர் பைரவர் சனீஸ்வரன். சூரியன் மகனான யமதர்மனால் அலட்சியப்படுத்தப்பட்டு கௌரவக் குறையை அடைந்தார். அவருடைய தாய் சாயாதேவியின் அறிவுரைப்படி பைரவரை வழிபட்டு அவருடைய அருளால் நவக்கிரகங்களில் ஒருவராக கிரகப் பதவி கிடைக்கப் பெற்றார். ஆகையால் பைரவர் சனீஸ்வரருக்குக் குருவாக விளங்கியும் அருள்பாலிக்கிறார். வடிவங்கள் ''அஷ்ட வைரவர்'' என்று அழைக்கப்படுகின்றன.

## பைரவர் வழிபாடு

உலகில் அந்தகார இருளை நீக்கி ஒளியைக் கொடுப்பவர் வைரவர். அதுபோல பிரளய முடிவில் ஒடுக்கத்தில் இருப்பவரும் வைரவரே. அதுமட்டுமல்லாது உலகக் காவல் தெய்வமாக விளங்குபவரும் வைரவரே இப்படி படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களையும் ஆற்றும் இந்த வைரவரின் வழிபாடு வடக்கேயிருந்து வந்த கபாலிக வழிபாட்டின் ஒரு கூறேயாகும். அனைத்து சிவாலயங்களில் பரிவார தெய்வ வழிபாடாக வழிபடப்படும் இந்த வைரவ் வழிபாடு இல்லங்களில் திரிசூல வழிபாடாகவும் போற்றப்படுகிறது. வீடுகளில் காவல் தெய்வமான வைரவர் வடிவங்களை சிலைகளாகவோ படமாகவோ வைத்து வழிபடுவதற்குப் பதில் வீட்டின் சுவரில் திரிசூலத்தை வரைந்து அதனருகில் திருவிளக்கேற்றி வழிபடுகின்றனர்.

அனைத்து சிவாலயங்களிலும் வழிபாடு ஆரம்பம் என்பது காலையில் சூரியனிடமிருந்து தொடங்கி அர்த்த சாமப் பூசையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைரவருடன் முடிவடைகிறது. இரவு அர்த்த சாமப் பூசை முடிந்ததும் பைரவருக்கான சிறப்பு வழிபாடுகள் செய்து ஆலயத்தின் கதவுகளை மூடி ஆலய சாவிக்கொத்தை அவரின் காலடியில் வைப்பது வழக்கம். பாதுகாப்பற்ற இந்நாளில் இப்படி சாவிகளை வைப்பதைத் தவிர்த்து பூசை முடிந்ததன் அடையாளமாக கைமணியையும் அபிஷேக கலசம் அல்லது கைச்செம்பையும் வைக்கின்றனர்.

ஆலயங்களில் நடைபெறும் வருடாந்திர பிரமோற்சவத்திற்கு முன்னும் பின்னும் வைரவருக்குச் சிறப்பு வழிபாடுகள் செய்யப்படுகின்றன. விஷேச தினங்களில் இவருக்கு நெய்யாபிஷேகம் சிறப்பாகச் செய்யப்படுகின்றது. அதுமட்டுமல்லாது அந்த விஷேச தின பூசையில் எட்டுவித பட்சணங்களும், எட்டுவித அன்னங்களும், நைவேத்தியப் பொருட்களாக நிவேதிக்கப்படுகின்றன. இன்னும் எட்டுவித மலர்களால் அர்ச்சனை செய்து எட்டுவித ஆரத்திகளும் செய்யப்படுகின்றன.

## வழிபாட்டிற்கு உகந்த நேரம்

வைரவருக்குரிய வழிபாட்டு நேரம் நள்ளிரவாகும். இந்த அகால நேரத்தில் பராசக்தியானவள் பைரவி என்னும் பெயரில் நடமாடுகிறாராம். அவளுடன் இறைவனும் வைரவராக தலத்தை வலம் வருவராம். அதனால் சித்தர்கள் அந்த நள்ளிரவு வேளையில் திரிபுர பைரவியையும் வைரவரையும் தியானிக்கிறார்களாம்.

## வைரவ வழிபாட்டுக்கு ஏற்ற நாட்கள்

ஒவ்வொரு மாதமும் பரணி நட்சத்திரத்தில் வைரவ விரதம் இருந்து வழிபட்டால் எந்தத் துன்பமும் நம்மை அணுகாது. சித்திரைப் பரணி மற்றும் ஐப்பசிப் பரணியில் வைரவ விரதம் இருப்பது இன்னும் சிறப்பளிக்கும். தை மாத செவ்வாய் மற்றும் வெள்ளிக் கிழமைகளிலும் வைரவரை வழிபடுவது விஷேசமாகக் கருதப்படுகிறது. அன்றையதினம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருக்கு பொங்கல் வைத்து சிவப்புப்பட்டாடை அணிவித்து வடை மாலை சாத்தி முக்கனிகள் படையலிட்டு பூசை செய்து சிறப்பான பலன்களைப் பெறுகின்றனர்.

கிராமத்துப் பூசைகளில் ஸ்ரீவைரவரை மகிழ்விக்க பலியிடுவதற்குப் பதிலாக வெண்பூசணி வெட்டி வடைமாலை சாத்துகின்றனர். இந்த வைரவர் வழிபாட்டில் தேங்காய்ப்பழ தாம்பூலத்துடன் எலுமிச்சம்பழமும் சிற்றன்ன சாதங்களும் முக்கியமானவைகளாகும்.

## வைரவர் நோன்பு

திருக்கார்த்திகையிலிருந்து 21 நாட்களும் வைரவ நோன்பு கடைப்பிடிக்கப்படுகிறது. வைரவ நோன்பு இருக்கும் பக்தர்கள் நாளுக்கு ஓரிழையாக 21 நூல் இழைகளை எடுத்து வைப்பர். பின்னர் 21 ஆம் நாள் அந்த நூலிழைகளைத் திரியாகத் திரித்து மாவிளக்கிலிட்டு நெய் தீபமேற்றி வைரவரை வழிபடுவர். அன்றைய தினம் வைரவருக்குச் சிறப்பு அர்ச்சனைகள் செய்யப்படும்.

நமக்கு உண்டாகும் பெரும்பாலான துன்பங்களுக்குக் காரணம் நவக்கோள்களின் வக்கிர நிலையேயாகும். நவக்கிரகங்களையும் அடக்கி ஆள்பவர் வைரவரே. ஆகையால் வைரவரை வழிபடின் நவக்கிரகங்களினால் உண்டாகும் துன்பங்கள் யாவும் நீங்கும் என்பது பெரும்பாலோரின் நம்பிக்கை.

## குழந்தைச் செல்வம்பெற

திருமணமாகி பல வருடங்களாகியும் குழந்தைப்பேறு இல்லாதவர்கள் ஆறு தேய்பிறை அஷ்டமி நாட்களில் சிவப்புஅரளிப் பூக்களால் அர்ச்சனை செய்து வழிபடின் விரைவில் அத்தம்பதியருக்குக் குழந்தை செல்வம் கிடைக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமணத் தடைநீங்க

தள்ளிப்போகும் திருமணங்களுக்குப் பரிகாரம் காண மணமகனோ, மணமகளோ ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் ராகு காலத்தில் (4.30 - 6.00) ஸ்ரீவைரவருக்கு அர்ச்சனை செய்து வழிபட்டால் தடைகள் நீங்கித் திருமணம் கைகூடும்.

## வைரவரின் சிறப்புக்கள்

**"வரம் பிலா ஆற்றல் பெற்றான் - ஆதி**
**பரம்பொருள் இறை சிவனார் மூர்த்தம்**
**குவலயம் காக்க வந்த வைசரவமூர்த்தியானார்**
**எளியவர்க்கெல்லாம் அருளும் திரிசூலமூர்த்தி"**

உலகப் பரம்பொருள் சிவபெருமான். இவர் பல திருப்பெயர்களில் அறுபத்து நான்கு மூர்த்தமாக விளங்குகின்றார். அவரே வைரவ மூர்த்தமாகவும் விளங்குகின்றார்.

வைரவரைப் பற்றி பல புராணங்களிலும் கூறப்படுகின்றது. இந்தியாவின் வடக்கிலும் தென் நாட்டிலும் வழிபாடுகளில் சில வேறுபாடுகள் காணப்படுகின்றன. இதற்குப் புராணங்களில் கூறப்பட்ட குருமுதலே காரணமாக அமைகின்றதெனலாம். இவரே முத்தொழில்களுக்கும் அதிபதியாக விளங்குவதைக் காணலாம். கிராமம், நகரம், காடு, நதிக்கரை, மலை, அருவி, கோயில், அரண்மனை வயல்வெளி, கோட்டை, கல்விக்கூடம், மடாலயம் ஆகியவற்றில் காவல் தெய்வமாக விளங்குகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடல் முதலான பெரிய நீர்ப்பகுதிகள் பொங்கி பூமியை அழியவிடாது கட்டுக்குள் வைத்திருப்பதனால் தீர்த்த பாலகன் என்ற திருநாமத்தையும் பெறுகின்றார். அசுரர்கள் தொல்லையால் இந்த உலகம் துன்பமுற்ற பொழுது சிவப்பரம்பொருள் தனது அம்சமாக வைரவரைத் தோற்றுவித்து அசுரர்களை வென்று இன்பம் பெருகச் செய்தார். எனவே அசுரரை அழிக்க அகோர வடிவங்கள் தாங்கியவராக விளங்கினார். மும்மூர்த்தங்களில் ஒருவரான பிரம்மன் அகந்தையால் அறிவு மயங்கிச் சிவ நிந்தனை செய்த போது சிவபிரான் வைரவரைத் தோற்றுவித்து பிரமதேவனின் ஐந்தாவது தலையை கிள்ளி கபாலத்தை கையில் எடுத்து அவனுக்கு அறிவை விளங்க வைத்தார் என்று வைரவரின் தோற்றம் பற்றிக் கூறப்படுகின்றது. அந்தகாசுரனை தேவர்களைக் காக்க வதம் செய்து அருளினார். அறுவகைச் சமயங்களிலும் வைரவர் வழிபாடு காணப்படுகின்றது. இத்துடன் பௌத்தம், சமணம் ஆகிய சமயங்களிலும் வைரவர் வழிபாட்டைக் காணலாம். வைரவர் மந்திர தந்திரங்களின் நாயகர். பூத வேதாள, பிரேத, பிசாசு கூட்டங்களை அடக்கி அதன் தலைவராக இருப்பவர். அவற்றால் உயிர்களுக்கு உண்டாகும் துன்பங்களை நீக்குபவர்.

பரமஞானிகளும், யோகியரும் தூக்கத்தை விடுத்து நள்ளிரவு வேளைகளில் திரிபுர வைரவரையும் தியானித்து திருவருள் பெறுகின்றனர். வைரவரின் தலைமைப் பீடமாக விளங்குவது சீர்காழியாகும்.

சிவ ஆலயங்களில் தினந்தோறும் சூரிய பூசையில் தொடங்கி இறுதியில் அர்த்த சாமத்தில் பைரவரின் பூசையுடன் பூசைகள் முடிவடைகின்றன. கோவில் திறப்புக்கள் வைரவற் திருப்பாதத்தில் சமர்ப்பிக்கப்படும். மறுநாள் காலையில் இவரின் உத்தரவைப் பெற்றுத் திருக்கோயில் கதவுகள் திறக்கப்படும். இவரை வழிபட்டால் பயநீக்கம், தைரியம், செல்வம், ஞானம், தொழிற்சிறப்பு ஏற்படுவதுடன் ஏவல், பில்லிசூனியம் நீக்கம் பெறும், கடற்பிரயாணம், பிள்ளைச் செல்வம், ஆட்சி ஆகியன கிடைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைரவ வழிபாட்டு நாட்களாக பரணி நட்சத்திர தினம், தேய்பிறை அஷ்டமி, நவமி ஆகிய திதிகளும், ஐப்பசிப் பரணி வெள்ளி, ஞாயிறு ஆகிய நாட்களும் சிறப்பு வழிபாட்டுக்கு உரியனவாகும். வைரவருக்கு அஷ்ட விதார்ச்சனை செய்யப்படுகின்றது. இதன் போது எட்டுவித மலர்கள். தளிர்கள் இலைகளால் எட்டு சிவாச்சாரியார் பூசை செய்வர். நள்ளிரவுப் பூசையும் வைரவருக்கு உரித்தாகின்றது.

வைரவ வழிபாடு பிரதேசங்களுக்கு பிரதேசம், வேத சிவாகம விதிகளுக்கு ஒன்றுபட்டும் சில தேசங்களில் மாறுபட்டும் காணப்படுகின்றது. மது, மாமிசம், பலியிடுதல் போதைகள் என சில இடங்களில் இன்றும் வழிபாட்டுக்குரியன எனக் கொள்ளப்பட்டாலும் சைவசமயம் தூய அன்பு நெறியே மார்க்கம் என்றால் இவற்றுக்கு இடமில்லை. ஆயினும் மக்கள் தமது பழக்க வழக்கங்கள் தேச நடைமுறைகளுக்கு எற்ப இவற்றைக் கடைப்பிடிக்கின்றனர்.

இலங்கையில் அன்னியரான போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலத்தில் இந்து மதமும் மத அனுஷ்டானங்களும் திருக்கோயில் வழிபாடும் மறுக்கப்பட்டு இருந்த காலத்தில் வைரவர் வழிபாடே இந்து சமயத்தையும், அதன் விரத அனுஷ்ட்டானங்களையும் பேணிப்பாதுகாக்க உதவியது. வைரவப் பெருமானின் திரிசூலத்தை மக்கள் மரங்களின் கீழும், வீடுகளிலும் வைத்து வழிபட்டனர். எனவே யாழ்ப்பாணம் எங்கனும் அநேக வைரவ கோவில்கள் தோன்றலாயின. இதே போல மட்டக்களப்புப் பிரதேசத்திலும் வீடுகளில் வைரவர் பூசை என்ற பெயரில் ஒவ்வோர் இந்துக் குடும்பமும் வருடம் ஒருநாளில் வைரவருக்குச் சிறப்பாகப் பூசை வழிபாடு செய்து வந்தனர்.

எளிமையாகவும் எல்லோராலும் உருவகப்படுத்தக்கூடியவராகவும் விளங்குகின்றார். ஞானகுருவாக சிறுத்தொண்ட நாயனாருக்கு வைரப்பெருமான் கிழவேடம் கொண்டு வந்து பிள்ளைக்கறி சமைத்துத் தருமாறு கேட்டு சிறுத் தொண்டருக்கும், மனைவிக்கும் மகனுக்கும் அனுக்கிரகம் பாலித்துள்ளார். காசியிலே ஆதிசங்கரருக்கு பிரம்மஞானம் அருளியதாக வரலாறுகள் கூறுகின்றது. காசியிலே மகா நிர்வாணியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகசாதுக்கள் உள்ளனர். இவர்களும் வைரவரை தியானிக்கின்றனர். கபாலிகர் சிவனைப் பயங்கரமான வைரவ வடிவத்தில் வணங்குவர். உடலில் திருநீறு பூசி தலைமாலை அணிந்து கௌபீனம் தரித்து உருத்திராட்ச மாலை அணிந்து இருப்பதுடன் நர மாமிசம் உண்பவர்களாகவும் காணப்படுகின்றனர்.

வைரவ வழிபாடானது எமது நாட்டில் இந்து மதத்தை காத்து மக்களை இரட்சித்த வழிபாடு ஆகும். எனவே பட்டி, தொட்டி எங்கும் நிறைந்த இறைபரம்பொருளான வைரவ மூர்த்தியை வணங்கி வரங்கள் பெறுவோம்.

## சிவனின் வைரவத் திருக்கோலங்கள்

### வைரவமூர்த்தி

இரன்யாசன் மகன் அந்தகாசுரனைச் சங்கரித்து தேவர் துன்பமகற்ற எழுந்தருளிய அவதார மூர்த்தம் பைரவ மூர்த்தம் ஆகும். மேலும் பிரம்மனின் அகந்தையை நீக்கி அருளி எம்மையும் காத்து வருகின்றார்.

### ஆபத்தோரண மூர்த்தி

உலகில் உள்ள உயிர்கள் துயரமும் ஆபத்துமின்றி வாழுதல் அரிது. இந் நிலையை போக்க சிவனால் மட்டுமே முடியும். எனவே உயிர்கள் தமது ஆபத்து இரந்து தொழுது வேண்டின் அபயமளிப்பர். இவ்வாறு உயிர்களின் நன்மை கருதி எழுந்தருளிய திருக்கோலமே ஆபத்தோரண மூர்த்தமாவார்.

### வடுக மூர்த்தி

பிரம்மன் தன்னைத் துன்புறுத்திய முண்டாசுரனுக்கு அஞ்சி முறையிட்ட போது பிரம்மனின் வேண்டுகோளுக்கு இணங்கி எழுந்தருளிய மூர்த்தமே வடுக மூர்த்தமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சேஷ்திர பாலக மூர்த்தி

உலகைக் காக்கவும் ஊழிக் காலத்து உற்ற துன்பத்தை தீர்த்து காத்தருளவும். குறிப்பிட்ட ஆலயம், ஊர், வீடு என்பற்றைக் காவல் செய்யவும் எழுந்தருளிய மூர்த்தமே சேஷ்திர பாலக மூர்த்தமாகும்.

### பிரம்ம சிரச்சேத மூர்த்தி

தானே மூலப் பொருள் என ஆணவம் கொண்டு நின்ற பிரம்மனது ஐந்தாவது தலையை நகத்தால் சங்காரம் செய்து கொய்தற்காக எழுந்த மூர்த்தமாக பிரம்ம சிரச்சேத மூர்த்தி விளங்குகின்றார்.

## அஷ்ட பைரவர்கள்

### சிவனாரின் உருவங்கள்

சைவம் என்ற சொல்லின் பொருள் பல நிலைகளில் ஆராயப்படுகிறது. சைவத்தின் முழுமுதற் பொருளாக கொள்வது சிவனே ஆகும் சிவன் என்னும் செம்மேனி எம்மானுக்கு எண்ணற்ற திருமேனிகள் உள்ளன. இவ்வகைத் திருமேனிகள் 64 என சிவபராக்கிரமம் எனும் நூல் எடுத்துரைக்கின்றது. இவைகளில் பஞ்சவிம்சதி என்று சொல்லப்படும் 25 சிவ மூர்த்தங்கள் சிறப்புடையன.

### பைரவர் திருமேனி

சிவனார் உறையும் திருக்கோயில்களில் பல திருமேனிகள் இருப்பினும் ஆலயத்தின் காவலராக ஷேத்திர பாலகர் என்று சொல்லப்படுகின்ற பைரவர் திருமேனியினைக் காணலாம். இவரே யோகத்திற்கும், ஞானத்திற்கும் பொருளாவார். இவர் சிவாலயத்தின் தென்திசை நோக்கி விளங்குவார். பைரவர் வழிபாடு வட இந்தியாவில் சிறப்பாக உள்ளது. பைரவர் சிறப்பினை எடுத்துக்காட்டும் முகத்தான்"சிறு தொண்டர் புராணம்" சிறப்பாக பெரிய புராணத்தில் விளக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறப்புடைய சன்னதிகள்

சிறப்பாக சீர்காழியில் உள்ள பிரம்மபுரீஸ்வரர் ஆலயத்தின் தென்பால் அஷ்ட பைரவர் ஆலயம் தனித்து விளங்குகின்றது. இவ்வாலயத்தின் உள் மடங்களில் அஷ்டபைரவர் திருமேனிகள் உள்ளன. பிரதி வெள்ளிக்கிழமைகளில் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன.

திருவண்ணாமலையில் - அஷ்டபைரவர் மண்டபமும் அஷ்டபுஜ பைரவர் திருமேனியில் திருக்குற்றாலம் சித்திர சபையில் அஷ்ட பைரவர்களின் ஓவியங்கள் சிறப்பாக அமைந்துள்ளன.

குறிப்பாக நகரத்தார்கள் பைரவ வழிபாட்டில் தங்களை பெரிதும் ஈடுபடுத்திக் கொள்வார்கள் சக்திகளாகக் சப்த மாதர்கள் விளங்குகின்றனர் என்பதனை தியானங்களின் வாயிலாக அறியப்படுகிறது. திரு முறைகளில் - பைரவத் திருக் கோலங்கள் சிறப்பினை பல பதிகங்களில் காணலாம். திருநாவுக்கரசர் தமது 4,5,6 திருமுறைகளில் - பெரும் பகுதியாக பைரவர் பெருமையினையும், ஆட்கொண்டதையும் கூறுகின்றார்.

## வழிபாடு

பைரவர் வழிபாடு - சிவாலயத்தின் இறுதி வழிபாடாகவும், அவரிடமே திருக்கோயில் சாவிகளை ஒப்படைத்து விடைபெறுதல் இன்றும் நடைமுறையில் காணப்படுகின்றது. சண்டிஹோமத்தில் சிறப்பாக பைரவ பலியிடுதல் சிறப்பம்சமாகும். பைரவர், வடுகர், ஷேத்திர பாலகர், சுவர்ணாகர்ஷணாபரவர், ஆகாச பைரவர் என்ற பலப்பெயர்கள் இருப்பினும் இவரே கிராமம் நகரம், ஆலயம், மடாலயம் கிரகம், நதிக்கரை, குளக்கரை, மயாயனம் ஆகிய இடங்களிலிருந்து காத்தருளுகின்றார். இப்பகுதியில் சிறப்பாக பூஜிக்கப்படும். அஷ்ட பைரவர்களின் தியானங்களின் விளக்கங்கள் இடம் பெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பைரவ தியானம் (சேஷ்த்திர பாலகர்)

"ரக்தவால ஜடாதரம் சசிதரம் ரக்தாங்க தேஜோமயம்!
டக்கா சூழ கபால பாசகதரம் ரக்ஷாகரம் பைரவம்!!
நிர்வாணம் சுநஹனம் த்ரிநய னஞ்சா நந்தா கோலகலம்!
வந்தே பூத பிசாச நாதவடுகம் சேத்ரஸ்ய பாலம் சுபம்!!"

சிவந்த ஜ்வாலைகளையுடைய ஜடையைத் தரித்திருப்பவரும், சந்திரனை முடியில் தரித்திருப்பவரும், சிவந்த மேனியுடையவரும், ஒளிமயமாக விளங்குபவரும் உடுக்கை, சூலம், கபாலம், பாசக்கயிறு இவைகளை வைத்திருப்பவரும், உலகத்தைக் காப்பவரும், பாவிகளுக்கு பயங்கரமான தோற்றத்தையுடையவரும், நிர்வாணமாக இருப்பவரும், நாயை வாகனமாகக் கொண்டவரும், மூன்று கண்களையுடையவரும், எப்பொழுதும் ஆனந்தத்தினால் மிகுந்த கோலஹலமுடையவரும், பூதகணங்கள் பிசாசுக் கூட்டங்கள் இவைகளுக்குத் தலைவனாக இருப்பவரும் "சேஷ்த்திரபாலகருமான பைரவரை" வணங்குகின்றேன்.

### க்ஷேத்திரபாலர் தியானம்: (வேறு வகை)

"ஆசாம்பரம் த்ரியானம் ஊர்த்வ சதுர்புஜம்!
டக்கா சூழ கபாலோக்ரம் வந்தேஹம் க்ஷேத்ர பாலகம்!!"

திகம்பரராயும் மூன்று கண்களையும், நான்கு கைகளையுமுடையவராயும், உயரத் தூக்கிக்கட்டப்பட்ட கூந்தலையுடையவராயும், உடுக்கை, சூழம், கபாலம் இவைகளை உடையவராகவும் உக்கிரமான உருவத்தையுடையவராய் இருக்கின்ற "ஷேத்ர பாலக சுவாமியை" வணங்குகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அஸிதாங்க பைரவ தியானம்

"த்ரிணேத்ரம் வரதம் ஶாந்தம் டுமுண்ட மாலா விபுக்ஷிதம்!
ச்வேத வர்ணம் க்ருபாமூர்த்திம் பைரவம் குண்டலோ ஜ்வலம்!!
கதா கபால ஸம்யுக்தம் குமாரஞ்ச திகம்பரம்!
பாணம் பாத்ரஞ்ச சங்கம் அக்ஷமாலாம் கமண்டலும்!!
நாக யக்ஞோப வீதஞ் ச தாரிணம் ஸு வி பூக்ஷிதம்!
ப்ரஹ்மாணீ சக்தி ஸஹிதம் ஹம்ஸாரூடம் ஸு ருபினம்!!
ஸர்வா பீக்ஷ்டரதம் நித்யம் அஸிதாங்கம் பஜாம்யஹம்!!"

மூன்று கண்களையுடையவரும், வேண்டிய வரனை கொடுப்பவரும், சாந்தமான ஸ்வரூபத்தையுடையவரும், தலைமாலையை அணிந்தவரும், வெண்மையான நிறமுடையவரும், கருணை வடிவங்கொண்டவரும், காதுகளில் அணியப்பெற்ற குண்டலங்களால் மிகவும் பிரகாசிப்பவரும், கதை, கபாலம், பாணம், பாத்ரம், கட்கம், ஜபமாலை, கமண்டலு, இவைகளையுடையவரும், திகம்பரனாயும், இளையனாகவும், பாம்பைப் பூணுலாக அணிந்து கொண்டிருப்பவரும் நன்கு அலங்கரிக்கப் பட்டிருப்பவரும், ப்ருஹ்மாணீ என்கின்ற சக்தியுடன் கூடியவரும், அன்னப்பறவையை வாகனமாகக் கொண்டவரும் அழகாக இருப்பவரும், வேண்டியது யாவும் கொடுக்கவல்ல"அஜிதாங்க வைரவர்" என்னும் பைரவ மூர்த்தியை வணங்குகின்றேன்.

### குரு பைரவ தியானம்

"த்ரிணேத்ரம் வரதம் சாந்தம் குமாரஞ்ச திகம்பரம்!
டங்கம் க்ருக்ஷ்ணம்ருகம் பாத்ரம்பிப்ராஞ்சக்ருபாணகம்!!
மாகேச்வர்யாயுதம் தேவம் வ்ருக்ஷாடம் ஸ்மிதாவனம்!
சுத்தஸ்படிக ஸங்காசம் நவமி குரு பைரவம்!"

மூன்று கண்களையுடையவரும், வேண்டிய வரனைக் கொடுப்பவரும், சாந்தமான தோற்றத்தையுடையவரும், இளைஞனாகவும், திகம்பரனாகவுமிருப்பவரும், டங்கம், க்ரு`ணம்ருகம் (புள்ளிமான்), பானபாத்திரம், கத்தி இவைகளை வைத்திருப்பவரும், மகேஸ்வரி என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்தியுடன் கூடியவரும், காளை வாகத்தின் மேல் வீற்றிருப்பவரும், புன்னுறுவல் பூத்தமுகத்துடன் கூடியவரும், நிர்மலமான ஜஸ்படிகம் போன்று வெண்மையான மேனியையுடையவருமான "குரு பைரவர்" என்ற பைரவப்பெருமானை வணங்குகின்றேன்.

## க்ரோத பைரவர்:

**"த்ரிணேத்ரம் வரதம் சாந்தம்குமாரஞ்ச திகம்பரம்!**
**கதாம் சங்கம் ச சக்ரஞ்ச பாநபாத்ரஞ்ச தாரிணம்!!**
**லக்ஷ்ம்யாச ஸஹிதம் வாமே கருடாஸந ஸு ஸ்த்திதம்!**
**நீலவரணம் மஹாதேவம் வந்தே ஸ்ரீக்ரோத பைரவம்!!"**

மூன்று கண்களையுடையவரும் கதை, சங்கம்,சக்ரம், பாநபாத்ரம், இவைகளையுடையவரும், வேண்டப்பட்ட வரனைக் கொடுப்பவரும், சாந்தமான தோற்றத்தையுடையவரும், குமாரனாகவும், திகம்பரனாகவும், விளங்குபவரும், இடதுபக்கத்தில் அமர்ந்திருப்பவரும், நீலநிறமான மேனியையுடையவருமான **"க்ரோத பைரவரை"** வணங்குகின்றேன்.

## உன்மத வைரவ தியானம்

**"த்ரிணேத்ரம் வதம் சாந்தம் குமாரஞ் ச திகம்பரம்!**
**ஹேம வர்ணம் மஹாதேவம் அச்வவாஹன ஸு ஸ்த்தம்!!**
**கட்கம் கபாலம் முஸலம் ததந்தம் கே கம் ததா!**
**வாராஹீ சக்தி ஸஹிதம் வந்தே உன்மத்த பைரவம்!!'**

மூன்று கண்களையுடையவரும் , வேண்டப்பட்டவரனைக் கொடுப்பவரும், சாந்தமான தோற்றத்தையுடையவரும் குமாரனாகவும், திகம்பரனாகவுமிருப்பவரும், சுவர்ணம் போன்று மஞ்சள் நிறமான மேனியுடையவரும், அன்னவாகனத்தில் அமர்ந்திருப்பவரும், கட்கம், கபாலம், உடுக்கை, கேடயம், இவைகளையுடையவரும், வாராஹீ சக்தியுடன் கூடிய வருமான உன்மத்தபைரவரை" வணங்குகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கபால பைரவர் தியானம்

"த்ரிணேத்ரம் வரதம் சாந்தம் குமாரஞ்ச திகம்பரம்!
பாசம் வஜ்ரம் ததா கட்கம் பான பாத்ரஞ்ச தாரிணம்!!
இந்த்ராணீ சக்தி ஜஹிதம் கஜவஹன ஸு ஸ்த்திதம்!
கபால பைரவம் வந்தே வந்தே பத்மராகப்பம் சுபம்!"

மூன்று கண்களையுடையவரும் வேண்டப்பட்டவரனைக் கொடுப்பவரும், சாந்தமான தோற்றத்தையுடையவரும், குமாரனாகவும், திகம்பரனுமாக இருப்பவரும் பாசக்கயிறு -வஜ்ரம் -சக்தி - அபாநபாத்ரம் இவைகளையுடையவரும், இந்திராணி என்னும் சக்தியுடன் கூடியவரும் யானை வாகனத்தின் மீது வீற்றிருப்பவரும் பத்மராகம் போன்ற மேனியையுடையவருமான "**கபால பைரவரை**" வணங்குகின்றேன்.

## பீஷ்ண பைரவர் தியானம்

**"த்ரிணேத்ரம் வரதம் சாந்தம் குமாரஞ்ச திகம்பரம்!
கட்கம் சூழம் கபாலஞ்ச தாரிணம் முஸலம் ததா!
சாமுண்ட சக்தி ஸஹிதம் ப்ரேத வாஹண ஸு ஸ்தத்திதமகி!
ரத்த வர்ணம் மஹதேவம் வந்தே பீக்ஷண பைரவம்!!"**

மூன்று கண்களையுடையவரும், வேண்டப்பட்ட வரன்களைக் கொடுப்பவரும், சாந்தமான தோற்றத்தையுடையவரும், குமாரனாகவும், திகம்பரனாகவும், கத்தி , சூலம் - கபாலம்- உலக்கை இவை ஏந்தியிருப்பவரும், சாமுண்டி என்னும் சக்தியுடன் கூடியவரும், பிரேத வாகனத்தின் மீது அமர்ந்திருப்பவரும், சிவந்த மேனியையுடையவருமமான பீஷண பைரவர் என்கின்ற மஹதேவனான பைரவரை வணங்குகின்றேன்.

## சண்ட பைரவர் தியானம்:

**"த்ரிணேத்ரம் வரதம் சாந்தம் குமாரஞ்ச திகம்பரம்!
தனூர் பாணஞ்ச பிப்ராணம் கட்கம் பாத்ரம் ததைவ ச!!
கெளரமாரீ சக்தி சஹிதம் சிகிவகன ஸம்ஸ்த்திதம்!
கெளரவரணயுதம் தேவம் வந்தே ஸ்ரீ சண்ட பைரவம்!!"**

மூன்று கண்களையுடையவரும், வேண்டிய வரன்களைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுப்பவரும், சாந்தமான தோற்றத்தையுடையவரும், இளைஞனாகவும், திகம்பரனாகவும் இருப்பவரும், வில், அம்பு, கத்தி, பாநபாத்திரம் (கபாலம்) இவைகளையுடையவரும், மயிலை வாகனமாகக் கொண்டவரும், வெண்மையான நிறமுடையவருமான சண்ட பைரவர் என்கின்ற பைரவரை வணங்குகின்றேன்.

## சம்ஹார பைரவர் தியானம்:

"தச பாஹூ ம் த்ரிணேத்ரம் ச ஸர்ப்ப யக்ஞோப வீதினம்!
தம்ஷட்ராகளவதனம் அஷ்டை ச்வர்யப்ர தாயகம்!!
திகாமபர குமாரஞ்ச ஸிம்ஹ வாகன ஸம்ஸ்த்ததிதம்!
சூலம் டமருகம் சங்கம் கதாம் சக்கரஞ் ச தாரிணம்!!
கட்கம் பாமத்ரம் ச கடவாங்கம் பாசமங்குசமேவ ச!
தைத்யசீர்ஷகபாலமேலாக்க ப்ருபஆவ
உக்ர ரூபம் மதோன்மத்தம் பாடவானல பைரவம்!
சண்டிகா சக்தி ஸஹிதம் த்யாயேத் ஸம்ஹகார பைரவம்."

பத்து கைகளையும் மூன்று கண்களையுடையவரும் பாம்பைப் பூணூலாக அணிந்து கொண்டிருப்பவரும் கோரைப்பற்களால் பயங்கரமான முகத்தையுடையவரும் எட்டுவிதமான ஐஸ்வர்யங்களையும் கொடுப்பவரும், திகம்பரனாகவும், குமாரனகவுமிருப்பவரும், சிம்ஹவாகனத்தில் அமர்ந்திருப்பவரும், கூலம் - டமருகம் - சங்கம் - கதை - சக்கரம் கதை, பானபாத்ரம் - கட்வாங்கம் - பாசம் - அங்குசம் இவைகளைக் கைகளில் வைத்திருப்பவரும், அரக்கர்களது மண்டை ஓடுகளால் செய்யப்பட்ட பயங்கரமான பெரிய மாலையை அணிந்திருப்பவரும், வடுகராகவும், பயங்கரமான தோற்றமும் உன்மத்தராகவும்" சண்டிகா சக்தியுடன் இருப்பவருமான சம்ஹர பைரவரைத் தியானிக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைரவருக்கு பிரியமானவை

நெய் அபிஷேகம், சிவப்பு மலர்கள், நெய்த் தீபம், உடைக்கப்படாத முழுத்தேங்காய், மாவிளக்கு, நார்ப் பழங்கள், தேன், வடை ஆகியன பிரியமானவையாகின்றன. வைரவருக்கு ஆலய பிரம்மோற்சவத்திற்கு முன்னும். பின்னும் சிறப்பு வழிபாடுகள் செய்யப்படுகின்றன. மட்டக்களப்பு பிரதேசத்தில் மாரொட்டியும் படையல் செய்கின்றனர். மேலும் எட்டு விதமான அன்னங்கள், உணவுகள் நிவேதனமாகப் படையல் செய்து எட்டு வித ஆராத்திகள் கொண்டு தீபாராதனை செய்வது வைரவருக்குப் பிரியமானவையாகும்.

## *வைரவருக்குப் பிரியமான எட்டு விதமானவைகள்*

**சமித்துக்கள்**

| | | | |
|---|---|---|---|
| 1.அரசு | 2.ஆல் | 3.புரசு | 4.நாயுருவி |
| 5.வன்னி | 6.உமா | 7.அறுகு | 8.பலா |

**பலகார பட்சணங்கள்**

| | | |
|---|---|---|
| 1.சூசியம் | 2.அப்பம் | 3.வெள்ளப்பம் |
| 4.தேன்வடை | 5.பாயாசம் | 6.தேன்குழல் |
| 7.எள்ளுருண்டை | 8.அதிரசம் | |

**அர்ச்சனைக்குரிய மலரும் தளிரும்**

| | | | |
|---|---|---|---|
| 1.வில்வம் | 2.நொச்சி | 3.மரு | 4.மல்லி |
| 5.மரிக்கொழுந்து | 6.சம்பங்கி | 7.பிச்சி | 8.தாமரை |

**அன்னங்கள்**

| | | |
|---|---|---|
| 1.சர்க்கரைப்பொங்கல் | 2.வெண்பொங்கல் | 3.பால்சாதம் |
| 4.எலுமிச்சை சாதம் | 5.புளியோதரை | 6.தேங்காய்சாதம் |
| 7.எள்ளுச்சாதம் | 8.சம்பாசாதம் | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூசைக்குரிய பாடல்கள்

### தூபம் காட்டும் பொழுது

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன்னாமம் என்நாவில் மறந்தறியேன்
உலந்தார் தலையிற்பலி கொண்டுழல்வாய்
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருள்வாய்
அலந்தேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத் துறையம்மானே.

### அடுக்கு விளக்கு காட்டும் பொழுது

சோதியே சுடரே சுடரொளி விளக்கே
சுரிகுழற் பனைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள் வெண்ணீற்றாய்
பங்கயத் தயனும்மா லறியா நான்முகனும்
நீதியே செல்வத் திருப்பெருந் துறையில்
நிறை மலர்க்குருந்த மேவிய சீர்
ஆதியே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவ என்றருளாயே

### குடவிளக்குகள் காட்டும் பொழுது

ஒளிவளர் விளக்கே! உலாப்பிலாவொன்றே
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர்ப்பளிங்கின் திரள்மணிக்குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக்கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனே விளம்புமா விளம்பே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கற்பூர நெய்விளக்கு காட்டும் பொழுது

கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோலநீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பரவி யேமமாகுந் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடஞ் செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி.

ஆலந்தரித்த லிங்கம் ஆலவாய்ச் சொக்கலிங்கம்
மூலமாய் எங்கும் முளைத்த லிங்கம் பாலொளியாம்
மத்தனை கூடல் மதுராபுரி உமையாள்
அத்தனே ஆலவாயா.

## மூன்று விளக்கு காட்டும் போது

இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதி உள்ளது
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சிவாயவே.

## ஐந்து விளக்குக் காட்டும் பொழுது

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய் கோபுரவாசல்
தெள்ளற் தெளிந்தார்க்குச் சிவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்துங் காளா மணி விளக்கே.

## நைவேத்தியம் படைக்கும் போது

ஆலந்தான் உகந்து அமுது செய்தானே
ஆதியை அமரர் தொழு தேத்துஞ்
சீலந்தான் பெரிதும் உடையானைச்
சிந்திப் பாரவர் சிந்தையுளானை
ஏலவார் குழலால் உமை நங்கை
யென்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
கால காலனைக் கம்பனெம்மானைக்
காணக்கண் அடியேன் பெற்றவாறே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தீபாரதனையின் போது பாட வேண்டியவை

உலகெலாம் அன்பு மேவி ஒரு குலமாக வாழ்க
கலக்கமுற் துயரும் வீழ்க கருணையும் களிப்பும் பொங்க
தலமெல்லாம் விளைய ஞால ஞாயிறு பொலிய நாளும்
இலகுவாய் சுத்த ஜோதி இறைவனே போற்றி போற்றி.

ஒள்ளிய துரிய வானில் ஓங்கிடும் ஜோதி வாழ்க!
தென்னியர் உள்ளே அன்பாய் திகழ்பரஞ் ஜோதி வாழ்க!
உள்ளமே தில்லையாக ஓமொலி இசையதாக
துள்ளிநன் னடனமாடும் தூயசிற் ஜோதி வாழ்க!

**காலையில் வெளியே தொழிலுக்கோ அல்லது வேறு ஏதும் தேவைக்குப் போக வேண்டியிருந்தால் திருமூலரின் பின்வரும் பாடலை பாடி போகவும்.**

சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரும் ஆவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே

### உணவு உண்ண முன் பாடவேண்டியது - நாவுக்கரசரின் பாடல்

அன்னம் பாலிக்குத் தில்லைச் சிற்றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை
என்னன் பாலிக்கு மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்கு மோஇப் பிறவியே.

### மாலையில் விளக்கு ஏற்றும் போது பாட வேண்டியவை

இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதி உள்ளது
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சிவாயவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இரவில் துயில் கொள்ளப் போகும் முன் மாணிக்கவாசகரால் பாடிய திருவாசகத்தை பாடி துயில் கொள்ளவும்**

வேண்டத் தக்க தறிவோய் நீ
    வேண்ட முழுதுந் தருவோய் நீ
வேண்டும் அயன்மாற் கரியோய் நீ
    வேண்டி யென்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயா தருள் செய்தாய்
    யானும் அதுவே வேண்டினல்லாய்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில்
    அதுவும் உன்றன் விருப்பன்றே.

**காரைக்கால் அம்மையார் பற்றிச் சேக்கிழார் சுவாமிகளின் பாடலை பாடவும்**

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்துபாடி
அறவா! நீ ஆடும் போதுன் அடியின் கீழிருக்க வென்றார்.

## விநாயகர் பாடல்கள்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பைரவர் பதிகம்

(வண்ணச்சரபம் அருள்மிகு தண்டபாணி சுவாமிகள் அருளியது)

## காப்பு வெண்பா

தாயிற் தயை வுடையாய்! சாலைநகரக் காக்குமலைக்
கோயி லவிர்வானே! கொற்றமிகு - நாயில்
இவர் வானே! என்றன் உண்மை யாவும் அறிவாய்!
தவராசர் மெச்சும் வரம் தா.

## நூல்

எண்ணரும்சீர்த் திருவருட்பே றிகதலத்தில் உறுமாறு
நண்ணலறும் தமியேன்பால் நவின்றமொழிப் படிசெய்வாய்!
விண்ணவர்கண் குளமஞ்ச விதிதலையென்றக் றறக்கொய்தாய்!
வண்ணமலி சாலைநகர் மலைக்கோயில் வயிரவனே! 1

விளம்பரும்பல் படையேந்தும் வீராதி வீரர்பெரும்
தளம் பயப்பட் டொல்குமடற் றகையெனக்கின் றருள்செய்வாய்!
களம்படும்மைக் கறையோனே! கனற்சூலப் படையோனே!
வளம்பெருகும் சாலைநகர் மலைக்கோயில் வயிரவனே! 2
பத்திநெறி வித்தாம்நின் பரியினங்கொன் றளிகூர்வார்
தத்தியலச் செயும்பேறு தமியேற்கென் றருள்வாயோ?
துத்தியர(வு) அணிவானே! துழமுழக்கும் தோளானே!
மைதிரளார்ச்சாலைநகர் மலைக்கோயில் வயிரவனே.

ஞானமொரு சிறிதேனும் நணுகாதார் நகையாட
ஈனமிகுத் துழல்வேனுக்(கு) இறுமாப்பென் றருள்வாயோ?
தேனவிழ்பல் மலர்ப்பூசை தினஞ்செய்வார்க் கெளியானே
மானமலி சாலைநகர் மலைக்கோயில் வயிரவனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானேதும் விரும்பாத நவையுணர்ந்து நல்லருள்வாய்!
தானேவந் தென்னதுபுன் தமிழ்விரும்பல் நிசமன்றாய்
மீனேல்கட் கொற்றிமனம் மிகநாணும் படி சென்றாய்!
வானேரும் சாலைநகர் மலைக்கோயில் வயிரவனே.

கணல்போலும் கண்ணியர்தம் கலநினைந் தயர்வேன்பால்
அயலோருக்(கு) எமன்போலும் ஆண்மையுறப் பரிவாயோ?
முயலேதும் மருவாது முளைத்தபிறை முடியானே
வயமோங்கும் சாலைநகர் மலைக்கோயில் வயிரவனே.

எத்தனையோ தெய்வங்கள் இயம்பிய சொற் பிழைப்பட்ட
அத்தனையில் ஒன்றாநீ அறைந்தமையும் ஆங்கொல்லோ?
பைந்தலை பாம்பணையான்தன்பசும்குருதிப்புனல்கொண்டாய்!
வைத்தபுகழ்ச் சாலைநகர் மலைக்கோயில் வயிரவனே.

குருகுலத்தோர் காளையடி கொண்டுகணை நல்கலும்நின்
திருவருள்என் றுணர்வேணைத் தியக்கமச் செயலாமோ?
தருவரையர் பலரென்பும் தடமாரபிற் புனைவோனே!
மருமலர்த்தண் சாலைநகர் மலைக்கோயில் வயிரவனே.

திண்ணியகைக் கரிமுகனிற் செவ்வேனிற் றிகழ்வாழ்வே
எண்ணியநான் இவ்வாறிங்(கு) ஈடழியத் தகும்கொல்லோ?
நண்ணியபல் சித்தருக்கு நாடியேபே றருள்வானே!
மண்ணிலுயிர் சாலைநகர் மலைக்கோயில் வயிரவனே

கொச்சைநகர்ச் சேய்முதலாக் குலவுமொரு நால்வரென்
இச்சைவழி விளையாடும் இயல்பெனக்கின் றருள் ளெய்வாய்
செச்சைமலர்த் திருமேனித் திகம்ரனே! ! திரைத்தெண்ணீர
மச்சவயற் சாலைநகர் மலைக்கோயில் வைரவனே

வயங்குபுகழ்ச் சாலைநகர் மலைக்கோயில் வயிரவனை
இயங்குநலத் தினுக்கேற்ற இனியமொழி சொல்க்கேட்டுத்
தியங்கலறும் உவப்பெய்தித் திருப்புகழோன் செப்புமிவை
பயங்கலிநோய் முதலாய பலபகையும் தீர்ப்பனவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைரவ நாமம் பயின்று வரும் தோத்திரங்கள்

**1. திருமுறை 6 - திருத்தாண்டகம்**

"அறுத்தான்காண் அயன்சிரத்தை" அமரர் வேண்ட
ஆழ்கடலின் நஞ்சுண்டங் கணிநீர்க் கங்கை
செறுத்தான்காண் தேவர்குந் தேவன்தா ன்காண்
திசையனைத்துந் தொழுதேத்தக் கலைமான் கையில்
பொறுத்தான்காண் புகலிடத்தை நலியவந்து
பொருகயிலை எடுத்தவன்தன் முடிதோள நாலஞ்
இறுத்தான்காண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன்காண் அவனென் எண்ணத்தானே

**2. திருமுறை 6 - தனித்திருத்தாண்டகம்**

ஆமயந்தீர்த் தடியேனை ஆளாக் கொண்ட
அதிகைவீரட்டானம் ஆட்சி கொண்டார்
"தாமரையோனன் சிரமரிந்து கையிற் கொண்டார்
தலையதனிற் பலிகொண்டார்" நிறைவாந் தன்மை
"வாமனனார் மாகாயத் துதிரங் கொண்டார்"
மானிடங் கொண்டார் வலங்கைமழுவாள் கொண்டார்
காமனையும் உடல்கொண்டார் கண்ணால் நோக்கிக்
கண்ணப்பர் பலியுங்கொள் கபாலியரே

**3. திருமுறை 6 - திருத்தாண்டகம்**

எல்லாம்முன் தோன்றாமே தோன்றினான் காண்
ஏகம்பம் மேயான்காண் இமையோ ரெத்தப்
பொல்லாப் புலனைந்தும் போக்கி னான்காண்
புரிசடைமேற் பாய்கங்கை பூரித்தா ன்காண்
நல்லவிடை மேற்கொண்டு நாகம் பூண்டு
நளிர்சிரமொன் றேந்தியோர் நாணாயற்ற
கல்லாடை மேற்கொண்ட காபாலி காண்
காளத்தியான் என்கன்னு னானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**4. திருமுறை 4 - திருநேரிசை**

கையராய்க் கபாலமேந்திக் காமனைக் கண்ணாற் காய்ந்து
மெய்யராய் மேனிதன்மேல் விளங்கு வெண்நீறுபூசி
உய்வரா உள்குவார்க்கு உவமைகள் பலவுஞ் செய்து
பையரா அரையில் ஆர்த்துப் பருப்பதம் நோக்கினாரே

**5. திருமுறை 6 - திருத்தாண்டகம்**

சிரமேற்ற நான்முகன்றன் தலையும் மற்றைத்
திருமால்தன் செழுந்தலையும் பொன்றச் சிந்தி
உரமேற்ற இரவிபல் தகர்நுச் சோமன்
ஒளிர்க்கலைகள் படவுழக்கி உயிரை நல்கி

## வழிபாட்டுத் தோத்திரங்கள்

**பைரவர் காயத்ரி**

சுவானுத் வஜாய வித்மஹே
சூல ஹஸ்தாய தீமஹி
தந்தோ பைரவ: பிரசோதயாத்

## 28.நவக்கிரக பிராண பைரவர் காயத்ரீ மந்திரங்கள்

**1. சுவர்ணர்கர்கஷண பைரவர் காயத்ரீ (சூரியன்)**

ஓம் பைரவாய ச வித்மஹே
ஆகர் ஷணாய தீமஹி
தந்நேர்: சொர்ண பைரவ ப்ரசோதயாத்

**2. கபால பைரவர் காயத்ரீ (சந்திரன்)**

ஓம் திரிபுராயை ச வித்மஹே
பைரவ்யை ச தீமஹி
தந்நோ: பைரவி ப்ரசோதயாத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**3. சண்ட பைரவர் காயத்ரீ (செவ்வாய்)**

ஓம் சர்வசத்ரு நாஸாய வித்மஹே
மகா வீராய தீமஹி
தந்நோ: சண்ட பைரவ ப்ரசோதயாத்

**4. உன்மத்த பைரவர் காயத்ரீ (புதன்)**

ஓம் மஹா மந்த்ராய வித்மஹே
வராஹி மனோகராய தீமஹி
தந்நோ: உன்மத்த பைரவ ப்ரசோதயாத்

**5. அசிதாங்க பைரவர் காயத்ரீ (குரு)**

ஓம் ஞான தேவாய வித்மஹே
வித்யா ராஜாய தீமஹி
தந்நோ: அசிதாங்க பைரவ ப்ரசோதயாத்

**6. ருரு பைரவர் காயத்ரீ (சுக்கிரன்)**

ஓம் ஆனந்தரூபாய வித்மஹே
டங்கேஷாய தீமஹி
தந்நோ: ருருபைரவ ப்ரசோதயாத்

**7. குரோதன பைரவர் காயத்ரீ (சனி)**

ஓம் கிருஷ்ண வர்ணாய வித்மஹே
லட்சுமி தாராய தீமஹி
தந்நோ: குரோதன பைரவ ப்ரசோதயாத்

**8. சம்ஹார பைரவர் காயத்ரீ (ராகு)**

ஓம் மங்களேஷாய வித்மஹே
சண்டிகாப்ரியாய தீமஹி
தந்நோ: சம்ஹாரபைரவ ப்ரசோதயாத்

**9. பீஷண பைரவர் காயத்ரீ (கேது)**

சர்ஓம் சூலகஜ்தாய வித்மஹே
சர்வானுக்ராய தீமஹி
தந்நோ: பீஷணபைரவப் ப்ரசோதயாத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவக்கிரக உபசக்தி காயத்ரீ மந்திரங்கள்

**1. ஸ்ரீ பைரவி காயத்ரீ (சூரியன்)**

ஓம் த்ரிபுராயை ச வித்மஹே
பைரவ்யை ச தீமஹி
தந்நோ: பைரவி ப்ரசோதயாத்

**2. ஸ்ரீ இந்திராணி காயத்ரீ (சந்திரன்)**

ஓம் கஜத் வஜாயை வித்மஹே
வஜ்ர ஹஸ்தாயை தீமஹி
தந்நோ: இந்த்ராணீ ப்ரசோதயாத்

**3. ஸ்ரீ கௌரிமாரி காயத்ரீ (செவ்வாய்)**

ஊம் சிகித் வஜாயை வித்மஹே
வஜ்ர ஹஸ்தாயை தீமஹி
தந்நோ: கௌமாரி ப்ரசோதயாத்

**4. ஸ்ரீ வராகி காயத்ரீ (புதன்)**

ஓம் மஹிஷ்த் வஜாயை வித்மஹே
தண்ட ஹஸ்தாயை தீமஹி
தந்நோ: வராகிப் ப்ரசோதயாத்

**5. ஸ்ரீ பிராமி காயத்ரீ (குரு)**

ஓம் ஹம்ஸத் வஜாயை வித்மஹே
கூர்ச்ச ஹஸ்தாயை தீமஹி
தந்தோ: பிராம்மீ ப்ரசோதயாத்

**6. ஸ்ரீ மகேஸ்வரி காயத்ரீ (சுக்கிரன்)**

ஓம் வ்ருஷத் வஜாயை வித்மஹே
ம்ருக ஹஸ்தாயை தீமஹி
தந்நோ: ரௌத்ரீ ப்ரசோதயாத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7. ஸ்ரீ வைஷ்ணவி காயத்ரீ (சனி)

ஓம் தாஷ்யத் வஜாயை வித்மஹே
சக்ர ஹஸ்தாயை தீமஹி
தந்நோ: வைஷ்ணவி ப்ரசோதயாத்

## 8. ஸ்ரீ சண்டி காயத்ரீ (ராகு)

ஓம் சண்டீஸ்வரீ ச.வித்மஹே
மகா தேவிச தீமஹி
தந்தோ: சண்டீ ப்ரசோதயாத்

## 9. ஸ்ரீ சாமுண்டி காயத்ரீ

ஓம் பிசாசத் வஜாயை வித்மஹே
சூல ஹஸ்தாயை தீமஹி
தந்நோ: சாமுண்டீ ப்ரசோதயாத்

## ஸ்ரீ ஸ்வர்ணாகர்ஷண பைரவ அர்ச்சனை

| | |
|---|---|
| ஓம் ஸ்ரீம் தன வயிரவா | போற்றி |
| ஓம் ஸ்ரீம் தத்துவ தேவா | போற்றி |
| ஓம் ஸ்ரீம் தயாளா | போற்றி |
| ஓம் ஸ்ரீம் தனநாதா | போற்றி |
| ஓம் ஸ்ரீம் தனத்தேவா | போற்றி |
| ஓம் ஸ்ரீம் குலதேவா | போற்றி |
| ஓம் ஸ்ரீம் குரு நாதா | போற்றி |
| ஓம் ஸ்ரீம் குண்டலினி தேவா | போற்றி |
| ஓம் ஸ்ரீம் குபேரா | போற்றி |
| ஓம் ஸ்ரீம் குணக்குன்றே | போற்றி |
| ஓம் ஸ்ரீம் வயிரவா | போற்றி |
| ஓம் ஸ்ரீம் வளந்தருவாய் | போற்றி |
| ஓம் ஸ்ரீம் வற்றாத தனமே | போற்றி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீம் வறுமையின் மருந்தே போற்றி
ஓம் ஸ்ரீம் வனத்துறை வாழ்வே போற்றி
ஓம் ஸ்ரீம் திருவுடைச் செல்வா போற்றி
ஓம் ஸ்ரீம் தினந்தினங் காப்பாய் போற்றி
ஓம் ஸ்ரீம் திருமணத் தேவா போற்றி
ஓம் ஸ்ரீம் திருவருள் திரண்டாய் போற்றி
ஓம் ஸ்ரீம் திருவடி காட்டுவாய் போற்றி
ஓம் ஸ்ரீம் சித்தர்கள் வாழ்வே போற்றி
ஓம் ஸ்ரீம் சித்தருக்கு சித்தா போற்றி
ஓம் ஸ்ரீம் சித்திகள் எட்டா போற்றி
ஓம் ஸ்ரீம் சித்தாந்த வடிவே போற்றி
ஓம் ஸ்ரீம் சித்திகள் முடித்தாய் போற்றி
ஓம் ஸ்ரீம் முழுநிலவானாய் போற்றி
ஓம் ஸ்ரீம் முனிவர்கள் மருந்தே போற்றி
ஓம் ஸ்ரீம் முடியாதன முடிப்பாய் போற்றி
ஓம் ஸ்ரீம் முழுத்தனம் தருவாய் போற்றி
ஓம் ஸ்ரீம் முகிழ்நகை வயிரவா போற்றி
ஓம் ஸ்ரீம் இரும்பைப் பொன்னாக்கினாய் போற்றி
ஓம் ஸ்ரீம் இருந்தருள் செய்ய வந்தாய் போற்றி
ஓம் ஸ்ரீம் இலுப்பைக்குடி வயிரவா போற்றி
ஓம் ஸ்ரீம் வைரவன்பட்டி வயிரவா போற்றி
ஓம் ஸ்ரீம் திருப்பத்தூர் யோக வயிரவா போற்றி
ஓம் ஸ்ரீம் காசி கால பைரவா போற்றி
ஓம் ஸ்ரீம் போற்றி போற்றி போற்றி
ஓம் ஸ்ரீம் பைரவராயவித்மஹே போற்றி

ஹரிஹர ப்ரம்ஹாத்மகாய தீமஹி
துந்தோ ஸ்வர்ணாகர்ஷணபைரவ ப்ரசோதயாத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஸ்வர்ணப்ரத என்று தொடங்கும் பன்னிரண்டு நாமாக்களால் பூஜிக்கின்றவனுக்கு ஸ்ரீ பைரவர் பொற்குவியலை அருள்வார் என்று சாஸ்திரமறிந்த பெரியோர் கூறுவர். அந்த பன்னிரண்டு நாமாக்கள்.**

ஓம் ஸ்வர்ணப்ரதாய நமஹ
ஓம் ஸ்வர்ணவர்ஷீ நமஹ
ஓம் ஸ்வர்ணாகர்ஷண பைரவ நமஹ
ஓம் பக்தப்ரியா நமஹ
ஓம் பக்த வச்ய நமஹ
ஓம் பக்தா பீஷ்ட பலப்ரத நமஹ
ஓம் ஸித்தித நமஹ
ஓம் கருணாமூர்த்தி நமஹ
ஓம் பக்தபீஷ்ட ப்ரபூரக நமஹ
ஓம் நிதிஸித்திப்ரத நமஹ

## ஸ்ரீ ஸ்வர்ணாகர்ஷண பைரவ அஷ்டகம்
## (உபாசன குலபதி ஸ்ரீ துர்க்கை சித்தர் அருளியது)

தனந்தரும் வயிரவன் தளிரடி பணிந்திடின்
தளர்வுகள் தீர்ந்து விடும்
மனந்திறந் தவன்பாதம் மலரிட்டு வாழ்த்திடின்
மகிழ்வுகள் வந்து விடும்
சினந்தவிர்த் தன்னையின் சின்மயப்புன்னகை
சிந்தையில் ஏற்றவனே
தனக்கிலை யீடு யாருமே என்பான்
தனமழை பெய்திடுவான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வினில் வளந்தர வையகம் நடந்தான்
வாரியே வழங்கிடுவான்
தாழ்வுகள் தீர்ந்திட தளர்வுகள் மறைந்திட
தானென வந்திடுவான்
காழ்ப்புகள் தீர்த்தான் கானகம் நின்றான்
காவலாய் வந்திடுவான்
தனக்கிலை யீடு யாருமே என்பான்
தனமழை பெய்திடுவான்

முழுநில வதனில் முறையோடு பூஜைகள்
முடித்திட அருளிடுவான்
உழுதவன் விதைப்பான் உடைமைகள் காப்பான்
உயர்வுறச் செய்திடுவான்
முழுமலர்த் தாமரை மாலையை ஜெபித்து
முடியினில் சூடிடுவேன்
தனக்கிலை யீடு யாருமே என்பான்
தனமழை பெய்திடுவான்

நான்மறை ஓதுவார் நடுவினில் இருப்பாள்
நான்முகன் நானென்பான்
தேனினில் பழத்தைச் சேர்த்தவன் ருசிப்பான்
தேவைகள் நிறைத்திடுவான்
வான்மழை எனவே வ்ளங்களைப் பொழிவான்
வாழ்ந்திட வாழ்த்திடுவான்
தனக்கிலை யீடு யாருமே என்பான்
தனமழை பெய்திடுவான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூதங்கள் யாவும் தனக்குள்ளே வைப்பான்
பூரணன் நான் என்பான்
நாதங்கள் ஒலிக்கும் நால்வகை மணிகளை
நாணினில் பூட்டிடுவான்
காலங்கள் கடந்து கட்டிடம் மாயம்
யாவையும் போக்கிடுவான்
தனக்கிலை யீடு யாருமே என்பான்
தனமழை பெய்திடுவான்

பொழில்களில் மணப்பான் பூசைகள் ஏற்பான்
பொன்குடம் ஏந்திடுவான்
கழல்களில் தண்டை கைகளில் மணியணி
கனகனாய் இருந்திடுவான்
நிழல்தரும் கற்பகம் நினைத்திட பொழிந்திடும்
நின்மலன் நானென்பான்
தனக்கிலை யீடு யாருமே என்பான்
தனமழை பெய்திடுவான்

சதுர்முகன் ஆணவத் தலையினைக் கொய்தான்
சத்தொடு சித்தானான்
புதரினில் பாம்பைத் தலையினில் வைத்தான்
புண்ணியம் செய்யென்றான்
பதரினைக் குவித்து செம்பினை எரித்தான்
பசும்பொன் இதுவென்றான்
தனக்கிலை யீடு யாருமே என்பான்
தனமழை பெய்திடுவான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெய ஜெய வடுக நாதனே சரணம்
வந்தருள் செய்திடுவாய்
ஜெய ஜெய ஷேத்திர பாலனே சரணம்
ஜெயங்களைத் தந்திடுவாய்
ஜெய ஜெய வயிரவா செகம் புகழ் தேவா
செல்வங்கள் தந்திடுவாய்
தனக்கிலை யீடு யாருமே என்பான்
தனமழை பெய்திடுவான்

## வேறு

அப்பனோ ஆடல் வல்லான் அம்மையோ அவனில் பாதி
அறுமுகனோ அகிலம் சுற்றி வித்தகனே வேழமுக விநாயகனே
விண்ணப்பமொன்றுண்டு விரைந்து பதில் தந்துவிடு
எழுதுகோல் தனையெடுத்து - இறை எண்ணங்கள் தான்வடிக்க
உந்துதலைத் தந்து நீயும்உதவிடுவாய் ஓங்கார கணபதியே!

## அருள்வாய் சிவனே!

அணுவின் அணுவில் நின்றாடுபவன் நீ!
அண்டமனைத்தையும் ஆட்டுவிப்பவனும் நீ!
சிவகாமியுடனுறை தேவாதி தேவனும் நீயே!
காலொன்றைத் தூக்கி நின்றாடும் கூத்தனே!
சாலவும் நானுன் நர்த்தனம் காணவே!
என்மலம் மூன்றையும் இன்றேயெரித்து
உன்கழலடியில் என்சிரமொன்றிட
அருள்வாய் தில்லையிலாடும் சிவனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேறென்ன வேண்டும் எனக்கு!

அருவமாய் உருவமாகி அருவுருவாய் அநாதியான
தில்லைச் சிற்சபேசனே! ஊழின் வலிமையை பிறப்பின்
வழியுணர்த்திய என் சிவனே! கடுமிடர்களை நீ தந்தாலும்

கொடுபிணிகளால் எனை வதைத்தாலும்
ஓம் நமசிவாய மந்திரத்தை அனுதினமும் சிவ சிவா எனவோதி
சித்தத்துள் உனையிருத்தி சித்திப்பதே அல்லாமல்
வேறென்ன வேண்டுமெனக்கு!

வை.சிவனருட்செல்வர்
சிவஅகம்
மிருசுவில்

## ஆதிசிவன் மைந்தனே வாழ்க வாழ்கவே!

ஆதிசிவன் மைந்தனே வாழ்க
அழகுதமிழ் முருகனே வாழ்க
சரவணப்பொய்கையில் உதித்தவனே வாழ்க
கார்த்திகைப் பெண்பால் உண்டவனே வாழ்க
அன்னை சக்தியால் அணைக்கப்பட்டவனே வாழ்க
அறுமுகமும் ஒருமுகமானவனே வாழ்க வாழ்கவே

அவ்வையுடன் அழகு தமிழில் உரையார்டியவனே வாழ்க
அறுபடை வீட்டில் அமர்ந்திருப்பவனே வாழ்க
அகிலமும் மயில்மீது வலம்வந்தவனே வாழ்க
அப்பனிடமே பழம் பெற வாதிட்டவனே வாழ்க
பிரணவம் தெரியாத பிரமனை சிறையிலிட்டவனே வாழ்க
பிதாவிற்கே பிரணவம் உபதேசித்தவனே வாழ்க வாழ்கவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இமயத்தில் இல்லறம் செய்பவனே வாழ்க
இந்திரன் மகளை இடப்பாகம் கொண்டவனே வாழ்க
வள்ளிக் குறத்தியை மயக்கி மணந்தவனே வாழ்க
வருந்தி அழைத்தால் வருந்தாமல் வருபவனே வாழ்க
அடியார்கள் குறை தீர்க்கும் சேவற்கொடியோனே வாழ்க
வடிவேலா குமரா சரவணா எனப்போற்றப்படுபவனே வாழ்க
வாழ்கவே

வை. சிவனருட்செல்வன்

## ஸ்ரீ ஞான வைரவர் சுவாமி வழிபாட்டுத் தோத்திரங்கள்

பரமனை மதித்திடாப் பங்கையாசனன்
னொருதலை கிள்ளியே ஒழிந்த வானவர்
குருதியு மகந்தையுங் கொண்டு தண்டமுன்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்.

வெஞ்சிலப் பரியழன் மீது போர்த்திடும்
அஞ்சனப் புகையென வால மாமெனச்
செஞ்சுடர் படிவமேற் செறிந்த மாமணிக்
கஞ்சுகக் கடவுள் பொற்கழல்க ளேத்துவோம்

எழியரை வலியர் வாட்டின் வலியரை யிருநீர்வைப்பி
னளியறத் தெய்வம் வாட்டு மெனுமுரைக் கமையவன்றே
தெளியு மாவலியைச் செற்றேற் செகுத்துரிக் கவயம் போர்த்த
வளியுளர் கச்சிகாவல் வயிரவர்க் கன்புசெய்வோம். 1

சென்றென னெதிரா நின்றே ராவணச் செருக்கி னிற்கு
மன்றளந் துளவினாற்கு மாமயக் கொழிய நேரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வின்றியல் பிறவுஞ் சொன்னா ன.்.தவன் சிறிதுமெண்ணான்
கன்றிய வெகுளி மிக்கான் வயிரவக் கடவுட் செல்வன். 2

பற்றினன் வயிரத் தண்டம் பகிரண்டமதிர வோச்சிச்
சுற்றின னுருமுக்காலத் தெழித்தனன் றுளவமார்பி
னெற்றின னெற்றலோடு மெறிபடு சண்டவாயு
முற்றுற விற்று வீழ மூரிவெங் கிரியிற் சாய்ந்தான். 3

கருநிறக் கமஞ்சூன் கேக் காரதளுரித்து வாங்கித்
திருநிறத் தமைபக் காள கஞ்சுக மென்னச் சேர்த்தி
வெரிநுறப் பிடுங்கு மென்பு தண்டென விடுத்துக் கொண்டாள்
மருமலர்த்துளவ மாயோனாவை மயக்கந்தீர்ந்தான். 4

எகிமை துயர்த்த வண்ண லிரும்பவந் தொலைப்ப வேனைப்
பகவர் தமகந்தை மாற்றப் பண்ணவர் மதர்ப்புஞ் சிந்த
மிகுபெருங் கருணை தன்னால் வேதநாயகனுள்ளத்து
மகிழ்வொடு புரிந்தா னென்ப வயிரவக் கடவுடன்னை 5

நீலுறு சுடரின் மெய்யு ஞெகிழிக ளாற்றுந் தாளு
மாலம துயிர்க்குஞ் செங்கேமுரவ வெற்றரையுஞ் சென்னி
மாலைகளநந்த கோடி வயின் பெயரு மார்புஞ்
சூலமும் பாசு நாணுந் துடியு மேந்திப பொற்றேளும். 6

முக்கணுந் திங்களே போன் முளைத்த வாளெயிறும் வன்னிச்
செக்கரஞ் சடையின் சீருஞ் செயிர் கெழுநகையு மாக
வுக்கிர வடிவு கொண்டாங் குதித்திடு வடுகன் றன்னை
மைக் கிளர் கண்டத் தெந்தை நோக்கி யேவகுத்துச் சொல்வான். 7

திகழ்ந்த நஞ்சிறுவனாகுஞ் செங்கமலத் தோன் சென்னி
யஜகழ்ந்தது நம்மை யுச்சியிருந்ததே யதனை வல்லே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யகழ்ந்தனை கரத்திலேந்தி யவனுயிர் நல்கித் தம்மைப்
புகழ்ந்திடு முனிவர் தேவர் புரந்தொறும் போதியன்றே. 8

போந்தனை யனையர் தங்கள புலவுடற் சோரி தானே
வாய்ந்த தோ ரையமாக வாங்குதி வாங்கும் வேலை
வீந்தவர் தமக்கு மீட்டும் வியனுயி ருதவி யன்னே
ராய்ந்திடு மகந்தை மாற்றி யண்டமேலடைதி யம்மா 9

பொறியுறு முயிர்களும் புவனம் யாவையு
மிறுதியா யழிவுறுமீமத் தெல்லையின்
மறையெனு ஞாளியை யுயர்த்து மற்றவ
னுறுவதோர் மகிழ்ச்சியாலுலவு மென்பபே 10

சூடுவன் நெஞ்சிடை வைப்பாள் பிரான் என்று
பாடுவன் பன் மலர் தூவிப் பணிந்து நின்
றாடுவன் ஆடி அமரர் பிரான் என்று
நாடுவன் நாளின் றறிவது தானே 11

போற்றி என் பார்அம ரர்புனி தன் அடி
போற்றி என் பார் அசுரர் புனி தன் அடி
போற்றி என் பார் மனிதர் புனிதன் அடி
போற்றி என் அன்புன் பொ லியவைத் தேனெ 12

நின்ற வயிரவி நீலி நிசாசரி
ஒன்றும் இரண்டும் ஒருங்கிய உள்ளத்துச்
சென்றருள் நாயகி தேவர் பிரானுக்கே
நன்றருள் ஞாலத்து நாடிடுஞ் சாற்றியே. 13

நடந்து வயிரவன் சூல கபாலி
கடந்த பகைவனைக் கண்ணது போக்கித்
தொடர்ந்த வுயிரது வுண்ணும் பொழுது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படர்ந்த வுடல்கொடு பந்தாடலாமே 14

ஆமேவப் பூண்டருளாதி வயிரவன்
ஆமே கபாலமுஞ் சூலமுங் கைக் கொண்டங்
காமே தமருக பாசமுங் கையது
வாமே சிரித்தோடு வாளதுகையே 15

கையவை யாறுஞ் கருத்துற நோக்கிடு
மெய்யது செம்மை விளங்கு வயிரவா
துய்யருள்ளத்தில் துளங்கு மெய்யயுற்றதாய்ப்
பொய்வகை விட்டுநீ பூசனை செய்யே 16

உடலில் துவக்கிய வேடம் உயிர்க்காக
உடல் சுழன்றால் வேட உடனே சுழலும்
உடலுயிர் உண்மையென நேர்ந்துகொள்ளாதார்
கடலில் அகப்பட்ட கட்டையொத்தாரே 17





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் சிறப்புமிக்க வைரவர் ஆலயங்கள்

01. மட்டக்களப்பு - ஸ்ரீ நரசிங்க வைரவ சுவாமி ஆலயம் இலங்கையின் மட்டக்களப்பு நகரில் அமைந்துள்ளது. மூலமூர்த்தி வெண்கலத்திலான திருமேனி உடையவர். எழுந்தருளி மூர்த்தியாக ஒரு சூலமும் மூல மூர்த்தியுடன் காணப்படுகின்றது.
மட்டக்களப்பு -- ஆரம்யம்பதி அரசடி ஸ்ரீ ஞானவைரவர் ஆலயம்.

02. யாழ் தீவகம் - ஊர்காவற்றுறை, கரம்பொன் கிழக்கு அண்டினோர் துயர் தீர்க்கும் அருள்மிகு ஞான வைரவர் ஆலயம்.

03. யாழ் தெல்லிப்பளை - ஞானவைரவர் கோயில் மாவிட்டபுரம் புகைவண்டி நிலையத்திற்கு கிழக்கே பளை என்ற கிராமத்தில் உள்ளது. உலகில் சிறப்பு மிக்க ஆலயம் இராஜகோபுரத்தைக் கொண்டு விளங்குகின்றது.

04. யாழ் கொக்குவில் தலையாளி - ஸ்ரீ ஞானவைரவர் ஆலயம், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் புராணபடனம் செய்த ஆலயம் ஆகும்.

05. திருகோணமலை - ஸ்ரீ ஞானவைரவர் ஆலயம். திருகோணமலை நகரில் அமைந்துள்ளது.

06. பாலையூற்று - ஸ்ரீ ஞானவைரவர் கோயில் திருகோணமலை கண்டி வீதியில் அனுராதபுரம் சந்திக்கு தெற்குப்பக்கமாக பாலையூற்று கிராமத்தில் அமைந்துள்ளது.

07. உவர் மலை - ஸ்ரீ ஞானவைரவர் கோயில் திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறைமுகத்திற்கு அண்மையில் அமைந்துள்ளது.

08. பெருந்தெரு - ஸ்ரீ ஞானவைரவர் கோயில் திருகோணமலை நகரில் பிரதான வீதியில் விக்கினேஸ்வரா மகா வித்தியாலத்திற்கு அருகாமையில் அமைந்துள்ளது.

09. செக்கடி - ஸ்ரீ ஞானவைரவர் ஆலயம் திருகோணமலை நகரில் மத்திய வீதிக்கருகில் அமைந்துள்ளது.

10. யாழ் கொக்குவில் கிழக்கு கோணாவளை - வைரவர் சுவாமி கோவில் யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்கு அருகில் அமைந்துள்ளது.

11. விழிசிட்டி - ஞானவைரவர் சுவாமி ஆலயம். தெல்லிப்பளை தென்மேற்கில் உள்ள விழிசிட்டி கிராமத்தின் மத்தியில் உள்ளது. இவ் ஆலயத்தை புளியடி வைரவர் எனவும் அழைப்பர்.

12. இணுவில் வைரவர் கோயில்கள் - மாணிக்க வைரவர் கோயில், விளாத்தியடி வைரவர் கோயில், காரைக்கால் வைரவர் கோயில்(சித்தர்கள் வாழ்ந்த காலம், நோய்ப்பிணி தீர்க்கும் காலமாக விளங்கியது.) மருதனார்மட வைரவர் கோயில் - (யோகர்சுவாமிகள் நாள் தோறும் வந்து வணங்கிச் தங்கிச் சென்ற ஆலயம்.)

13. யாழ் சங்கானை - நிகரை ஞானவைரவர் ஆலயம்.

14. யாழ் உரும்பிராய் - காட்டு வைரவர் கோயில்

15. மலையகம் - சீதாவாக்கை வைரவர் ஆலயம்

16. யாழ் கல்லுண்டாய் வைரவர் - மிகப் பழமையான ஆலயம். யாழ் நகரில் இருந்து கடற்கரையோரமாக காரைநகர் செல்லும் வீதியில் அமைந்துள்ளது.

17. கொம்பாத்தை ஞானவைரவர் ஆலயம் - ஆயிலி. காரைநகர்.

18. காரைநகர் சத்திரந்தை ஸ்ரீ ஞான வைரவர் ஆலயம்.

19. சித்திரமேழி - அருள்மிகு - ஞானவைரவர் ஆலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலபுராணங்களில் வைரவப் பாடல்கள்

(பல தல புராணங்களில் வைரவரைப் போற்றி பாடிள்ளனர். அப்புராணங்களையும், பாடியோர்களையும் கீழே நோக்கலாம். இதன் மூலம் வைரவர் பெருமை புலனாகின்றது.)

| | | |
|---|---|---|
| 01. | சீர்காழிப்புராணம் | - அருணாசலக் கவிராயர் |
| 02. | மாயூரப் புராணம் | - மீனாட்சி சுந்தரம்பிள்ளை |
| 03. | காசி ரகசியம் | - மீனாட்சி சுந்தரம்பிள்ளை |
| 04. | மண்ணிப்படிக்கரைப் புராணம் | - மீனாட்சி சுந்தரம்பிள்ளை |
| 05. | பழைய காஞ்சிப் புராணம் | - கச்சிக்கச்சாலையர் |
| 06. | காஞ்சிப் புராணம் | - ஸ்ரீ சிவஞான சுவாமிகள் |
| 07. | புலியூர்ப் புராணம் | - மீனாட்சி சுந்தரம்பிள்ளை |
| 08. | கடம்ப வனப் புராணம் | - மீனாட்சி சுந்தரம்பிள்ளை |
| 09. | திருப்பாதிப் புலியூர்ப் புராணம் | - மீனாட்சி சுந்தரம்பிள்ளை |
| 10. | திருச்செந்தூர்ப் புராணம் | - மீனாட்சி சுந்தரம்பிள்ளை |
| 11. | பவானி கூடற் புராணம் | - மீனாட்சி சுந்தரம்பிள்ளை |
| 12. | திருநானக்கரோணப் புராணம் | - மீனாட்சி சுந்தரம்பிள்ளை |
| 13. | திருவம்பர் புராணம் | - நெல்லைப்பிள்ளை |
| 14. | தனியூர்ப்புராணம் | - நெல்லைப்பிள்ளை |
| 15 | திருவாளொனிப் புத்தூர் புராணம் | - நெல்லையப்பிள்ளை |
| 16. | திருநெல்வேலிப்புராணம் | - நெல்லையப்பிள்ளை |
| 17. | கந்த பராணம் | - ஸ்ரீ கச்சியப்ப சிவாச்சாரியார் |
| 18. | திருவானைக்காப் புராணம் | - ஸ்ரீ கச்சியப்ப சிவாச்சாரியார் |
| 19. | திருப்பூவணப் புராணம் | - கந்தசாமிப் புலவர் |
| 20. | திருக்குடத்தைப் புராணம் | - மீனாட்சி சுந்தரம்பிள்ளை |
| 21. | கோயிலூர் புராணம் | - மீனாட்சி சுந்தரம்பிள்ளை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 22. | ஆதித்தகிரிப் புராணம் | - மீனாட்சி சுந்தரம்பிள்ளை |
| 23. | திருநல்லூர்ப்பெருமண புராணம் | - மீனாட்சி சுந்தரம்பிள்ளை |
| 24. | திரக்குறுக்கைப் புராணம் | - மீனாட்சி சுந்தரம்பிள்ளை |
| 25. | உறையூர்ப் புராணம் | - மீனாட்சி சுந்தரம்பிள்ளை |
| 26. | அவிநாசிப் புராணம் | - சிவக்கொழுந்து தேசிகள் |
| 27. | மருத வனப்புராணம் | - சிவக்கொழுந்து தேசிகள் |
| 28. | விளத்தொட்டிப் புராணம் | - கருணாகரக் கவிராயர் |
| 29. | கடம்பர் கோயிற் புராணம் | - கருணாகரக் கவிராயர் |
| 30. | திருவோத்தூர் புராணம் | - கருணாகரக் கவிராயர் |
| 31. | திருவேட்டக்குடி புராணம் | - சிதம்பரநதாபிள்ளை |
| 32. | திருமலைத் தல புராணம் | - சிவராமலிங்கம்பிள்ளை |
| 33. | சிதம்பர சபாநாத புராணம் | - திருவாவடுதுறை ஆதினம், சபாபதி நாவலர் |
| 34. | திருத்துருத்திப் புராணம் | - மீனாட்சி சுந்தரம்பிள்ளை |
| 35. | துறைசைப் புராணம் | - சாத்திரம் சாமிநாதமுனிவர் |
| 36. | கடம்பவனப் புராணம் | - வீம்நாத பண்டிதர் |
| 37. | திருநாளைக்காரோணப் புராணம் | - மினாட்சி சுந்தரம் பிள்ளை |
| 38. | ஈழத்துச் சிதம்பர புராணம் | - இளமுருகனார் |
| 39. | விசுவேச புராணம் | - பண்டிதர் க.மயில்வாகனம் |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்மிகு ஞானவைரவர் அர்ச்சனை மாலை -108

**(பத்திர புஸ்பங்களை எடுத்து ஒவ்வொன்றாக இட்டு அர்ச்சனை வழிபாடு செய்து வந்தால் நினைத்தவை நிறைவேறும்)**

01. பிரம்மன்றன் சிரமரிந்த பெருமாளே போற்றி
02. இரப்பதற்கு கொரு தலையை உடையானே போற்றி
03. கணங்களொ வாகனமாய் யுடையானே போற்றி
04. அணங்காக காளியை உடையானே போற்றி
05. அமலனுக் கொருமந்தனாக வந்தவரே போற்றி
06. இமவன்றன் பத்திரியின் புத்திரனே போற்றி
07. கையொன்றில் திரசூலம் உடையவரே போற்றி
08. மையொழுகி கன்னிக்கு மகனாரே போற்றி
09. அம்மை சிவகாமி பாலனே போற்றி
10. இம்மையிலே எல்லாம் தந்தவனே போற்றி
11. அடியவர்க் கெளிமையாய் வந்தவனே போற்றி
12. முடியுடைய வேந்தர்க்கு முதல்வனே போற்றி
13. படியிலே பாபங்கள் அறுப்பாய் போற்றி
14. மிடியுடையவர் மிடியினை மடிப்பவர் போற்றி
15. கந்தனுக்கு முன்வந்த கருணா மூர்த்தி போற்றி
16. எந்தனுக்கு அருள்புரிய வந்தவரே போற்றி
17. கணபதிக்கு பின் வந் கபாலியே போற்றி
18. கணப்பொழுதினில் வினைகளை சாடிடுவாய் போற்றி
19. காசினியோர் தொழுதிருந்த கடவுளே போற்றி
20. பேசினிய பெருமானே பெரியானே போற்றி
21. தரணியில் உயிர் வாழ வந்தவரே போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22. நாரணர்க்கும் நான்முகர்க்கும் நாயகனே போற்றி
23. ஆரணங்களறியாத ஐயனே போற்றி
24. மாரனை வென்றெடுத்த மதியனே போற்றி
25. அகண்ட பரிபூரணமாம் ஐயனாரே போற்றி
26. மகரிஷிகள் போற்றுகின்ற மாமணியே போற்றி
27. அம்மை சிவகாமி பாலகனே போற்றி
28. மும்மைக்கும் முதலாக உள்ளானே போற்றி
29. ஆதி அந்தம் இல்லாதவரே போற்றி
30. பாதிமதி வேணியன் மகனே போற்றி
31. அண்ட மெல்லாங் கடந்த அருட்சுடரே போற்றி
32. மண்டினி ஞாலத்தை மகிழ்விப்பவரே போற்றி
33. சிவமூர்த்தமாக நிற்பவரே போற்றி
34. துதிப்போர்க்கு சிற்றையில் அருள்பவரே போற்றி
35. பழவினைகள் எல்லாம ஒழிப்பவரே போற்றி
36. பைரவர்கள் வணங்கும் பகவானே போற்றி
37. வைரவர்கள் என்னும் பெயருடைய போற்றி
38. வடுகாய நாம என்று வணங்கிடுவோம் போற்றி
39. சுடுகாட்டில் நடமாடும் சூலபாணியே போற்றி
40. பைரவ புவனத்தில் இருப்பவரே போற்றி
41. பிரதான ஞான வைரவரே போற்றி
42. தோற்றத்தில் நீல நிறமுடையவரே போற்றி
43. ஆற்றலிலும் அம்மானை வென்றவரே போற்றி
44. திருவடியில் சிலம்பினை அணிந்தவரே போற்றி
45. அருள்மறைகள் ஆரங்கம் அணிந்தவரே போற்றி
46. மார்பிலே தலை மாலை உடையவரே போற்றி
47. கார் போன்ற நிறத்தை உடையவரே போற்றி
48. மழுவென்னும் ஆயுதம் உடையவரே போற்றி
49. அழுதார்க்கு அருள் புரியும் ஆண்டவரே போற்றி
50. பாச வேரறுக்கும் பகவானே போற்றி
51. உடுக்கை ஏந்தி ஒலிப்பவரே போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

52. முக்கண்கள் உடைய முதல்வனே போற்றி
53. கடுக்கை மாலை பூண்டவரே போற்றி
54. எக்காலமுடமெனைக் காப்பவரே போற்றி
55. பயங்கர தோற்றம் உடையவரே போற்றி
56. வியக்கத்தக்க அற்புதங்கள் செய்தவரே போற்றி
57. கோரப் பற்களினை உடையவரே போற்றி
58. வீரவேல் முருகனுக்கு தமயனானவரே போற்றி
59. செஞ்சடையை உடைய சேவகனே போற்றி
60. நஞ்சணி கண்டனின் நன் மகனே போற்றி
61. சீற்றநகை கொண்ட முகமுடையோய் போற்றி
62. ஏற்றமெல்லாம் எமக்களிக்கும் நாயகனே போற்றி
63. ஆணவத்தை அடக்கிய ஆண்டவனே போற்றி
64. ஞானத்தை நமக்களித்த நாயகனே போற்றி
65. முனிவர்களின் செருக்கை அழித்தவனே போற்றி
66. நனி பெரிதும் ஞானத்தை அழித்தவனே போற்றி
67. தேவர்களின் அகங்காரம் அழித்தவனே போற்றி
68. பாவவினை பற்றறுக்கும் பகவானே போற்றி
69. ஊழிக்காலத்தில் உலகினை அழிப்பவரே போற்றி
70. ஆழியிலும் எம்மை அணைப்பவரே போற்றி
71. நான் மறையே நாய் வடிவாய் ஆனவரே போற்றி
72. கான் முளையாம் எம்மைக் காத்தருள்வாய் போற்றி
73. அறுவகை சமயத்தின் பைரவரே போற்றி
74. நறுமலர் மாலையை அணிபவரே போற்றி
75. வடமாலை தனை விரும்புபவரே போற்றி
76. நடைபாதை தன்னையும் தயர்ந்தவரே போற்றி
77. புலியடியும், புங்கடியும் இருப்பவரே போற்றி
78. தெளிவுடையோர் உள்ளத்து இருப்பவரே
79. பரஞானம் தந்தருளும் பரமனே போற்றி
80. காவலுக்கு ஒரு தெய்வம் ஆனவரே போற்றி
81. ஏவலுக்கு மியைந்து எம்மைக் காத்தவரே போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

82. சேஷ்திர பாலகர் ஆனவரே போற்றி

83. ஏத்தி ஏழுவார்க்கண் ரானவரே போற்றி

84. பெருந்தொந்தியுடைய பெம்மானே போற்றி

85. அருமறைகள் ஓலமிடும் ஆண்டகையே போற்றி

86. உருண்ட கண்களையுடையவரே போற்றி

87. மருண்ட மனத்தை மலர்விப்பவரே போற்றி

88. ஆடை எதுவும் அற்ற பெருமானே போற்றி

89. ஓடையிலே ஊறிவரும் அருஞ்சுனையே போற்றி

90. அரவ அணிகலன்கள் அணிந்தவரே போற்றி

91. பரவை இனியவரே பகவானே போற்றி

92. எண்ணெய் மூர்த்தங்கள் இசைந்தவரே போற்றி

93. மண்ணவரும் விண்ணவரும் மகிழ்ந்தவரே போற்றி

94. அகிதாங்க பைரவரானவரே போற்றி

95. பசி தீர்க்க வந்தருளும் பகவானே போற்றி

96. குரு பைரவாகி நின்ற கோமானே

97. அருமறைக ளுக்கு மெட்டா ஆண்டவனே போற்றி

98. கண்ட பைரவர் ஆனவரே போற்றி

99. கண்ட இடமெலாம் கருணை செய்வார் போற்றி

100. குரோத பைரவர் ஆனவரே போற்றி

101. விரோத மொன்றில்லா விழுத்துணையே போற்றி

102. உன்மத்த பைரவர் ஆனவரே போற்றி

103. ஜென்மத்திலும் உமை மறவேன் தெய்வமே போற்றி

104. கபால பைரவர் ஆனவரே போற்றி

105. சபாதியின் மைந்தர் ஆனவரே போற்றி

106 சபரிமலை ஐயப்பா சரணம் சரணம்

107. வடுகாய நம ஓம் வடுகாய போற்றி

108. வைரவ சுவாமியே போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீகாலபைரவர் 108 போற்றி

| | | |
|---|---|---|
| ஓம் | பைரவனே | போற்றி |
| ஓம் | பயநாசகனே | போற்றி |
| ஓம் | அஷ்டரூபனே | போற்றி |
| ஓம் | அஷ்டமித் தோன்றலே | போற்றி |
| ஓம் | அயன்குருவே | போற்றி |
| ஓம் | அறக்காலனே | போற்றி |
| ஓம் | அகந்தையழிப்பவனே | போற்றி |
| ஓம் | அடங்காரின் அழிவே | போற்றி |
| ஓம் | அற்புதனே | போற்றி |
| ஓம் | அசிதாங்க பைரவனே | போற்றி |
| ஓம் | ஆனந்த பைரவனே | போற்றி |
| ஓம் | ஆலயக்காவலனே | போற்றி |
| ஓம் | இன்னல் பொடிப்பவனே | போற்றி |
| ஓம் | இடுகாட்ட இருப்பவனே | போற்றி |
| ஓம் | உக்ரபைரவனே | போற்றி |
| ஓம் | உடுக்கையேந்தியவனே | போற்றி |
| ஓம் | உதிரங்குடித்தவனே | போற்றி |
| ஓம் | உன்மதபைரவனே | போற்றி |
| ஓம் | உறங்கையில் காப்பவனே | போற்றி |
| ஓம் | ஊழித்தருள்வோனே | போற்றி |
| ஓம் | எல்லைத்தேவனே | போற்றி |
| ஓம் | எளிதில் இரங்குபவனே | போற்றி |
| ஓம் | கபாலதாரியே | போற்றி |
| ஓம் | கங்காள மூர்த்தியே | போற்றி |
| ஓம் | கர்வபங்கனே | போற்றி |
| ஓம் | கல்பாந்தபைரவனே | போற்றி |
| ஓம் | கதாயுதனே | போற்றி |
| ஓம் | கனல் வீசுங் கண்ணனே | போற்றி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் கருமேகநிறனே போற்றி
ஓம் கட்வாங்கதாரியே போற்றி
ஓம் களவைக்குலைப்போனே போற்றி
ஓம் கருணாமூர்த்தியே போற்றி
ஓம் காலபைரவனே போற்றி
ஓம் காபாலிகர்தேவனே போற்றி
ஓம் கார்த்திகையில் பிறந்தவனே போற்றி
ஓம் காளாஷ்டமிநாதனே போற்றி
ஓம் காசிநாதனே போற்றி
ஓம் காவல் தெய்வமே போற்றி
ஓம் கிரோத பைரவனே போற்றி
ஓம் கொன்றைப்பிரியவனே போற்றி
ஓம் சண்ட பைரவனே போற்றி
ஓம் சட்டைப் நாதனே போற்றி
ஓம் சம்ஹார பைரவனே போற்றி
ஓம் சம்ஹாரகால பைரவனே போற்றி
ஓம் சிவத்தோன்றலே போற்றி
ஓம் சிவாலயத்திருப்போனே போற்றி
ஓம் சிஷகனே போற்றி
ஓம் சீர்காழித்திருப்போனே போற்றி
ஓம் சுடர்ச்சடையோனே போற்றி
ஓம் சுதந்திர பைரவனே போற்றி
ஓம் சிவ அம்சனே போற்றி
ஓம் சுவேச்சா பைரவனே போற்றி
ஓம் சூழதாரியே போற்றி
ஓம் சூழ் வினையறுப்பவனே போற்றி
ஓம் செம்மேனியனே போற்றி
ஓம் க்ஷேத்ரபாலனே போற்றி
ஓம் தனிச்சனனதியுளானே போற்றி
ஓம் தலங்களின் காவலனே போற்றி
ஓம் தீதழிப்பவனே போற்றி
ஓம் துஸ்வப்னநாசகனே போற்றி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ஓம் | தெற்கு நோக்கனே | போற்றி |
| ஓம் | தைரியமளிப்பவனே | போற்றி |
| ஓம் | நவரஸரூபனே | போற்றி |
| ஓம் | நரசிம்மரூபனே | போற்றி |
| ஓம் | நள்ளிரவு நாயகனே | போற்றி |
| ஓம் | நரகம் நீக்குபவனே | போற்றி |
| ஓம் | நாய் வாகனனே | போற்றி |
| ஓம் | நாடியருள்வோனே | போற்றி |
| ஓம் | நிமலனே | போற்றி |
| ஓம் | நிர்வாணனே | போற்றி |
| ஓம் | நிறைவளிப்பவனே | போற்றி |
| ஓம் | நின்றருள்வோனே | போற்றி |
| ஓம் | பயங்கர ஆயுதனே | போற்றி |
| ஓம் | பகையழிப்பவனே | போற்றி |
| ஓம் | பரசு ஏந்தியவனே | போற்றி |
| ஓம் | பலிபீடத்துறைவோனே | போற்றி |
| ஓம் | பாபபஷ்யனே | போற்றி |
| ஓம் | பாசம் குலைப்போனே | போற்றி |
| ஓம் | பால பைரவனே | போற்றி |
| ஓம் | பாம்பணியனே | போற்றி |
| ஓம் | பிரளயகாலனே | போற்றி |
| ஓம் | பிரம்மசிரத்சேனே | போற்றி |
| ஓம் | பூஷண பைரவனே | போற்றி |
| ஓம் | பூதப்ரேதநாதனே | போற்றி |
| ஓம் | பெரியவனே | போற்றி |
| ஓம் | பைராக்கியர்நாதனே | போற்றி |
| ஓம் | மல நாசகனே | போற்றி |
| ஓம் | மஹா பைரவனே | போற்றி |
| ஓம் | மணிஞானனே | போற்றி |
| ஓம் | மகர குண்டலனே | போற்றி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ஓம் | மகோதரனே | போற்றி |
| ஓம் | மார்த்தாண்ட பைரவனே | போற்றி |
| ஓம் | முக்கண்ணனே | போற்றி |
| ஓம் | முனீஸ்வரனே | போற்றி |
| ஓம் | மூலமூர்த்தியே | போற்றி |
| ஓம் | யமவாதனை நீக்குபவனே | போற்றி |
| ஓம் | யாவர்க்கும் எளியவனே | போற்றி |
| ஓம் | ருத்ரனே | போற்றி |
| ஓம் | ருத்ராஷதாரியே | போற்றி |
| ஓம் | வடுக பைரவனே | போற்றி |
| ஓம் | வடுகூர்நாதனே | போற்றி |
| ஓம் | வடகிழக்கருள்வோனே | போற்றி |
| ஓம் | வடைமாலைப்பிரியனே | போற்றி |
| ஓம் | வாரணாசி வேந்தே | போற்றி |
| ஓம் | வாமனர்க்கருளியவனே | போற்றி |
| ஓம் | விபீஷண பைரவனே | போற்றி |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்ச்சனை நாமாக்கள்

ஓம் வடுகாய நம
ஓம் காமதாய நம
ஓம் பைரவவாய நம
ஓம் பூதநாதாய நம
ஓம் வீராய நம
ஓம் பலிப்ரியாய நம
ஓம் மஹாபலாய நம
ஓம் காளிகாதனயாய நம
ஓம் டகாரபுவே நம
ஓம் டகுரபதயே நம
ஓம் டக்காப்ரியாய ந
ஓம் திவாநாதாய நம
ஓம் பயங்கராய நம
ஓம் பூதபதயே நம
ஓம் பவானீஷாய நம
ஓம் வனராஜாய நம
ஓம் லம்படாய நம
ஓம் சுதாநாதாய நம
ஓம் ஹிரித்ரகாய நம
ஓம் சூலஸ்தாய நம
ஓம் ப்ரணாயகாய நம
ஓம் விபாவஸவே நம
ஓம் பைரவநாம்னே நம
ஓம் பைரவ்தனாய நம
ஓம் பஹுநேத்ரே நம
ஓம் வடுகபைரவாய நம
நாநாவித மந்த்ர புஷ்பாணி ஸமர்ப்பயாமி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீபைரவ க்ஷேத்திரக் கோவை

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்று முறையே வழிபட்டு, சீரிய மனப்பக்குவம் எய்துவது முந்தையர் கண்ட முறை.ஷேத்திர (தல) யாத்திரை செய்வது நம் நாட்டுக்கு உரித்தான பண்பு. வானளாவி உயர்ந்த கோபுரங்கள்தான் இந்நாட்டுக்கு பல்வேறு தொழில் புரியும் வித்தகர்களையும், அரசர்களையும் தன்னிலே ஒன்றுபடுத்திக் கொண்டு, உயர்வு,தாழ்வு, அற்ற சமுதாயப் பணியிலே சமூகம் தன்னையே அர்ப்பணித்துக் கொண்டு, வாழ வழி செய்துள்ளது. பூமாலை கட்டும் தொழிலிலிருந்து, தச்சர், கொல்லர், அர்ச்சகர், சமைப்பவர் என்று பலருக்கும் தொழில் வாய்ப்பு ஒரே இடத்தில் கொடுக்கும் இடம் தான் ஆலயம். ஊதியத்தோடு மன அமைதியும் பெறும் ஒரு அநுபவப்பள்ளிக்கூடம்.

இவ்வுடலே ஒருஷேத்திரம். இவ்வுடலானஷேத்திரம் தூய்மை பெற்று, மனம் செம்மை பெற்று நாம் உய்யும் வகை செய்யும் தூய தலங்களே புறத்தே விளங்கும் ஆலயங்கள் ஆகும்.

இந்தத் தூய்மையான தலங்களையெல்லாம் காவல் புரியும் வீரர் கால பைரவர். அந்தக் கால பைரவர் பெருமையைப் பல கவிஞர்களின் வாக்கிலே எழுந்த தல புராணங்கள், பாடல்கள் மூலம் வாசகர்கள் உணரும் வண்ணம் இங்கே தருகின்றோம்.

### 01. கந்த புராணம்

01. பரமனை மதித்திடாப் பங்க யாசன
னொருதலை கிள்ளியே யொழிந்த வானவர்
குருதியு மகந்தையுங் கொண்டு தண்டமுன்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்.

முற்காலத்தில் சிவபெருமானை அவமதித்த தாமரையாசனாகிய பிரம்மதேவனது ஒப்பற்ற நடுத்தலையைக்கிள்ளி மற்றைய தேவர்களது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதிரத்தையும் கருவத்தையும் வாங்கிக் கொண்டு அவர்களுக்குத் தண்டனை புரிந்த வைரவக்கடவுளைத் துதிப்போம்.

02. வெஞ்சினப் பரியழுன் மீது போர்த்திடு
மஞ்சனப் புகையென வால மாமெனச்
செஞ்சுசுடர் படிவமேற் செறிந்த மாமணிக்
கஞ்சுகக் கடவுள் பொற் கழல் களேத்துவாம்.

கடுங்கோபமுள்ள வடவாமுகாக்கினியானது, தன்மீது போர்த்துக் கொண்ட கரு நிறமமைந்த புகையைப் போலவும் ஆலாலத்தைப் போலவும், சிவந்த பிரகாசமுடைய திருமேனியின் மீது விசேடித்த சிறப்பமைந்த நீலமணியின் நிறம் வாய்ந்த சட்டையணிந்துள்ள வைரவக் கடவுளின் பொன்மயமான திருவடிகளைத் துதிப்போம்.

## 02. பழைய காஞ்சிப்புராணம்

கொச்சையறி வுற்பவமாங் கொள்கையினா லரிபிரமர் கூடி வீணின்
மெய்ச்சமரம் புரிந்திகலி யொருவரொரு வரை மிகவும் வெறுக்கு நாளி
லாச்சுறவுற்றவரகந்தை விடுமாறு நெருங்கி யினிதருளே செய்யுங்
கச்சிவடு கக்கடவுண் முச்சிகை வேற் படையினையே கருதி
-வாழ்வோம்.

அஃறிணை உயிராகிய அன்ன, வராகப் பிறப்படைந்ததனால் பிரம்ம, விஷ்ணுவும் சேர்ந்து சண்டையிட்டுப் பகைத்து ஒருவர்க்கொருவர் மிகவும் வெறுத்துக் கொள்ளும் நாளில் அவர்களுடைய கர்வத்தை விடும்படியாகவும், நெருக்கிய முக்கியும் திருவருள் புரியும் காஞ்சி வடுகக் கடவுளின் முத்தலைச் சூலாயுதத்தினைப் போற்றுவோம்.

## 03. திருவாவடுதுறைப் புராணம்

காலன் மார்பிற் கான்மலர் நீட்டிய
சீலன் கோயிற் றிறமிகழ்ந் தோர்களைச்
சூல மேற்றுஞ் சுழல்விழிக் கேத்திர
பாலன் பொற்பதம் பற்றிப் பணிகுவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமனுடைய மார்பு முறியும்படி மலர் போன்ற காலைத் தூக்கி நீட்டி உதைத்தருளிய குணசீலனாம் வடுகக் கடவுளின் கோயிற் பெருமைகளை இகழ்ந்து பேசியவர்களைக் சூலாயுதத்தால் குத்தும் சுழல் கண்ணனாகிய வைரவரைக் கடவுளின் பொன்னடிகளைப் பணிவோம்.

## 4. காஞ்சிப்புராணம்

எளியரை வலியர் வாட்டின் வலியரை யிருநீர் வைப்பி
னளியறத் தெய்வம் வாட்டு மெனுமுரைக் கமைய வன்றே
தெளியுமா வலியைச் சொற்றோற் செகுத்துரிக் கவயம்
வளியுளர் கச்ச காவல் வயிரவர்க் கன்பு செய்வோம்

கடல் சூழ்ந்த உலகத்தின் கண் விசுவாசமில்லாமல் எளியாரை வலியார் அடித்தால் வலியாரைத் தெய்வம் பார்த்து அடிக்கும் என்னும் பழமொழிக்கிணங்க பூர்வம் மாவலி தலைமேல் கால்தூக்கிய வாமனனை அழித்து அவன் தோலைக் கவசமாகப் போர்த்துக் கொண்ட கச்சிக் காவலரும், காருண்ய மூர்த்தியுமான வயிரவ மூர்த்திக்கு அன்பு செலுத்துவோம்.

## 5. திருவானைக்காப் புராணம்

உலகமளித்தல் சுதந்திர மன்றுவண
முயர்த்தோர் கெனவே வன்சே
யிலகு முருவம் பொடித்த வன்பா
லெழுந்து படைப்புஞ் சுதந்திரமன்
றலர்மெல் லணையாற் கெனவவனை
யரங்கத் திசைமாமு கனாக்கிப்
பலரும் வெருவப் பொழிநெய்த் தோர்ப்பயிக்கம்
புகுந்தோம் பதம் பணிவோம்.

கருடக் கொடியோனாகிய மகா விஷ்ணுவுக்கு உலகம் அளித்து பாதுகாத்தல் சுதந்திரமான தன்றென்று கூற, உயிர்களை படைப்பதும் பதுமனுக்குச் சுதந்திரமான தன்றென்று பிரம்மதேவன் தலை அழிய நான்கு முகமுடையவனாக்கி, பலரும் அஞ்சச் சிந்துமவ் இரத்தத்தில் பிச்சையெடுத்தோனாகிய முழு நீற்றுருவ வைரவ மூர்த்தியின் பாதம் பணிவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. திருப்பாதிரிப் புலியூர்ப் புராணம்

தருணமலர்க் கோயிலிறை யுச்சிமுடிக்
கபாலத்தைத் தளிர்க்கை யேந்தி
யருணநீர் பலிக்கிமையோர் நடுங்கவலம்
வந்து மாற்காவி நல்கி
மருணனிசெய் மூவிலைவேண் மணிநாக
முடுக்கையி வை வயங்க வேந்திக்
கருணைமறம் பூண்டெழில் செய் கடைஞாழல்
வயிரவரைக் கருதி வாழ்வோம்.

செந்தாமரையில் வாழ் பிரம்மனுடைய உச்சிமுடிக் கபாலத்தை உள்ளங்கையிலேந்திக் கொண்டு தேவர்கள் பயந்து நடுங்க வலம்வரும்படியாகக் சூரியோதய பலிபிச்சை எடுத்துத் திருமாலுக்கு ஆவி கொடுத்து, மயங்கிய போரை வெல்லத்தக்க மூவிலைச் சூலமும் மாணிக்கமுடைய பாம்பும், உடுக்கையுமாக இவை விளங்கத் தாங்கி மறக்கருணை பூண்டு, கொன்றைப் பூவணியும் வைரவமூர்த்தியைக் கருதி துதிப்போம்.

## 07. திருச்செந்தூர் புராணம்

கிஞ்சு கந்தரு வாயக்கலைக் கிள்ளையா
னஞ்சு கம்மிலொன்றற்றிடக் கிள்ளியே
மிஞ்சு கந்தொறு மிக்குறுங் கார்திறக்
கஞ்சு கன்பொற் கழலிணை போற்றுவாம்.

கிளியைப் போல வேதாத்தியனனம் செய்யும் பிரம்ம தேவனுடைய ஐம்முகத்தில் ஒருதலையற்று விழக்கிள்ளி மேகத்தினும் அதிகமான கருநிறங் கொண்ட(யானைத்தோல்) போர்த்துக் கொள்ளும் வைரவ மூர்த்தியின் பொன்னடிகளைப் போற்றுவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 08. கடம்பவனப் புராணம்

கருதரிய ளளிதைபர னெற்றி யிற்றோன் றிச்சூல கபாலமேந்தி
வருபிரள யஞ்சுவற்றிப் பயிரவனாயண்டதத்து வங்கண்மாற்றி
யரிசரும கஞ்சு கியாய் வேதவெகி னூர்த்து முன்போலவுண்டாக்கி
யிருமைபெறக் காத்தருளுங் கேத்திரபாலன் றிருத்த ளேத்தல்
செய்வோம்.

உமையம்மையின் நாயகராம் பரமசிவன் நெற்றியில் தோன்றிச் சூலமேந்தி பிரமனுடைய கபாலத்தையுமேந்தி நரசிங்கமூர்த்தியின் உடலைக்கிழித்து அதன் தோலை இடுப்பில் உடையாக அணிந்தும் வயிரவன் என்னும் பெயரைத் தாங்கி அண்டதத்துவங்களை மாற்றியமைத்து சீவான்மாக்களை இருமை பெறக் காத்தருளும் கேத்திர பாலனாம் வயிரவ மூர்த்தியைப் போற்றி வணங்குவாம்..

## 09. கடம்பர் கோயிற் புராணம்

கயிரவ நான்மலர்க் கவின்க ணாரமயற்
செயிரவ நாடொறு மியற்றி யேதிரி
யுயிரவ நானென வொறாது காத்தருள்
வயிரவ நாதனை வணங்கி வாழ்த்துவோம்.

ஆம்பற் பூவைப் போலும் அலங்காரக் கண்களையுடைய மாதர்களின் நோயை எந்நாளுமே யுண்டாக்கித் திரியும் மனத்துள் நான் எனது என அலையாமல் இருக்க காத்து இரட்சிக்கும் வயிரவக் கடவுளை வணங்கி வாழ்த்துவோம்.

## 10. புலியூர்ப் புராணம்

விதிப்பால வினைதவிர்க்கும் வியாக்கிரமா புரத்தினிது மேவினோர் கண்
மதிப்பாலிற் செய்வினைக்கு மூவிலைவேற் சூலத்தின் மருவ வைத்தே
யுதிப்பாலன்னையர் முலைகண் மீட்டருந்தா வகை முத்தி யுதவுந்தில்லைம்
பதிப்பால வயிரவன்றன் பாதசரோ குகங்களென் றுப்பரவி வாழ்வாம்.

விதியால் வந்த படைத்தலான பிறவி வினையைத் தவிர்க்கும் புலியூரின் கண் வாழப்பட்டவர்களுக்கு மதிப்பில்லாமல் துன்புறுத்தும் மலமாயா கன்மத்தை மூன்றிதழ்களுடைய சூலயுதத்தின் அடக்கி மீண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்து தாயினர் முலைப் பாலை உண்ணாவண்ணம் பதமுத்தியை உபகரிக்கின்ற தில்லையம்பலம் (பால) வயிரவக் கடவளின் பதாம்புயங்கயை என்றைக்கும் போற்றி வாழ்வோம்.

## 11. சீர்காழிப்புராணம்

துங்க மாமணித் தூணில்வந் திரணியன் றோள்வலிதனை வாங்குஞ்
சிங்கவேற்றுரி யரைக்கசைத்து லகெலாந் தேர்ந்தளந்த வன்மேனி
யங்கம் யாவுமோர் கதையதாக் கொண்டத எங்கியாப் புனைதாழிச
சங்க வார்குழைச் சட்டை நாயகன்றுணைத் தாமரைச் சரண்போற்றி

நவரத்தின கசிதமான தம்பத்தை பிளந்துக் கொண்டு வந்து இரணியன் வயிற்றைக்கிழித்து அவன் புய வலிமையை வாங்கும் நரசிங்கதைக் கொன்று, அதன் தோலை இடுப்புக்கு ஆடையாக அணிந்தும் ஈரடியாக மூவுலகளந்தோனாகிய வாமனன் உடல் உறுப்புக்களை யெல்லாம் ஒரு கதாயுதமாகக் கொண்டும் தோலை உடையாகக் உடுத்தும் சீகாழிச் சங்கின் கவசகுண்டலராகிய சட்டை நாயகருடைய இரண்டு பாதார விந்தங்களுக்கும் வணக்கம்.

## 12. திருப்புவணப் புராணம்

அரிபிரம ரகந்தை கெட வண்டங்க
ளுடைத் தெரியு மங்கிக் கோட்பட்
டுரியபல வுலகமெலா மொழிந்திடுநா
ளவர்கடம துடன் மேற் கொண்டு
குருதிவாய் கொப்பளிக்குங் கூரயின்மூ
விலைச் சூலங்கொண்ட திண்டோட்
கருவரைநேர் தருவடுகக் கடவுளெமைப்
புரப்பக் கைகூப்பு வாமே.

ஆகாயமெல்லாம் பற்றி எரியும் அக்கினிச் சுவாசிப்பட்டு சுதந்தரமான பல உலகங்களும் ஒழிந்திடுங் காலத்திலே பிரம்ம விஸ்ணுக்களின் கர்வம் கெட்டொழியும் படியாக அவர்கள் தம் உடல் மேல் பாய்ந்து, இரத்தத்தை சொரிவிக்கும் கூரிய வேலும், மூவிலைச் சூலமுங்கொண்ட (மலை போலும்) புய வலிமையுடைய வடுகக் கடவுள், நம்மைக் காக்கும் படியாக நாம் அவர்க்குக் கைகூப்பி அஞ்சலிப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13. அவிநாசிப் புராணம்

அஞ்சுகனை யாதிலகு மாடரவக்
கங்கணனை யகலும் வானில்
விஞ்சுகனை மாரிநிகர் மேனியனை
வாசியென விரைந்து தாவும்
பைஞ்சுகனை யேயெரித்த புக்கொளியா
ரெயில் காவல் பரிக்கும் வீரக்
கஞ்சுகனை வேணிமலர்க் கிஞ்சுகனைப்
பரசுகனைக் கழறல் செய்வாம்.

அழகிய சுகங்குறையாது விளங்கியாடும் அரவாபரணனாய் பரந்த ஆகாசத்தின் மிகுந்த மழைபோலும் திருவருளுடைய திருமேனியனாய் பாணம் விடுவித்துக் கொண்டே சமீபத்து வரும் மன்மதனை எரிந்த சிவபிரானுடைய எல்லைக் காவல் காக்கும் வீர வைரவனாய் விளங்கும் சிவந்த கொன்றை மலர் அணிந்த சடாதரனாம் பரமசுகனைத் துதிப்போம்.

## 14. பவானி கூடற் புராணம்

பொருத்லை யுகளும் வேணிப் புனிதனை பரமென் றுள்ளங்
கருதலை யயனீ யென்னக் குடிலையுங் கழலத் தேறா
வொருதலை யுகிராற் கிள்ளி யும்பர்மா லுதிரம் வாங்கும்
விரிதலை சூலச் செங்கை விமலனை வணக்கஞ் செய்வாம்.

ஐம்முகம் பொருந்தி உள்ளதால் சிவபெருமான் என்று கருதிக் கர்வித்தவனும், பிரணவத்துக்குப் பொருள் சொல்லாதவனும் நீதானென்ன கூறி பிரம்மனின் ஒரு தலையை நகர்த்தினார் கிள்ளி திருமால் உதிரத்தை வாங்கும் மூவிலைச் சூலாயுதபாணியனாகிய வைரவனை வணங்குவோம்.

## 15. திருவோத்தூர் புராணம்

வேரிமலர்ப் பண்ணவன்றன் சிரமொன்றை
நகநுதியில் வீட்டி யுற்ற
சோரிமலர் தலைநிலத்திற் பாயாதச்
சிரத்தேற்றுத் தொடர்ந்து போந்து
வாரிமலர் கண்வளர்மா னெற்றி யெற்றிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருதி கொடு மமதை நீங்குங்
காரிமலர்க் கழலிரண்டுங்
கூப்பி நிதம் கருதி வாழ்வாம்.

செங்கமலாசனனாகிய பிரம்ம தேவனுடைய தலைகளில் ஒன்றை நகங்களினால் கிள்ளி ஒழுகிய இரத்தம் பூமியிற் விழாமற் படி அம்பில் கோத்துக் கொண்டு அதே விரைவில் போய்ச் சமுத்திரத்தில் பள்ளி கொள்ளும் திருமால் நெற்றிக்கிலக்காக விட்டு மூளையைப் பேர்த்துக் கர்வத்தை போக்கும் வைரவருடைய மலர்ப் பாதங்களிடையும் எந்நாளும் இருகரங்களாலும் கூப்பி வணங்குவாம்.

## 16. மருதூர்ப் புராணம்

கோணிலவு பிறைபொருவுங் கூரெயிற்று
வாய்மூடுவற் குதிரை யானைப்
பாணியிற்கங் கணம்புனைந்த வுரகமணி
வெயில் விரிக்கும் பண்பினானை
வேணியரன் றிருக் கோயில் காப்பானை
நிருவாண வேடத்தானை
வாணிலவு முத்தலைவேல் வடுகனைச் செந்
தமிழ்பாடி வணக்கஞ் செய்வாம்.

கோணி வளைந்த மூன்றாம் பிறை சந்திரனைப்போல் கூரிய வக்கிர தந்தமுள்ள நாயைக் குதிரை வாகனமாய்க் கொண்டனாய்க் கையில் கங்கணமாகக் கட்டிய அரவத்தின் மாணிக்கம் வெயில் போல் பிரகாசிக்கத் தக்கவனாய் சடாதரனாகிய சிவபெருமான் கோயிலைக் காக்கப்பட்டவனாய் விளங்கி நிருவாண வேடங்கொண்டவனாய் வாழ்ந்து நிலைபெறும் முத்தலைவேல் வடுகனை செந்தமிழ்ப் பாமாலையால் துதித்து வணங்குவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 17. ஆதித்தகிரிப் புராணம்

பரநாத வரைமணிகிண் கிணியொலிப்பப்
படமெடுத்தப் பார்க்குந் துத்தி
வரநாக கங்கணத்தான் மாலகந்தை
யிருளகற்ற வந்தஜோதி
யுரனாரும் வித்துருமச் செஞ்சடையா
நருளத்தி யுருளத்தி யுளரா தித்தி
புரமேவு மணிவரை வாழ் சட்டைநா
யகன் மலர்த்தாள் போற்றி வாழ்வாம்.

பரநாத மணிச்சிலம்பு கிண்கிணியாக ஒலிக்கும் படியாக படமெடுத்தாடும் பொறிகளையுடைய அரவை ஆபரணமாக அணிந்தவனாய், ஆணவ மலவிருளை நீக்க வரும் பரஞ் சோதியாய் மார்பினிடமாக அணியும் பவளம் போன்ற செஞ்சடைக்கடவுளின் அருளுடைய கங்கையின் வளப்பம் பெருகும் ஆதித்தபுரத் திருக்கோயிலில் வாழ்சட்டை நாயகனுடைய பாதாம் புயங்களைப் போற்றி வாழ்வாம்.

## 18. திருநெல்வேலி புராணம்

பகருமறைப் பணைவனத்திற் பண்டிருந்த தாபதர்க
ணிகரிலவந் தவமெனவே நெறியிலவர் செயும் வேள்விப்
புகர் முகவெங் கரியுரித்த புரிசடையோ னெல்வேலி
நகரினிது புரந்த சட்டை நாதனிரு பதம் பணிவாம்.

சொல்லா நின்ற வேதாரண்யத்தில் பூர்வமிருந்த சைன முனிவர்கள் மாண யாகத்தின் அவத்தைத் தவமென்று நெறியில்லாமற் செய்யும் யானையை உரித்த சடாதரனாகிய ஈச்சசுரனுடைய திருநெல்வேலித் தலத்தை இனிது காத்த சட்டை நாதர் திருவடிகளைப் பாடிப் பணிவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 19. மருதவனப் புராணம்

மேலையோர் கற்பத்திருதியிற் கதிர்கண்
மேவுருக் கணங்கள் கீழுறத்தீம்
பாலையொத் திருசங் கீன்ற முத்தினங்கள்
பரந்திடப் புவியிடத் தெழுந்த
வேலையின் மிதந்த புகலியந் தோணி
விளங்கிடு வடுகனாங் கடவுள்
காலை மென் போதை யுச்சியிற் கொள்வாங்
கடுந்துயர் மாலைதீர்த் திடவே.

முன் ஒரு கற்ப கால முடிவில் முன்னொளிகளையுடைய நட்சத்திரக் கூட்டங்கள் கீழுதிர்ந்தாற் போல பால் என வெளுத்த சங்குகள் ஈனும் முத்துத் தினுசுகள் பரவும் படியாகப் பூமியைச் சுற்றி வளைத் தெழுந்த கடலில் மிதந்த சீகாழியின் தோணிபுரம் என விளங்கும் வடுகநாதக் கடவுள் திருவடிக் கமலங்களை நமது கடுந்துயராம் மலமயக்கமொழிய உச்சி மேற்கொள்வாம்.

## 20. திருநல்லூர் பெருமணப் புராணம்

புயற்காரின் வருமகவான் பணிவள்ளல்
பணிவிடைகள் பொருந்தி நாளுந்
செயற்காக வெங்கள் குலந்தனை
யாடிமைக் கொண்டு வளர்தேவதேவ
னயற்காதி யமலனருள் செய்தபுர
மெனவுலக மனைத்துங் கூறும்
வயற்காழி நகர்ச்சட்டை நாதனிரு
பதமலரை வணங்கி வாழ்வோம்.

மேகநாயகனாகிய இந்திரன் பணியும் வள்ளலாகிய சிவபெருமானுக்கு எந்நாளும் திருத்தொண்டு செய்வதற்காக, நம்முடைய குலத்தை அடிமையாகக் கொண்டு வளரும் தேவதேவனும், பிரம்மாதிதேவர் முதலானவர்களுக்கு வரம் அளிக்கும் முதல்வனாகிய பரமசிவம் ஏற்படுத்தியதாம் என உலகமெல்லாங் கொண்டாடும் வயல் வளப்பமுடைய சீகாழிச் சட்டை நாதனுமான வைரவ மூர்த்தியின் பாதாம் புயங்களிரண்டையும் வணங்குவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 21. காசிரகசியம்

தளம்பொலிமலரேர னாதி வானவர் தாழ்ந்து போற்ற
வுளம்பொலி காசி மேவ முயிர்கள் செய்பாவ மெல்லாங்
களம்பொலியாது தண்டாங் கண்டறலொழித்து முத்தி
வளம்பொலிவகை செய்கால வயிரவற்கன்பு செய்வாம்.

தாமரை கமலாசனாகிய பிரம்மாதி தேவர்கள் தாழ்ந்து போற்ற உள்ளம் மகிழும் காசியில் வாழ்கின்ற சீவாத்து மாக்கள் செய்த பாவங்களையெல்லாம் தண்டிக்காது பணிந்து தண்டனிடக் கண்டேவேறற் உழித்து முத்தி சாம்பிராச்சியம் அடைய வழிகாட்டும் காலவயிரவற்று அன்பு பூண்டொழுகுவாம்.

## 22. திருநாகைக் காரோணப் புராணம்

பெருகுதன் புகழுளேனோர் பிரதாப மடக்கி யாங்கு
முருகுதங் கலரின் மேலான் முண்ட வெண்கபாலத் தூடு
கருகுபைங் கொண்டதன் மேனி கவிழ்த்திடு செந்நீரேற்ற
திருகு தீர் வடுகப் புத்தேள் சேவடி சென்னி சேர்ப்பாம்.

பெருகிய தன் பிரதாபத்துள் மற்றவர்களுடைய புகழை அடக்கிக் கமலாசனத்தின்மேல் வரும் பிரம்மனுடைய முண்டமான கபால ஓட்டில் கருகிய நீலமேக சரீரம் கவிழ்ந்து புரண்டாலன்ன சிவந்த இரத்தங் கொண்ட கள்ளமில்லா வடுகக் கடவுளின் சேவடிகளை சிரமேல் கொள்வாம்.

## 23. திருக்குடந்தைப் புராணம்

எழுவகைத் தாதுங் கூடினியங்கிடு முயிரொான் றேனு
நழுவிடி னியங்கா வென்று நவிறலை வெளிசெய் தாங்கு
முழுவலி நெடியோ னாதி மொய்த்த வானவர்மெய் நெய்த்தோர்
வழுவறக் கபாலத் தேற்ற வடுகனை வணங்கி வாழ்வோம்.

இரதம், இரத்தம், சுக்கிலம், மூளை, தசை, எலும்பு, தோல் ஆகிய தாதுவகை ஏழும் கூடித்தான் உயிர்கள் நடைபெறும். இல்லாவிட்டால் ஒன்றும் நடைபெறமாட்டாது. என்று சொல்லுவதை பிரசித்தப்படுத்தி முழவன்மையடைய மகாவிஷ்ணு முதலான தேவ கூட்டங்களின் தேக ரத்தத்தை குற்றமற்ற பிரம்ம கபாலத்தின் ஏந்திய வடுக நாதக் கடவுளை வணங்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 24. மாயூராப் புராணம்

ஓங்குநாற் படைமுன் னஞ்சு மொள்ளுகிர் படையுந் தேசு
வீங்குசக் கரமுன்னான வெம்படை யஞ்சு மஞ்சுந்
தாங்குசூற் படையுங் கொண்டோர் தலைக்கல நெத்தோரேற்ற
பாங்குசேர் வடுகப்புத்ஆதள் பதமலர்க் கன்பு செய்வோம்.

ஓங்கிய சதுர சேனைகளும் அஞ்சத்தக்க நகக் கூர்மையும் அழகிய சங்கு சக்கரம், வாள், கோதண்டம் கதையாய் ஐம்படையையும் பயப்படத்தக்க சூலாயதத்தையும் தாங்கிக் கொண்டு பிரம்ம கபாலத்தில் இரத்தம் கொட்டிப் பாய்ச்சும் பெருந்தகையனாம் வடுகநாத கடவுளின் பாத தாமரைகளுக்கு அன்பு செலுத்துவாம்

## 25. உறையூர்ப் புராணம்

உலகமூன்றினுக்குந்தானே யொருமுத லெனத் தரிந்தாங்
கலகிறீப் பொறிக டும்பி யலங்குமுத் தலையே றாங்கி
வலனுடை மானாதி வானவர் செருக்குமாறாப்
பலருமுன்னஞ்ச நெயத்தோர் பலிக்கொண்டோன் சரணஞ் சார்வாம்

சுவர்க்க, மத்திய. பாதாள மென்ற திரிலோகங்களுக்கும் தானே ஒரு முதல்வனெனத் தெரிவிக்கையில் அளவில்லாத தீப்பொறிகளைச் சிந்திப் பிரகாசிக்கும் முத்தலை வேலாயுதத்தை தாங்கி வலம்புரிச்சங்கமெந்திய மாயோன் முதலான வானவர்களின் கர்வமடங்கவும், அவர்கள் பற்பலவுமாக பயப்படவுமாக இரத்தபலி வாங்கும் வைரவக்கடவுளின் சரணாரவிந்தங்களைச் சார்ந்தடைவாம்.

## 26. திருவம்பர்ப் புராணம்

சுவைமனந்தெரிந்து பின்புதற் குதவுந்
தூத்துவ வேட்டுவர் பொருவச்
செவைமலர்கிழுவன் றலைச்சுவை முன்னந்
தெரிந்து பின்னக் குதவுகிரு
நவை கொண்மா னெய்த்தோர்ச் சுவைமுனந் தெரிந்து
நயந்துபி னத்தலைக் குதவுங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவைபடு திறற்சூ லமுங்கரங் கொண்ட
கடவுடன் சேவடி போற்றி

முன்னே சுவைப்பார்த்து பின்னே தனக்குதவும் கண்ணப்ப நாயனாரைப் போலச் செந்தாமரையனாகிய பிரம்மன் தலைச்சுவையை முன்னெயுணர்ந்ததால் பின்னும் வளர்த்த நகமும் பழயாநின்ற திருமால் உதிரத்தைச் சுவைத்து முன்ன மினிமை யடைந்ததால் பின்னுமத்தகைய சமயங்கட்குதவா காரண வெற்றியுடைய சூலாயுதமும் கையிற் கொண்டேற்றும் வைரவக்கடவுளின் சேவடிகளைப் போற்றுவாம்.

## 27. திருவாளொளிப்புற்றூர்ப் புராணம்

மறைமகழ் கபாலத் தோடு மாவற் மேனிநெய்த்தோர்
துறைகமழ்கொடிய வெந்தீச் சூழமுங்கரத்திற்றாங்கி
முறைகம ழுலகில் யார்க்குமூடிய பெருக்கு மாய்க்கு
மிறைகமழ் வடுகப் புத்தேளிணையடிக்கன்பு செய்வாம்.

பிரம்மாவின் கபால ஓட்டில் மகாவிஷ்ணுவின் உதிரத்தை வாங்கும் கொடிய வெந்தீச் சூலத்தைக் கையில் தாங்கிக் கொண்டு உலகத்தில் யார்க்குக் கர்வம் கூடியதோ அக்கர்வத்தை மாய்க்கும் இறைவனான வடுகப்பெருமானுடைய திருவடி இணைகளுக்கு அன்பு பூண்டு ஒழுகுவோம்.

## 28. விளத்தாட்டிப் புராணம்

இருட்பெரு நிரய மேவற்துவாஞ் செருக்கு மேவில்
வெருட்பெருந் தண்டமேவு மிகவுமென் றுணர்த்தி யாங்கு.
மிருட் பெருஞ் செயலி னீங்கா மாலுடம் புரித்துப் போர்த்
வருட்பெரு வடுகன் செம்பொ னம்புயத் பாதம் போற்றி

அதியந்த காரமான நரகம் அடைவதற்குக் காரணமாம் கர்வத்தை படைத்தால் மிகவுங் கொடூரமான தண்டனைக்குட்பட வேண்டுமென்று தெரிவித்து மயங்கமான கொடுஞ் செயல் விட்டு நீங்கா உக்கிர நரசிங்கத்தை பிளந்து தோலையுரித்துப் போர்த்த பேரருள் உடையோனாகிய வடுகக் கடவுளின் பொற்பாத கமலங்களைப் போற்றுவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 29. கோயிலூர் புராணம் புராணம்

தெருட்பெரு நலன வாவித் தீவிர தரத்துற்றோர்க்கு
மருட்பெரு மாயை நூறி வல்வினைப் படலங்கீறிச்
சுருட்பெருங் கொடியது ஃக்க நிவர்த்தியுஞ் சுகத்தின்சேறு
மருட் பெருஞ்செயலானல்கும் வடுகனையடைந்து வாழ்வோம்.

தெளிந்தோர் பேரின்பத்தை இச்சித்து தீவிரதரத்தை அடைந்தோர்களின் பெருமயக்கமான மாயையை அழித்து வல்லினையெற்றும் படலத்தைக் கீறி சுருள் போல் பெருகுங் கொடுந்துக்க நிவாரணமும் பரம சுகத்தின் முத்திப் பேறும் திவருட் செயலால் அருள் புரியும் வடுகக் கடவுளை அடைக்கலம் புகுந்து வாழ்வாம்.

## 30. திருக்குறுக்கைப் புராணம்

ஆக்கும் வினைமலர வனதன றென்றற
கவனுத் தமாங்க நான்குங்
காக்கும் வினைமாய வனதன் றென்னற்
கவன் மேனி கழிநெய் தோரும்
தாக்கும் வினையாள ருந்தேர் சான்றுரைக்கக்
கூர்கொளு கிர்ச்சாங்கத் தோடு
போக்கும் வினைச்சூற் படையுபாங்க முங்கொள்
வடுகனடி போற்றி வாழ்வாம்.

தாழ்ந்த சிறுதொண்டருமறிந்து சாட்சி கூற உண்டாக்கும் படைப்புத் தொழில் பிரம்மதேவனுடையதல்ல வென்பதாய் அவனுடைய நான்கு முகமும் பாதுகாக்குந் திதித்தொழில் விஷ்ணுவினுடையதல்லவென்பதாய் அவனுடைய இரத்தம் ஒழுகும் தேகமும் விளக்கும் கூரிய நகவொழுங்கும் உளிரை போக்கத்தக்க சூழாயுத மேந்திய கையும் கொண்ட வயிரவனுடைய திருவடிகளைப் போற்றி வாழ்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31. தனியூப் புராணம்

மறைபுகழ் தானேயோம்ப வயங்கு கேத்திரத்தி னெல்லை
பொறையுடல் விடுத்தோர் பாவப் புணர்பினுங் கேற்றதண்டாங்
குறையற வியற்று தண்டதரன் குறுக்காது தானே
முறையுற வுயற்றிப் போக்கு முதல்வன வணக்கஞ் செய்வாம்.

வேதங்களால் புகழ்ந்து கொண்டாடத்தக்க சிவபெருமான் கோயில் எல்லையருகில் உடலை விட்டிறந்தவர்களின் பாவ சம்பந்தத்துக்குகீடான தண்டனையைக்குறைவில்லாமல் நிறைவேற்றும் எமன் நெருங்காத வண்ணம் எல்லாந்தானே நெறிமுறையாக செய்து பாவத்தைப் போக்கி முத்தி தரும் வடுகநாதக் கடவுளை வணங்குவாம். .

## சிவமூர்த்தங்கள்

சிவாலயங்களில் எண்ணற்ற தெய்வத் திருமேனிகளை நாம் காண்கின்றோம். பரம்பொருளாகிய சிவபெருமானின் திருமேனிகளும் திருவிளையாடல்களும் பலவாகும். "சிவம்" என்ற சொல்லுக்கு மங்களம் என்று பொருள் ஆகும்.சிவத்திருமேனிகள் பல இருந்தாலும் 64 திருமேனிகளையே சிறப்பாகவும் இதனுள் உள்ள 25திருமேனிகள் (பஞ்சவிம்சதி) மிகச் சிறப்பாகவும் கொள்வர்.

இத்தகு 64 சிவத்திருமேனிகளுள் பைரவர் அல்லது வைரவர் எனும் திருமேனியினை சிவாலயங்களில் காணலாம். பைரவர் நமது பயத்தை நீக்கி பாதுகாப்பவர் ஆவார். இப்பெருமான் நம்மையும் ஆலயத்தையும் காத்தருளுபவர். இவரே நமக்கு ஞானத்தையும் கொடுப்பவர். பஞ்சகுருமாரர்கள்:

சிவனாரின் பிள்ளைகளான கணபதி, முருகன், பைரவர், வீரபத்திரர், ஐயனார் எனவும் கூறப்படுகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பைரவர் நின்ற நிலையில் நிர்வாணமாக நாய்வாகனத்துடன் பாசம், டமருகம், ஆலம், கபாலம் கொண்டு விளங்குவார். பைரவர் என்ற மூர்த்தத்தில் எண்வகைச் சிறப்பாக்க் கூறப்பட்டாலும் இதனுள் 64 பேதங்கள் உள்ளன. இதற்கு (சக்திகளாக) யோகினிகள் 64 ஆகும்

## சிவத்திருமேனிகள்: (சிவமூர்த்தங்கள்)

01. இலிங்கம்
02. இலிங்கோற்பவர்
03. முகலிங்கம்
04. சதாசிவர்
05. மகாசதாசிவர்
06. உமாமகேசர்
07. சுகாசனர்
08. உமேசர்
09. சோமஸ்கந்தர்
10. சந்திரசேகரர்
11. விருஷபாரூடர்
12. விருஷபாந்திகர்
13. புஜங்கலலிதர்
14. புஜங்கத்ராஸர்
15. சந்தியநிருத்தர்
16. சண்டதாண்டவர்
17. கங்காவிசர்ஜனர்
18. கங்காதரர்
19. கங்காவிசர்ஜனர்
20. திருபுராந்தகர்
21. கலியாணசுந்தரர்
22. அர்த்த நாரீஸ்வரர்
23. கஜாட புத்தர்
24. ஜ்வநாபக்னர்
25. ஸார்த்தூல ஹரர்
26. பாசுபதர்
27. கங்காளர்
28. கேசவார்த்தகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அஷ்ட பைரவர்கள்

| பைரவர் | - | சக்தி |
|---|---|---|
| 01. அசிரங்க பைரவர் | - | பிராமி |
| 02. குருபைரவர் | - | மகேஸ்வரி |
| 03. சண்ட பைரவர் | - | கௌமாரி |
| 04. குரோதபைரவர் | - | வைஷ்ணவி |
| 05. உன்மத்தபைரவர் | - | வாராஹி |
| 06. கபால பைரவர் | - | இந்திராணி |
| 07. பீஷணபைரவர் | - | சாமுண்டி |
| 08. சம்ஹார பைரவர் | - | சண்டிகை |

மேற்படி அஷ்ட பைரவரைப் பற்றி சிவாகமங்கள், வாருபத்ததி, மூர்த்தித்யானம், ஸ்ரீதத்வநிதி முதலான நூல்கள் விரிவாகக் கூறுகின்றன். மேலும் மந்திர சாஸ்திர நூல்களான ஆகாச பைரவ கல்பம், மகாலெட்சுமி மந்திரகோசம், பிரபஞ்ச சாரசங்கிரம், தியானாத்னாவளி நூல்களில் விரிவாகக் காணலாம்.

## 64 பைரவர்களும்

1. நீலகண்ட பைரவர்
2. விசாலாட்சி பைரவர்
3. மார்த்தாண்டபைரவர்
4. முண்டனப்பிரபு பைரவர்
5. ஸ்வஸ்சந்த் பைரவர்
6. அதிசந்துஷ்ட பைரவர்
7. கேசர பைரவர்
8. ஸம்ஹார பைரவர்
9. விஸ்வரூப பைரவர்
10. நானாரூப பைரவர்
11. பரம பைரவர்
12. தண்டகர்ணபைரவர்
13. ஸீதாபத்ரபைரவர்
14. சிரீடன் பைரவர்

## 64 யோகினிகளும்

1. ஜயா
2. விஜயா
3. ஜயந்தி
4. அபராஜிதா
5. திவ்யமோகினி
6. மகாயோகினி
7. ஸித்தமோகினி
8. கணேஸ்வர யோகினி
9. ப்ரேதாஸின்யை
10. டாகினி
11. காளி
12. காளராத்ரி
13. நிசாசரி
14. டங்கார்ரீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. உன்மத்த பைரவர்
16. மேகநாத பைரவர்
17. மனோவேக பைரவர்
18. க்ஷேத்ரபாலக பைரவர்
19. விருபாக்ஷ பைரவர்
20. காரள பைரவர்
21. நிர்பய பைரவர்
22. பிசித பைரவர்
23. ப்ரேஷ்த பைரவர்
24. லோகபால பைரவர்
25. கதாதர பைரவர்
26. வஜ்ரஹைஸ்த பைரவர்
27. மகாகால பைரவர்
28. பிரகண்ட பைரவர்
29. ப்ரளய பைரவர்
30. அந்தக பைரவர்
31. பூமிகர்ப்ப பைரவர்
32. பீஷண பைரவர்
33. ஸம்ஹார பைரவர்
34. குலபால பைரவர்
35. ருண்டமாலா பைரவர்
36. ரத்தாங்க பைரவர்
37. பிங்களேஷ்ண பைரவர்
38. அப்ரரூப பைரவர்
39. தராபாலன பைரவர்
40. ப்ரஜாபாலன பைரவர்
41. குல பைரவர்
42. மந்திரநாயக பைரவர்
43. ருத்ர பைரவர்
44. பிதாமஹ பைரவர்
45. விஸ்ணு பைரவர்
46. வடுகநாத பைரவர்

15. வேதாள்யா
16. ஹும்காரி
17. ஊர்த்துவகேசி
18. விருபாட்சி
19. சுஷ்காங்கீ
20. நரபோஜினி
21. பட்சார்ரி
22. வீரபத்ரா
23. தூம்ராக்ஷி
24. கலகப்ரியா
25. கோர ரத்தாட்சி
26. விச்வரூபி
27. அபயங்கிரி
28. வீரகௌமாரி
29. சண்டிகை
30. வாராஹி
31. முண்டதாரணி
32. ராக்ஷஸி
33. பைரவி
34. த்வாங்க்ஷிணி
35. தூம்ராங்கி
36. பிரேத வாகினி
37. கட்கினி
38. தீர்க்கலம் போஷ்யா
39. மாலினி
40. மந்திரயோகினி
41. காளி
42. சக்ரிணி
43. கங்காளி
44. புவனேஸ்வரி
45. த்ரோடகீ
46. மகாமாரீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

47. கபால பைரவர்
48. பூதவேதாள பைரவர்
49. த்ரிபுராந்தக பைரவர்
50. திரிபுநேத்ர பைரவர்
51. வரத பைரவர் பைரவர்
52. பரவதவாகன பைரவர்
53. சசிவாகன பைரவர்
54. கபால பூஷண பைரவர்
55. ஸர்வக்ஞ பைரவர்
56. ஸர்வதேவ பைரவர்
57. ஈசான பைரவர்
58. ஸர்வநாதபூத பைரவர்
59. கோர பைரவர்
60. பயங்கர பைரவர்
61. புத்திமுக்திபலப்ரத பைரவர்
62. காலாக்னி பைரவர்
63. மகாரௌத்தரபைரவர்
64. தட்சணாபிஸ்திதபைரவர்

47. யமதூதி
48. காளி
49. கேசினி
50. மர்த்தினி
51. ரோமஜங்கே
52. நிர்வாணி
53. விசாலி
54. கார்முகி
55. தோர்த்யமினம
56. அதோமுக்யை
57. முண்டாக்ரதாரிணி
58. வியாக்ரிணி
59. தூங்ஷிணி
60. பிதேரரூபிணி
61. தூர்ஜட்டை
62. கோர்யா
63. கராளி
64. விஷலங்கர்யா

மேற்கண்ட 64 பைரவர் மற்றும் சக்திகள் சாக்த தந்திரநூல்களிலும், மந்திரமகோத்தி எனும் மந்திர நூலிலும் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பைரவ தியானம்

ரக்தஜ்வால ஜடாதரம் சசிதரம் ரக்தாங்க தேஜோமயம்
டக்கா சூழ கபால பாசகதரம் ஷாகரம் பைரவம்
நிர்வாணம் சுநவாஹனம் த்ரிநயனக்ஷ் சாநந்த கோலஹலம்
வந்தே பூதபிசாச நாதவடுகம் ஹேத்ரஸ்ய பாலம்சுபம்

பைரவர் பூசை கைமேல் பலன் என்ற வழக்கும் உள்ளது. இவரே நம் பயத்தைப் போக்கி காப்பவர் ஆவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரியாலை நாகபடுவான் அரசடி ஸ்ரீஞானவைரவர் ஆலயத்தின் திருவூஞ்சல்

## காப்பு

களமதுவே கவின்முழங்கா வில்ல தாம்மேல்
கரியாலை நாகபடு வான்பே ரூர்மேல்
வளமதுவே வாய்த்தவகை வனப்ப தோடு
வகுத்தளுமை தொகுத்ததுவும் பகுத்த வாறாய்
தளமதுவே அரசடிதன் தானச் சீரே
தருஞான வைரவர்மேல் ஊஞ்சல் பாட
உளமதுவே உணர்தொங்கு முதரத் தீசன்
ஓதிடுமை கரனடிகள் காப்ப தாமே!

## நூல்

முந்தவொரு முழங்காவில் முழங்கு மாறாய்
முகிழ்கரியா லைநாக படுவான் சீரில்
அந்தவொரு அரசடியே அமர்ந்து கொண்டு
அனைத்தையுமே அவதானித் தருள்பா லிக்க
விந்தையொடு விஞ்சுதிறம் விளங்கக் காட்டி
வினையதுவே தினமினிதே விதிக்கு மாறாய்
சிந்தையதே வந்தருளே சிந்து மீசன்
ஸ்ரீஞான வைரவனார் ஆடி ரூஞ்சல். -01



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெத்தவுயர் காங்கேசன் துறைய தாங்கே
மிளிர்தமதுார் வைரவரா லயத்தில் நின்று
ஒத்தவுயர் திரிசூலந் தாங்கி வந்தார்
ஓதவுயர் சம்பந்தன் ஐயா வானோர்
இத்தரையில் இன்னரசில் இலங்க வைத்தார்
இதுஞான வைரவரா லயம தாக
சித்தமுறு சீரருளே சிறக்கச் செய்யும்
ஸ்ரீஞான வைரவனா ராடீ ரூஞ்சல். -02

முல்லையது சொல்லுபுல மொருபா லாக
முட்டுகுடி தொட்டதலம் மறுபா லாக
பல்லரிய பகர்கட்டுக் குளம தோடு
பாங்குவயல் ஆங்கருமை அமைந்த வாறாய்
வெல்லரிய வினைதினமே விளங்கு கின்ற
விரிந்தநிலம் பரந்தருமை இருந்த வாறாய்
செல்லரிய சீரதுவே பேரில் ஓங்கும்
ஸ்ரீஞான வைரவனார் ஆடீ ரூஞ்சல் -03

அறியவொரு அரசுதல விருட்ச மாக
ஆங்குபல ஆழகுமிழும் தருவு மாக
நெறியதொடு நிலையூரார் நிறைவு காண
நீளரசின் இலையெடுக்கும் நிலைய தோடு
குறியதொடு இங்கங்கு மெங்கு மாக
கூட்டுமருள் தேட்டமென நாட்டி ஈட்ட
செறியநிறை சீர்வளமே சேரத் தங்கும்
ஸ்ரீஞான வைரவனார் ஆடீ ரூஞ்சல் -04



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்பரிய உள்ளமொடு உன்னும் யாவும்
உற்றடைய உந்நதராய் உயர்ந்த பேர்கள்
எப்பெரிய இன்னலிடர் எய்தி னாலும்
எண்ணவுடன் நண்ணியவர் இன்ன லோட்டித்
தப்பியவர் தலைநிமிரத் தழைத்து வாழத்
தாங்கியவர் ஆங்கருளை அள்ளிக் கொள்ள
செப்பசிய சீருலகோர் சிந்தை சேரும்
ஸ்ரீஞான வைரவனார் ஆடி ரூஞ்சல் -05

அரனவரை மதியாது அகந்தை யுற்ற
அயனவரின் தலையைந்தில் ஒன்றைக் கிள்ளி
பரமனவர் பதமுணர அகந்தை ஓய
பற்பலவே நற்கருமம் முற்று மாற்றி
வரமருளும் கருமையரோர் கருணை நாதர்
வன்மையராய் வருகொடுமை கெடுக்கு மீசர்
சிரமமொடு சிறுமைபிற சேர நீக்கும்
ஸ்ரீஞான வைரவனார் ஆடி ரூஞ்சல் -06

பேரரிய காலவை ரவரோ மேலும்
பேண்கருமை நரசிம்ம வைர வர்தான்
ஓரரிய வடுகவை ரவரி னோடு
உறுசுவர்ண கர்ஷணவை ரவரோ காணும்
பாரரிய உக்கிரவை ரவர்நீ லத்தர்
பார்த்துணரும் பாங்கினொடு பலவு மாகிச்
சீரரிய செய்கைதிறம் உய்ய உள்ள
ஸ்ரீஞான வைரவனார் ஆடி ரூஞ்சல் -08



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்குபிறை நீண்டசடை திரிகண் ணோடு
இன்கரங்கள் இலங்குவலத் துடுக்கை யோடு
கலங்கவுயர் இருகோரப் பல்ல தோடு
காணுறுதீ மழுபாசம் அரைசேர் பாம்பு
துலங்கிடுநீள் சிரியப்பினர்நாய் வாக னத்தர்
தோன்றரிய துணையதுவாய்த் தொடரு மீசர்
சிலம்பொலிதான் சிந்தமுழங் காவி லுற்ற
ஸ்ரீஞான வைரவனார் ஆடீ ரூஞ்சல் -08

திறம்பெறுசெம் பட்டுமலர் வடைமே லாசை
செப்புமடை முக்குணஞ்சங் கார மூர்த்தி
நிறம்பெறுநேர் சிவமூர்த்தம் இருபத் தைந்தில்
நின்றதிலோ ரொன்றெனமன் னுயிரி டேற
அறம்பெறுமாம் பற்றறவோர் நிர்வா ணத்தர்
ஆகியருங் கருணையினால் அகிலங் காத்துச்
சிறந்தருமை செய்யுமுயர் ஐயன் ஈசன்
ஸ்ரீஞான வைரவனார் ஆடீ ரூஞ்சல் -09

சேர்அகந்தை சிதைப்பவரே ஆடீ ரூஞ்சல்
செப்பரிய ஆற்றலரே ஆடீ ரூஞ்சல்
ஓர்ஞமலி ஊர்பவரே ஆடீ ரூஞ்சல்
உருவிலொரு அம்மணரே ஆடீ ரூஞ்சல்
பேர் இருமை வினையறுப்போர் ஆடீ ரூஞ்சல்
பிரமனொரு தலையொடித்தோர் ஆடீ ரூஞ்சல்
சீர்கரியா லைநாக படுவான் மேவும்
ஸ்ரீஞான வைரவனார் ஆடீ ரூஞ்சல் -10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எச்சரிக்கை

கவினேகரி யாலைநாக படுவான்வரு மிறைவா
காண்பேரிடர் களையவரும் இறையே எச்சரிக்கை
கவியேதரு கவினாய்வரு கருணாகர முதலே
கண்டோர்புவி விண்டேவருக் கருள்வாய் எச்சரிக்கை
திறமேயுறு குறைமாறிட நிறைவேயருள் நிலைமேல்
தினமேஉனை நினைவார்மனத் திருவே எச்சரிக்கை
அறமேபெற மறமேகெட முறைகூறிடு மிறையே
அயனாரவர் அறிவேபெற அணைவாய் எச்சரிக்கை
கருமேனியின் உருவாயுடன் வருவாயருள் தரவே
கடையோர்கெடக் கடிநாயிலும் வருவாய் எச்சரிக்கை
உருமாறினர் திருமாலயன் தினமேயறம் அறிய
உடனோர்தலை கெடுமாறற வருவாய் எச்சரிக்கை

மதிசூடிய பெருமானிவர் மறுபேதமு முளதோ
மறுவாம்பவம் மறைவேபெறும் மன்னா எச்சரிக்கை
கதியேபெறக் கடையாசைகள் கடிதாயுடன் கெடவே
கவினாயது நிருவாணம தடைவாய் எச்சரிக்கை
துடியோர்கரம் இருகோரமும் திரிசூலமும் உடனாய்
தொடரார்சடை பிறைமேவிய துணையே எச்சரிக்கை
கடிதேசிலம் பிடியோர்நகை இறையே எச்சரிக்கை
ஈசா எச்சரிக்கை இடர் மறைப்பாய் எச்சரிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பராக்கு

முந்துமுயர் முழங்காவில முதல்வா பராக்கு
முன்னரிய முற்றெழிலாய் முகிழ்வாய் பராக்கு
கண்ணரிய கரியாலைக் கடவுள் பராக்கு
கவின்நாக படுவானின் கதியே பராக்கு
பிரமனவர் பேரகந்தை பிரித்தாய் பராக்கு
பெறலரிய பேராற்றல் பெற்றாய் பராக்கு
சாற்றரிய சங்கரா மூர்த்தி பராக்கு
சாதனையால் வேதனைகள் சரித்தாய் பராக்கு
செம்மையுற அம்மணராய்ச் சிறந்தாய்
சேரிடத்தில் ஆருயிரைச் சேர்ப்பாய் பராக்கு
ஊக்கமதை உலகோர்க்கு உரைப்பாய் பராக்கு
உயரரிய சிரிப்பதனை உகந்தாய் பராக்கு
மடைவடையின் மாலைதர மகிழ்வாய் பராக்கு
மதித்ததிலூன் சக்தியுறும் மனத்தாய் பராக்கு
பல்லரிய வைரவர்நற் பணியாய் பராக்கு
பகர்ஞான வைரவராய்ப் பதிந்தாய் பராக்கு
சொல்சிவனார் நல்லுருவில் சுடர்வாய் பராக்கு
சோதிநாதா பராக்கு பராக்கு பராக்கு

## வாழ்த்து

வையகம்பேண் வைரவர்தாள் வதிவோர் வாழி
வண்மையவர் வாழ்வதுவும் வளமாய் வாழி
பெய்யுமொரு மாரிவளம் பெருக வாழி
பேசுமுயர் பெற்றிபல உற்று வாழி
மெய்யனுயர் வைரவனார் மேன்மை வாழி
மேவவரும் செழிப்பவரின் மிளிர்வு வாழி
உய்யுமுயர் நாகபடு வான துற்ற
உயர்ஞான வைரவர்தாள் வாழி வாழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மங்களம்

ஞானமுறு வைரவர்க்கு ஓதும் மங்களம் - எங்கள்
நல்லசிவ மூர்த்தனுக்கு நவிலும் மங்களம்
வானமுறு வடுகருக்கு வாய்த்ததிற வடிவினர்க்கு
ஈனமுற அயனவரோர் இடத்தலையை ஒடித்தவர்க்கு

(ஞானமுறு.......)

உக்கிரமா முருவிரைக்கு உண்மையர்க்கு மங்களம்
உற்றதொரு கருமைதரு முருவினர்க்கு மங்களம்
முக்கியமோர் சங்கரா மூர்த்தியர்க்கு மங்களம்
முத்திதரும் அம்மணமாம் முதல்வருக்கு மங்களம்

(ஞானமுறு.......)

அள்ளுமொரு ஆற்றலுரு ஆனவர்க்கு மங்களம்
உள்ளமுற உள்ளவுடன் உறைபவர்க்கு மங்களம்
அள்ளவுடன் மெள்ளவருள் அளிப்பவர்க்கு மங்களம்
கள்ளமதைக் கடிந்து விடும் கடவுளுக்கு மங்களம்
வெள்ளைபெறும் உள்ளமதை விழைபவர்க்கு மங்களம்

(ஞானமுறு.......)

கரியாலை நாகபடு வானிறைக்கு மங்களம்
சரியான பெருமைதனைச் சார்பவர்க்கு மங்களம்
பெரிதான அருமையெனும் பேறளிக்கும் நாதனுக்கு
சரியான எத்தனையோ சொத்தளிக்கும் ஈசனுக்கு

(ஞானமுறு.......)

*கவிதை:*

*முத்துக்குமாரு பாலசுப்பிரமணியம் எம்.பில்*
*ஓய்வுநிலை முதாலாந்தர அதிபர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலின் ஆசிரியர் ஈழவூர் சைவப்புலவர், சைவசித்தாந்த பண்டிதர்,கலைநகரி, கலாபூசணம், உலக திருச்சபை நாயகர் சிவஸ்ரீ கதிர்குமாரசாமி சுமுகலிங்க சிவாச்சாரியார் M.A.J.P இவர் இலங்கைப் பூமி முழுவதுமே சைவத்தமிழ் மணம் கமழ வேண்டும் எனும் பெருவிருப்புக் கொண்டவர், தலயாத்திரைகள், பிரசங்கங்கள், நேர்முக வர்ணனைகள், சைவ சமய தீட்சை என்பவற்றினை சிறப்புடன் மேற்கொண்டு வருபவர். தம் வாழ்க்கையை சைவத் தமிழ் பணிக்காக அர்ப்பணித்துக் கொண்டிருப்பவர். இலங்கையின் பல ஆலயங்கள் மீதும் நூற்றுக்கு மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். பல நூல்களுக்கு ஆசியுரைகள், வாழ்த்துரைகள் எழுதியுள்ளார். வேத மந்திரங்களைக் கற்றவர். தமிழ் மந்திரங்களில் சிறந்த புலமை கொண்டவர். சைவ சமயத்தை தன் வாழ்வியல் நெறியாகக் கொண்டவர். உலக சைவத் திருச்சபையின் இலங்கைக்கான பிரதிநிதியாக இருந்து அளப்பரிய சைவத் தமிழ் கலைப்பண்பாட்டு பணிகளை ஆற்றிவருகின்றார். மேலும் உலக சைவத் திருச்சபையின் இலங்கைக்கான சைவ சமய தலைவராகவும், அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கத்தின் சைவப் பிரச்சாரராகவும் இருந்து அறப்பணிகள் ஆற்றி வருகின்றார். இவரது பணி மேலும் மேலும் உயர்வடைந்து வான்புகழ் ஓங்க வாழ்த்துவதோடு பூரண இறையருளும் கிடைக்க எல்லாம் வல்ல அம்பிகையின் பாதார விந்தங்களை வேண்டி வாழ்த்தி வணங்கி அமைகின்றேன்.

சிவதொண்டன், சிவஞானப்பிரியன்,
சைவசின்மயர், மிருசுவிலூர் இளஞ்சைவப் புலவர்,
கமலநாதன் கயிலைவாசன் B.A(Hons)
அபிவிருத்தி உத்தியோகத்தர்,
தொல்லியல் திணைக்களம்,
யாழ்ப்பாணம்,
இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sivagajan Press